T. 1353

# பல்லவர் சரித்திரம்

தென்னிந்திய வரலாற்றின் இடைப்பகுதி

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்

இயற்றியது

இரண்டாவது மூன்றாவது பாகங்கள்

(கி. பி. 600—900)

நான்காம் பதிப்பு

PRINTED AT
THE 'AURORA PRESS'
MADRAS

# பல்லவர் சரித்திரம்

# பல்லவர் சரித்திரம்

## (இரண்டாம் பாகம்)

## (கி. பி. 600 முதல் — 717 வரையில்)

## 1. மகேந்திரப் போத்தரையன்

## (கி. பி. 600—625)

கி. பி. 600 முதல் காஞ்சீபுரக் காவலரான பல்லவ அரசர் போத்தரையர் என்ற பட்டம் தரித்து வந்தனர். 'போத்து' என்னும் மொழி 'பல்லவ' என்பதற்கு மாறு மொழி யாகும்; 'ராஜா' என்பதற்கு 'அரையன்' என்பது மருவி வந்திருப்பது போலாகும். இந்த அரசருடைய பட்டப்பெயர் வடமொழியினின்று தமிழாய் மாறினதாலே, ல்லவ மன்னரும் தமிழருடனே கலந்து தமிழ ராயின ன்று அறியலாம். அன்றியும் இப்பொழுது முதல்தான் ராகிருதம், ஸம்ஸ்கிருதம் அன்றித் தமிழிலும் செப்புப் ட்டயங்களும், கல் வெட்டுகளும் எழுதத் தொடங்கினர். ல்லவர்' என்ற மொழியையும் தமிழிலக்கியங்களில் உபயோகப்படுத்தக் கவிகள் ஆரம்பித்தார்கள். தமிழ்க் காவி ங்களில் **சீவக சிந்தாமணி** யில்தான் 'பல்லவர்' என்ற மொழி முதல் முதலாகக் காணப்படுகிறது. பல்லவர்க்கு இக் கால முதல் 'காடவர்' என்றும், 'காடு வெட்டி' என்றும்

வேறு பெயர்கள் வந்தன. பல்லவ மன்னர் ஆட்சி பரவப் பரவ, காடுகளை வெட்டி, நாடுகளாய்ச் செய்ததால் இந்தப் பட்டங்கள் வந்தன போலும். இத்தகைய காடவரில் மிக்க உயர்நிலை பெற்றவன் நரஸிம்ஹ விஷ்ணுவர்மாவின் மகனான மகேந்திரப் போத்தரையன்.

இவன் ஆட்சி ஆரம்பித்தபோது பல்லவ வேந்தர் செல்வாக்கு கலிங்கம் வரையில் சென்றது. கலிங்க மென்றால் மகா நதிக்குத் தெற்கும், கோதாவரிக்கு வடக்கும் கடலோரமாயிருக்கும் நாடு. கோதாவரிக் கரையிலிருந்து சமுத்திரத்தைத் தழுவியுள்ள தெலுங்கு நாடும், தமிழகத்தில் தொண்டை மண்டலமும். சோழ விஷயமு (சோணாடு) ம், கொங்கு நாடும் மகேந்திரப் போத்தரையன் கீழிருந்தன. இவன் தகப்பனான நரஸிம்ஹவிஷ்ணு காலத்தில் பல்லவர் பலம் பல திக்குகளில் பரவியது. தகப்பனிறந்து மகேந்திரன் அரசனானவுடன் நடுநாட்டிலிருந்து அவனுக்குப் பெரிய பகைவனொருவன் தோன்றினான்.

இவன் பெயர் புளகேசி. சளுக்கிய குலத்தவன். இவனது தலைநகர்க்கு வடமொழியில் வாதாபி யென்றும், மகாராஷ்ட்ரத்தில் பாதாமி யென்றும், தமிழில் வாதாபி யென்றும் பெயர். இவ்வூர் இப்போது நிஜாம் இராஜ்யத்தி[ல்] இருக்கிறது. அழிந்துபோய்ச் சிற்றூராய்விட்டது. மகே[ந்] திரனது விரோதியான புளகேசியை இப்போது சரித்திர காரர்கள் இரண்டாம் புளகேசி என்கிறார்கள்.

புளகேசி சிம்மாசனம் ஏறினவுடனே, ஸ்ரீ ஹர்ஷ தேவனான கான்யகுப்ஜ மகாராஜா இமய மலை முதல் நருமதை வரைக்கும் மேற் சமுத்திரத்தினின்று கீழ் சமுத்திர மளவும் பரவியிருக்கும் ஆரியாவர்த்த மென்கி[ற]

இந்தியாவுக்குச் சக்ரவர்த்தியாய், நடு நாட்டையும் கைப்பற்றலா மென்று நினைத்து, நருமதைக் கரைக்குப் படை யெடுத்து வந்தான். நருமதைக் கரையில் நடந்த போரில் புளகேசியின் வீரர் வெற்றி பெற்றார்; ஸ்ரீ ஹர்ஷ சக்கரவர்த்தியும் வந்த வழியைப் பார்த்துத் திரும்பிப் போனான். புளகேசியும் இறுமாப்பு மிகுந்து திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டான். முதலில் (கி. பி. 610) விந்திய மலைக்கருகிலுள்ள தக்கண கோசல நாட்டை ஜயித்தான்; பின்பு கலிங்கத்தைக் கைப்பற்றினான். அங்கிருந்து தெற்கு நோக்கித் திரும்பிக் கோதாவரிக் கரையிலுள்ள பிட்டாபுர (வட மொழியில் பிஷ்டபுரம்) நகரைப் பிடித்துக்கொண்டான். கோதாவரியைத் தாண்டி, வேங்கி (இப்போது எலூர் என்னும் பட்டணத்துக்கு அருகில் உள்ளது) யென்னும் பல்லவர் நகரைப் பற்றி, தன் தம்பி குப்ஜ விஷ்ணுவர்த்தனனை அங்கே அரசனாக நியமித்தான். விஷ்ணுவர்த்தனன் பின்னோர் அப்போது தொடங்கி 400 வருஷங்கள் வேங்கியி லாண்டார். இவர் குலத்துக்குக் கீழ்ச் சளுக்கர் குலம் என்று இப்போது இந்திய சரித்திரத்தில் பெயரிடுவர்.

பின்பு கிருஷ்ணை நதியைத் தாண்டி, புளகேசி தென்னாட்டின் மேல் வந்தான். மகேந்திரன் அவனை எதிர்த்துத் தடுக்க முடியவில்லை. அதனால் ஒரு சளுக்கக் கல் வெட்டில் பின் வருமாறு சொல்லி யிருக்கிறது. "அழுக்கற்ற வெண் சாமரங்களையும், நூற்றுக் கணக்கான கொடிகளையும் குடைகளையும் பிடித்துக்கொண்டு புளகேசியினது அறுவகைப் படைகள் செல்லுங்கால் கிளம்பின தூளியானது எதிர்க்க வந்த பல்லவேந்திரன் ஒளியை மங்கச் செய்தது. பல்லவனும் காஞ்சீபுரத்து மதில்களுக்குள் போய் ஒளிந்து கொண்டான்" என்று இவ்வாறு கூறுவதனால் புளகேசியும் காஞ்சீபுர மதில்

களைக் கண்டு அஞ்சி அவ் வூரைச் சண்டை செய்து பிடி முயலவில்லை என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அன்றி யும் மேலே சொன்ன சளுக்கக் கல்வெட்டில் பின்பு "துள்ளி விழும் கயல் மீன்களைக் கண்களாய்க் கொண்ட காவிரி சளுக்கனது யானைகளின் மதநீர் விழுந்ததால் ஓடாமல் தடைபட்டு, கடல் செல்ல இயலாததாயிற்று. புளகேசியும் பல்லவப் பனியைப் போக்கடிக்கும் கடுங் கிரவணு சோழ சேர பாண்டியரைக் களிப்புறச் செய்தான்" என் றிருக்கிறது. இதனால் மகேந்திரன் புளகேசியுடன் போர் புரிய முடியாமல் காஞ்சிபுர மதிலில் ஒளிந்ததால் தமிழ் மூவேந்தர்க்கும் களிப்பு உண்டாயிற்றே யன்றி, புளகேசி தமிழ் நாட்டில் வெற்றி யொன்றும் அடைய வில்லை என்று பொருள் கொள்ள வேண்டும். புளகேசி வடக்கு முகமாய்த் திரும்பினவுடன் மகேந்திரன் தன் கோட்டையை விட்டுப் புறப்பட்டு, புல்லலூர் என்னும் கிராமத்தில் சளுக்கனைத் துரத்தி யடித்தான் என்று ஒரு பல்லவ சாசனத்தில் இருக் கிறது. இது முதல் மகேந்திரனுக்குப் போர் புரிய வேண் டிய அவசியமில்லாமல் சமாதானமாய் நாட்டை ஆண்டான்.

மகேந்திரன் காலத்தில் தென்னாட்டில் சமணர் மிகப் பரவி யிருந்தார்கள். அவர்களது செல்வாக்கும் மிகுந் திருந்தது. பல இடங்களில் பள்ளிகள் கட்டிக்கொண்டு தங்கள் தொழு முறைகளை நடத்தி வந்தனர். அவ்வாறு சம ணர் திரண் டிருந்த ஊர்களில் பாடலிபுத்திரம் (இக் காலத் தில் திருப்பாதிரிப்புலியூர் என்ற அதன் நாமமே எல்லோர்க் கும் தெரியும்) முக்கியமானது. அவ்வூரில் அக் காலத்தில் ஒரு வேளாளச் சிறுவன் சமணர் நெறியைப் பின்பற்றித் தருமசேனன் என்னும் பெயருடன் வாழ்ந்தான். பின்பு தன் அக்காள் திலகவதியம்மை புகட்டின நற்புத்தியால்

மருள் நீங்கி, சிவனருள்பெற்று, சிவபக்தி மிகுந்து, சிறந்த சிவனடியாராகி இனிய தேவாரங்களைப் பாடத் தொடங்கினார்; ஆகையால் அவர் திருநாவுக்காசர் என்ற பெயர் பெற்றார். இவரையே அப்பர் என்பர். சமணர்கள் அரசனிடத்தில் செல்வாக்கு மிகுந்திருந்தவர்க ளாதலால் திருநாவுக்கரசரைப் பலவிதமாகத் துன்புறுத்த ஆரம்பித்தனர். எத்தகைய துயரம் உற்றாலும் திருநாவுக்காசர் சிவபக்தியை விடாமல் இருந்ததால் இவரது உள்ள உறுதியைக் கண்டு காடவர் கோனும் மனம் மாறி அப்பரிடம் அன்பு பிறந்து, ஞானோபதேசம் பெற்றுச் சிவனடியா னாயினன். மேலும், வீடு பெற வழியறியாத சமணர் மொழி பொய்யென்றும், மெய்ம்மொழி யாதென்றும் உணர்ந்து, காடவன் திருவதிகை யென்னும் நகரில் முக்கண்ணனுக்காக, பாடலிபுரத்திலிருந்த சமணரது மண்ணால் கட்டிய பள்ளியொடு பாழிகளையும், இடித்துக்கொண்டு வந்து குணதரவீச்சுரம் என்ற கோயிலைக் கட்டினான் என்று **பெரிய புராணத்தில்** சொல்லி யிருக்கிறது.

திருவதிகையில் கட்டியது சுடுமண் (அதாவது செங்கல்) கோயில். கர்ப்பக் கிருகம் செங்கல்லாலும், பிற்காலத்தில் கட்டிய மண்டபங்களெல்லாம் கருங்கல்லாலும் அது அமைக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். மகேந்திரன் காலம் வரையில் கிருஷ்ணை நதிக்குத் தெற்கில் சுடு மண்ணாலும், மரத்தாலும் கோயில்கள் கட்டினார்களேயன்றி, கற்கோயில்கள் கிடையா. இவன்தான முதல் முதல் கற்கோயில்கள் [நி]ருமித்தவன். இவனும் குன்றைப் பாறையாய் வெட்டி[ப்] படுத்து, பாறைகளை ஒன்றுமேலொன்றாய் அடுக்கிக் கட்ட[ட]ங்கள் கட்டினவனல்ல. மலைகளை வெட்டி அதில் தூண்[க]ள், சுவர்களைத் தவிர மற்றைய இடங்களைக் குடைந்து,

கர்ப்பக்கிருகம், முன் மண்டபமுமாகச் செய்வித்தான். இக்கோயில்களைக் குகைக் கோயில்கள் என்றே சொல்ல வேண்டும். இவ்வகைக் குகைக் கோயில்கள் பல மகேந்திரன் செய்வித்தான். பெஜவாடாவுக்கு அடுத்த உண்ட வல்லியிலும் காஞ்சிபுரத்துக்கு அருகில் மாமண்டூர், மஹேந் திரவாடி, சிங்கவரத்திலும், நாமக்கல்லிலும் விஷ்ணு ஆலயங்களும், காஞ்சிபுரத்திலிருந்து கொஞ்ச தூரத்துக்குள் உள்ள சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம் முதலிய ஊர்களிலும் திருசிராப்பள்ளி மலைமேலும் சிவன் கோயில்களும், மண்டகப்பட்டில் திரிமூர்த்தி கோயிலும், புதுக்கோட்டை சீமையில் சிற்றன்னவாயில் மலைமேல் ஒரு சமணர் கோயிலும் மகேந்திரன் செய்வித்தவை. ஆகையால் மகேந்திரன் ஒரு மதத்தில் அதிகப்பற்றும் மற்றொன்றின் மேல் பகையும் கொண்டவன் அல்ல னென்று ஊகிக்கலாம். இவைகளுள் உண்டவல்லியி லுள்ள சேஷசாயி கோயில் வேலை முடியாமல் நடுவில் நின்று விட்டது. ஒரு வேளை கோயில் திருப்பணி நடந்துகொண்டிருக்கும் போதே புளகேசி படையெடுத்து வந்ததால் வேலை நின்று விட்டதுபோலும்.

மகேந்திரன் மலையைக் குடைந்து செய்வித்த கோயில்களைப் பார்த்த மாத்திரத்தில் எளிதில் சொல்லலாம். அவைகளைக் கண்டறிவதற்குத் தப்பாத குறிகள் சில உள. அக்குகைக் கோயில்களெல்லாம் மலைச் சாரல்களில் குடைந்து செய்தவை. மலை யுச்சியிலும் இரா; மலையடியிலும இரா; மலையினது அடிக்கும் நுனிக்கும் நடுமத்தியி லிருக்கும். கோயிலை மலையில் குடையும்போது, ஆங்காங்குத் தூண்களையும், சுவர்களையும், சில விடங்களில் விக்கிரகத்தையும் செய்வதற்காக விட்டு விட்டு, மிகுந்த இடத்தை மாத்திர

குடைந்திருக்கும். தூண்களுக்காக விட்ட பாகம், கீழும் மேலும் சதுரமாயும், நடுவில் மூலை செதுக்கியும் இருக்கும். தூணினது மொத்த உயரம் ஏழு முழமும், மேல் சதுரமும் கீழ்ச்சதுரமும், ஈரிரண்டு முழமும் இருக்கும். சதுரத்தில் தாமரைப் புஷ்பம் செதுக்கி யிருக்கும்; அன்றியும் தூண்களின் புறங்களில் மகேந்திரனது பட்டப் பெயர்கள்



மஹேந்திரவர்மன் தூண்கள் (பல்லாவரம்)

வெட்டியிருக்கும். தூணின் போதிகை சதுரப் பலகைக் கல்லாலானது. சுவர்களில் சித்திர வேலை செய்திருக்கும். அதனடுவில் கர்ப்பக்கிருகத்தின் துவாரத்தின் பக்கத்தில் துவாரபாலகர் விக்கிரகம் செதுக்கி யிருக்கும். இந்தத் துவாரபாலகர் தலைமேல் உயர்ந்த தலைப்பாகை உண்டு. மகேந்திரன் காலத்துத் தலைப்பாகைகள் இவ்வண்ணமே இருந்தன போலும். அன்றியும் துவாரபாலகர் வலது கை இடது

கை மேல் வைத்தும், இடது கை ஒரு பெருங் கதையைப் பிடித்தும், உடல் அதன் மேல் சாய்ந்தும், பார்க்கிறவர்களை அடிப்பவர் போல் தோற்றுவர். இவையன்றிச் சுவர்கள் மேல் புராணக் கதைகளைக் குறிக்கும் வெகு அழகிய சிலைகள் செதுக்கி யிருக்கும். விஷ்ணு கோயில்களில் மூல விக்கிரகமும் மலையின் பாறைகளில் மிக அழகாய்ச் செய்து அமைத்திருக்கும். இந்தக் குறிகளல்லாது மகேந்திரனது கோயில்களில் பலவற்றில் கல் வெட்டுக்கள் வடமொழியிலும் தமிழிலும் உண்டு.

மகேந்திரன் செய்வித்த கோயில்களில் மிக அழகியவை சிற்றன்னவாயில், சிராப்பள்ளி, நாமக்கல் என்ற மூன்று ஊர்களில் உள்ளவைகளே. சிற்றன்னவாயில் கோயிலுக்குள் ஐந்து சமண முனிவர் விக்கிரகங்கள் உண்டு. முனிவர் உட்கார்ந்திருக்கும் முறையும், அவர் உள்ளத்தின் அசையா நிலையை முகத்தில் விளக்கிக் காட்டும் சிற்ப வேலைத்திறமும், கண்ணால் பார்த்து அறிந்து ஆச்சரியப்பட வேண்டுமேயன்றி, வார்த்தையால் வர்ணித்துச் சொல்ல இயலாது. அன்றியும் கோயில் முன்மண்டபத்தில் நின்று அண்ணாந்து பார்த்தால், வனப்பு மிகுந்த அன்னங்கள், யானைகள், தாமரைப் பூக்கள், கொடிகள், பெண்ணுருவங்கள் முதலிய சித்திரங்களைக் கலந்து எழுதிய கோலம் ஒன்று தென்படும். கற்பாறை மேல் பல நிறங்களுடைய சாயங்களைக் கொண்டு ஓவியம் எழுதுவதே வியப்பைத் தரும் பணி. அச்சாயங்கள் 1,300-வருஷங்களாக அழியாமல், வாடாமல் இருக்குமாறு எப்படித்தான் எழுதினார்களோ, அந்த வழியை அறிய வழியில்லை. பழைய காலத்தில் இவ்வித அற்புதச் சித்திரம் பல்லவ அரசர் ஆதரணையால் எழுதப்பெற்றது என்பதைவிட, தென்னிந்தியர் மனதை மகிழச் செய்யும் செய்தி வேறுண்டோ?

சிராப்பள்ளிக் குன்றின் நடுவில் குடைந் தமைத்த சிவன் கோவிலும் அற்புதமான வேலையே. அதன் மேற்புறச் சுவரில் கற் பதுமைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. பதுமைகள் வெட்டி யிருக்கும் பாகம் ஏழடிச் சதுரம். நடு விக்கிரகம் மிகப் பெரியது; கங்காதரனை சிவனைக் கண்ணெதிரிற் கண்டாற்போல் காண்பிக்கும். அவ் விக்கிரகத்தின் முக ஒளியையும், நிற்கும் நிலையையும் பார்த்தால் உயிருடன் உள்ள உருவம்போல் தோன்றும். இவ்வுருவம் சிவனது சடையிலிருந்து விழுவது போலக் காட்டியுள்ள கங்கையை வலது கை ஒன்றில் ஏந்தியும், பூணூலாய்ப் போட்டுக் கொண்டிருக்கும் பாம்பின் தலையை மற்றோர் வலது கையால் பிடித்தும், இடது கை யொன்றில் உருத்திராட்சமாலையும், மற்றொரு கையை இடுப்பில் தாங்கியும் நிற்கும். சுவர்மேல் அமைத்திருக்கும் இச் சிவ விக்கிரகத்தின் வலது காலின்கீழ் முயலகனது சின்னஞ் சிறு விக்கிரகமுண்டு. சுற்றி நான்கு அடியார்கள் நமஸ்காரம் செய்வதாயும், மேலே இரு கந்தர்வர்களும் ஒரு சிறு மனிதனும் மிதக்குமாறும் செய்திருக்கிறது. அழகிய சித்திரவேலைகள் நிரம்பிய நம்முடைய நாட்டில் இதைவிட அதிக வேலைத் திறமான சிற்றுளி வேலை வேறு எங்கும் இல்லை.

நாமக்கல்லில் மலைக்கோயில்கள் இரண்டு உண்டு. அவைகளில் அரங்கநாதன் கோயில் மகேந்திரன் கட்டியதாகும். நரஸிம்ஹன் கோயில் கொஞ்சம் பிந்திய காலத்தில் கட்டப்பெற்றது. அரங்கநாதன் கோயில் மகேந்திரன் செய்த கோயில்களி லெல்லாவற்றிலும் மிக அழகியது. இங்கிருக்கும் பள்ளிகொண்ட திருமாலின் விக்கிரகத்தைவிட உயர்ந்த செதுக்குவேலை உலகில் எங்கும் இல்லை யென்று கூறலாம். குகைக் கோயிலும் அற்புதமாய்க் குடைந்தது. கோயில்

முன் மண்டபத்துக்கு வெளியில் மூங்கிலால் செய்த தாழ் வாரத்தைப் போல் மலையைக் குடைந்து காட்டி யிருக்கிறது. இக்காட்சியை நேரில் பார்த்தால்தான் புத்திக்குப் புலப்படுமேயன்றி வர்ணிக்க முடியாது. நாமக்கல் கோயிலை ஆதிரங்கம் என்பார். கோயில்களின் சுவர்கள் மீது கைடபன் கதை, நரஸிம்ஹாவதாரக் கதை, மத்ஸியாவதாரக் கதை முதலியன அழகிய சிலைகளால் காட்டப் பெற்றிருக்கின்றன.

மகேந்திரன் கல்வெட்டுக்கள் பல அகப்பட்டிருக்கின்றன. அவை வடமொழியிலும் தமிழிலும் உண்டு. அக்கல்வெட்டுக்கள் ஏழாம் நூற்றூண்டில் எல்லோரும் எழுதிய கிரந்த, தமிழ் எழுத்துக்களில் எழுதினவை. கல்வெட்டிலுள்ள செய்யுள் சொற் சுவை நிரம்பி யிருக்கும். மகேந்திரவாடி யென்னும் கிராமத்தில் ஒரு தடாகம் வெட்டுவித்து, பின் வரும் பொருள் தரும் கல்வெட்டு இபற்றிவித்தான்:—நல்லவரெல்லோரும் மிகப் புகழ்வதும், மக்கட்கு இன்பம் பயக்கும் அழகிய மகேநதிர விஷ்ணுக்கிருகம் என்னும் முராரியினது பெருங் கற்கோயிலை மகேந்திரனது பேரூரில் மகேந்திர தடாகத்தின் கரையில் பாறையைப் பிளந்து குணபரன் கட்டுவித்தான்.

சீயமங்கலம் என்ற ஊரிலும் வடமொழிக் கல்வெட்டுண்டு. அதன் பொருள்:—அவனி பாஜன பல்லவேச்வரம் என்னும் இக்கோயிலை லலிதாங்குர மன்னன் தன் மனதைப் பெட்டியாயும், நன்மையை அதற்குள் வைக்கும் நகையாகவுங் கொண்டு வெட்டுவித்தான்.

மகேந்திரன் கல்வெட்டுக்களில் பெரியது சிராப்பள்ளி குகைக் கோயிலில் செதுக்கி யிருக்கிறதே. இனிய ஸம்ஸ்கிருத சுலோகங்கள் கொண்டது. அவைகளில் முதலிரண்

டின் பொருள் :—'நதிப்பிரியனுன தேவன் நயனுபிராமமான நிரையும், தோட்டங்களெனும் மாலைகளையும், பிரிய குணங் களையும் உடைத்தான காவிரி நதியைக் கண்டு, அவள் மேல் காதல் கொள்வானென்று பர்வதராஜனது பெண் ஐய முற்று, பிறந்த வீட்டை விட்டுவிட்டு (சிராப்பள்ளி) மலை மேல் நின்றுகொண்டு, இந்நதி பல்லவனது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறுள். குணபர அரசன் லிங்கத்தைப் பூசை செய்வோன் (லிங்கி) ஆனதால், (லிங்கபூசைக்கு) எதிர் முறையில் (விபரீத பக்ஷத்தில்) இருந்து திரும்பி வந்த அவனது ஞானம் (இந்தக் கோயிலில் அவன் வைத் துப் பூசை செய்த) லிங்கத்தால் உலகமெல்லாம் பரவட்டும்'. இந்தச் சுலோகத்தில் குறித்துள்ள லிங்கம், லிங்கி, விப ரீத பக்ஷம், என்ற பதங்கள் தர்க்க சாஸ்திரத்தில் வேறு பொருள்களுள்ளவை யானதால் அது சிலேடையாகும். அன்றியும் எதிர் முறையிலிருந்து திரும்பினது என்பது, முன்னர் அப்பரைத துயர்வுறச் செய்து, பின்பு மகேந்திரன் சைவனுன கதையைக் குறிக்கும்.

தளவானூரில் உள்ள மகேந்திரனது தமிழ்க் கல் வெட்டு, இதுவரைக்கும் அகப்பட்டிருக்கும் தமிழ் எழுத் துக்கள் எல்லாவற்றிலும் மிகப் பழைய எழுத்துக்களைக் கொண்டது. அது பின்வருமாறு.—ஸ்ரீ தொண்டையர் தார் வேந்தின் நரேந்திரப் போத்தரையன் வெண் பேட்டின் தென்பால் மிக மகிழ்ந்து கண்டான் சரமிக்க வெஞ்சிலைபன் சத்துருமல்லேச் வராலயமென்றரனுக் கிடமாக வாங்கு. இவ்வூர் ப்ரம்ம மங்கலவன் செல்வன் சிவதாஸன் சொல்லி யது. இந்தக் கல்வெட்டில் பழைய கால எழுத்து முறைகள் சில கவனிக்கத் தக்கவை. 'வே' என்பதற்கு 'வெ', 'ரே' என்பதற்கு 'ரெ', 'போ' என்பதற்கு 'பொ', என்று முன் காலத்தில் எழுதினரென்று அறியலாம்.

வல்லத்துக் குகைக் கோயிலில் பின் வரும் கல்வெட்டுண்டு :

பகாப்பிடுகு லளிதாங்குரன் சத்துரு மல்லன் குணபரன்
மயெந்திரப் பொத்த ரெசரு அடியான்
வயந்தப்பிரி அரெசரு மகன் கந்த செனன்
செய்வித்த தெவகுலம்.

'மயெந்திரப் பொத்தரெசரு' என்றால் மகேந்திரப் போத்தரசர் என்பது; 'வயந்தப் பிரி அரெசரு' என்றால் 'வசந்தப் பிரிய அரசர்' என்பது; 'தெவகுலம்' என்றால் 'கோயில்'.

இந்தக்கல்வெட்டுக்களில் மகேந்திரனுக்குக் குணபரன் அவனிபாஜன பல்லவன், லலிதாங்குரன், நரேந்திரப்போத்தரையன் சத்துருமல்லன், பகாப்பிடுகு என்ற பட்டங்களைக் காண்கிறோம். பட்டங்கள் பல வைத்துக் கொள்வதில் இவ்வரசன் அவா மிகுந்தவனென்று தெரிய வருகிறது. மேலே உள்ளவை தவிர, நயபரன், மகேந்திரன், விக்கிரமன், கலகப் பிரியன், புருஷோத்தமன், நரவாகனன், உதாரசித்தன், பிரகிருதிப் பிரியன், அலுப்தகாமன், நிரபேக்ஷன், சத்திய சந்தன் என்னும் பட்டங்கள் இவன் பெற்றவைகளில் சில. இவைகளில் பகாப்பிடுகு என்றால் பகைவர் மேல் இடியைப் போல் விழுபவன் என்பது பொருள். இது தெலுங்கு மொழி. இதைத் தவிர வேறு தெலுங்குப் பட்டங்களும் வடமொழிப் பட்டங்களும் இவனுக்கு உண்டு. கோயில்கள் பற்பல கட்டுவித்ததால் 'சேத்தகாரி' என்றும், அவைகளில் சித்திரவேலை அநேகம் செய்வித்ததால் சித்திரக்காரப்புலி என்றும், நாடகம், பாட்டு முதலியவற்றில் மிக ஊக்கமும் அறிவும் உடையவனானதால் மத்த விலாசன், அநித்திய ராகன், விசித்திர சித்தன் என்

றும், இன்னும் பல பெயர்களும் பெற்றான். ஸங்கீர்ண ஜாதி என்று மற்றொரு பெயரிருந்தால் இவன் தகப்பன் பல்லவனும் தாய் தமிழ்ப் பெண்ணுமாய் இருந்திருக்கலா மென்று தோன்றுகிறது. பொருள் தெரியாத வேறு சில தெலுங்குப் பட்டங்கள் சிவி புண்டுண்டு, நில்விலோ நய்யம்பு, பஸரம்பு என உண்டு. இவை பண்டைய தெலுங்குபோலும்.

புதுக்கோட்டைக்கு அருலிருக்கும் குடுமியாமலையடிச் சார்விலும், திருமயம் குகைக் கோயில் குடைந்திருக்கும் மலையடிச் சார்விலும் மகேந்திரனது மற்றோர் கல்வெட்டுண்டு. அதில் ஏழு பழைய முறை இராகங்களில் பாட்டுகளின் ஸ்வரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. கல் வெட்டின் இறுதியில் ஸ்ரீ ருத்திராசாரியனுடைய சிஷ்யனான பரம மஹேச்வரன் (என்றால், உயர்ந்த சிவனடியான்) வெட்டுவித்தது என்று சொல்லி யிருக்கிறது. ருத்திராச்சாரியன் மகேந்திரனது சங்கீத ஆசாரியன் போலும். இதனால் மகேந்திரன் மற்றையகலைகளிலன்றி பாட்டிலும் பெரும் பயிற்சி உள்ளவனென்று தெரியவருகிறது. அன்றியும் 1300 வருஷத்துக்கு முன்னால் நம்முடைய நாட்டில் சங்கீதம் எவ்வாறுயர்ந்திருந்ததென்று நோக்க வியக்கத்தக்கதாகும்.

பாட்டில் மாத்திரமல்ல; நாடகம் இயற்றுவதிலும் மகேந்திரன் தேர்ந்தவன். இவன் எழுதின **மத்தவிலாசப்பிரஹஸநம்** என்றோர் நூல் சில நாட்களுக்கு முன் அகப்பட்டது; அதை அச்சிட்டிருக்கிறார்கள். இது நகைப்புண்டாக்கத் தக்க நாடகம். இந்த நாடகத்தைப் படித்தால் மகேந்திரன் காலத்தில் மக்களின் நடைகள், வழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்று அறிந்துகொள்ளலாம். மற்றைய நாடகங்களைப்போல் புராண கதைகளைப் பற்றி யல்லாமல் மக்களின் வாழ்க்கைமுறைகளைக் காட்டி எழுதியது. இன்னும்

எத்துணை நூல்கள் மகேந்திரன் இயற்றினுனே அறிய வழியில்லை. அவைகள் அகப்பட்டால் தான் உண்டு.

மகேந்திரப் போத்தரையனது பெருமை எத்தகையதோ? அக்காலத்தை ஆரியவர்த்தம் முழுவதையும் ஒரு குடையின்கீழ்க் கொணர்ந்த பராக்கிரமம் மிகுந்த ஸ்ரீ ஹர்ஷதேவ் சக்கரவர்த்தியை யுத்தத்தில் தோற்கடித்த புஜபலமுடைய புளகேசியைப் புல்லலூரில்ஜயித்து விரட்டியடித்த தோள்வலி யுள்ளவன். கிருஷ்ணை பெண்ணையாறு, கருடநதி, காவிரி முதலிய புனித நதிகள் பாயும் முண்டராஷ்டிரம், கம்மராஷ்டிரம், தொண்டைமண்டலம், சோழ விஷயம், கொங்குதேசம் இவையெல்லாம் ஆண்டவன். சமணர் செல்வாக் குயர்ந்திருந்ததால், ஒளிமங்கி, தாழ்நிலை அடைந்திருந்த சைவநெறியை உயர்நிலைக்குக் கொணர்ந்த உத்தமன். உலக மிருக்குமளவும் சைவர் படித்து, உள்ளம் உருகி, உய்வதற்கு உதவும் தமிழ்வேதமென்ற புகழைப் பெற்ற தேவாரங்கள் பாட ஆரம்பித்த காலத்தவன். ஆரிய மொழியினது உரைநடை, எழுத்துநடை என்ற இருவகைத் தான பிராகிருத, ஸம்ஸ்கிருதங்களில் அழகிய சுலோகங்களென்ன, இனிய நாடகங்களென்ன இவைகளை இயற்றினவன். தமிழர் வடமொழி பயின்று, அம்மொழியில் அரிய நூல்களை இயற்றுமாறு வழிகாட்டினவன். பாட்டில் நிபுணன். கற்சிற்பம் முதலில் தமிழகத்தில் பரவுமாறு செய்தவன். குளங்களை வெட்டி, காடுகளை யழித்து தம் மக்களுக்கு நன்மைபுரிந்த தருமராஜா.

## அக்காலத்து மறுமன்னர்

மகேந்திரப் போத்தரையன் காலத்தில் இந்திய நாடு முழுவதிலும் புதிய கிளர்ச்சி கிளம்பியிருந்தது. ஆரியாவர்த்தமென்கிற வட இந்தியாவில் ஸ்ரீ ஹர்ஷதேவன் சக்கர

வர்த்தியாய் ஆண்டா னென்று முன்னமே சொன்னோம். அவன் கவிகளை மிகப் பாராட்டினான். அவனும் மகா கவி. **இரத்னாவளி, பிரியதர்சிகா, நாகாநந்தம்** முதலிய இனிய வட மொழி நாடகங்களை இயற்றினான். அவன் சந்நிதியில் புகழ் பெற்ற கவியான பட்டபாணன், **ஹர்ஷ சரித்திரம், காதம்பரி** என்ற உயரிய நடையில் எழுதின கத்திய காவியங்களையும், **பார்வதி பரிணயம்** என்ற நாடகத்தையும் இயற்றினான். இவான்சுவங் என்ற சீனத்துப் பெயரையும், தருமத்திராதன் என்ற வட மொழிப் பெயரையும் பூண்ட சீன தேச யாத்திரைக்காரன் ஸ்ரீ ஹர்ஷதேவன் சந்நிதியில் பல கால மிருந்து பல வெகுமதிகள் பெற்றான். ஸ்ரீ ஹர்ஷ தேவனது முக்கிய பட்டணம் இப்போது கனௌஜ் என்கிற கானியகுப்ஜம். அவ்வூரில் புத்தன், சூரியன், சிவன் இம் மூவருக்கும் அழகிய கோயில்களைக் கட்டி ஸ்ரீ ஹர்ஷன் அழகிய உற்சவங்களை நடத்தினான்.

நடு இந்தியாவில் வாதாவி நகரத்தில் இரண்டாவது புளகேசி ஆண்டான். இவன் ஸ்ரீ ஹர்ஷனோடும் மகேந்திரனோடும் போராடினதைப் பற்றியும் முன்னமே சொல்லியிருக்கிறோம். இவன் விஷ்ணு பக்தன். சளுக்க நாட்டில் குகைக் கோயில்கள் கட்டினவன். இவனது மராட்டிய வீரர்கள் போரில் முன் வைத்த காலைப் பின்வாங்காமல் யுத்தஞ்செய்பவர். சளுக்க சேனாதிபதிகளில் எவனாவது சண்டையில் தோல்வி யடைந்தால் அவனுக்குப் புடவை கட்டி தெருவில் நடத்திவைப்பது வழக்கம். இந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல் அவ் வீரர்கள் தோற்றுப் போனால் உயிரை விட்டுவிடுவார். யுத்தஞ் செய்யும்போது சளுக்க வீரர் தாமும் சாராயத்தைக் குடித்தும், யானைகளுக்குச் சாராயத்தைப் புகட்டியும், அளவற்ற வீரத் தன்மையுடன் போர் புரிவர்.

கி. பி. 600-ம் வருஷத்துக்குச் சிலகாலம் முன்னுல் பாண்டிய இராஜ்யம் களப்பிரர் என்பவர் கையில் அகப்பட்டு பாண்டியர் நிலை கெட்டிருந்தது. இந்தக் களப்பிரர் எவர், இவர் தலைவர் எவர், எவ்வாறு மதுரையைக் கைக்கொண்டனர் என்று கண்டுபிடிக்க இதுவரையில் ஆதாரம் ஒன்றும் அகப்படவில்லை. மகேந்திரன் கச்சியில் ஆளுங்கால், களப்பிரரை மதுரையிலிருந்து பாண்டியர்கள் தொலைத்து மறுபடியும் அப்பாண்டியர்கள் ஆள ஆரம்பித்தார்கள். மதுரையில் பாண்டியர் ஆட்சியை மறுபடியும் நிலைநிறுத்தின மன்னனது பெயர் கடுங்கோன் பாண்டியன். பிற்காலத்தில் பிறந்த பாண்டிய சாசனமொன்றில், "புயல் வீசும் கடலிலிருந்து கதிரவன் கிளம்பிஞற்போல் கடுங்கோன் பாண்டியாதிராஜன் பூமிதேவியினது உரிமையைக் கைக்கொண்டு பிற மன்னரைத் தொலைத்து, அரசாட்சி நடத்திஞன்" என்று எழுதியிருக்கிறது. இதைத்தவிர இவனைப் பற்றி வேருென்றுந் தெரியவில்லை.

இக் காலத்தில் தென்னிந்தியாவில் கங்கைகுல மன்னவரும் பெரும் புகழ்பெற்று உயர்நிலை யடைந்தார். இக் கங்கை குலத்தார் தற்காலத்தில் தங்கம் வெட்டியெடுக்கும் இடமான கோலாற்றில் உதித்தவர். இவர் குலத்தின் ஒரு கிளையினர் கீழ்க்கரையில் வேங்கி என்னும் ஊரில் ஆண்ட கீழச்சளுக்கர் நாட்டுக்கு வடக்கும் கலிங்கத்துக்குத் தெற்குமான தேசத்தில் அரசாட்சி பெற்ருர். இம்மன்னவருக்குக் கீழ்க்கங்கைய அரசரென்று இந்திய சரித்திரத்தில் பெயரிட்டிருக்கிருர்கள் இவரது முக்கிய பட்டணம் விசாகப் பட்டணம் ஜில்லாவுக்கு வட எல்லையிலுள்ள ஸ்ரீகாகுளம் என்ற ஊர்; நாகாவளி நதிக்கரையில் உள்ளது. பழைய தமிழ்ச் செய்யுள்களில் கலிங்கம் என்ற பெயருடையதென்

றும், மிக மெல்லிய ஆடையென்றும் சொல்லியிருக்கிற துணி இந்த ஸ்ரீகாகுளத்தருகில்தான் நெய்தது ஆகும். நிகழ் காலத்திலும் இவ்விடத்தில் முற்கூறிய நெசவு கொஞ்சமுண்டு. கங்கையர் குலத்தின் மற்றோர் கிளையினர் காவிரிக்கரையில் (மைசூர் நாட்டில்) உள்ள தலைக்காடைத் தலைநகராய்க்கொண்டு ஆண்டனர். இவர்க்கு மேல்கங்கையர் என்று சரித்திரங்களில் பெயரிடுவர். இவர் கதம்பர் முதலிய சிற்றரசரை ஜயித்துக் கோவாபுரம் வரைக்கும் ஆண்டார். இக்குலத்தவன் இந்திரவர்மன் என்ற மகிமையுற்ற மன்னன். கி. பி. 580-இல் ஒரு புதிய காலக்கணக்கை ஏற்பாடு செய்தான். அந்த வருஷத்துக்கு இப்போது பசலி என்கிறோம். அறுப்புக் காலத்தில் பசலி என்பது ஆரம்பிக்கும்.

## சமய நிலை

கி. பி. ஆறாவது நூற்றாண்டில் (அதாவது 500 முதல் 599 வரையில்) விஷ்ணு பக்தியும் சிவபக்தியும் தமிழ்நாட்டில் மிகுந்து, வைஷ்ணவ நெறியும் சைவ நெறியும் பரவின. விஷ்ணு கோயில்களும், சிவாலயங்களும் பெருகின; ஆனால் அக்கோவில்கள் மரத்தாலும் செங்கல்லாலுமே கட்டப் பெற்றவைகள். அவைகளில் ஆகமங்களென்கிற வடமொழி நூல்களில் சொல்லியவாறு அந்தணர்கள் பூஜையை நடத்தி வந்தார்கள். ஆகமங்களில் சொல்லிய சிவதீக்ஷையையும், வைஷ்ணவ வழிபாடுகளையும் பல சாதியரும் பெற்று, ஞானம் உதயமாகிச் சிவ பக்தர்களும் வைஷ்ண பாகவதர்களும் நாட்டில் அதிகரித்தார்கள். நிகழ்காலத்தில் மக்கள் கொண்டாடும் சிவஸ்தலங்களும் வைஷ்ணவ ஸ்தலங்களும் அந்த ஆறாவது நூற்றாண்டிற்கு முன்பே தோன்றி மகிமையோடு விளங்கின; ஆனால் இப்போதிருக்கும் கற்கட்டி

டங்கள் அப்போதில்லை. கர்ப்பக்கிருகங்களும் விக்கிரகங்களும் இப்போது போலவே அப்போதும் இருந்தன.

### சைவம்

மகேந்திரப் போத்தரையன் ஆண்டபோதே அப்பரென்கிற திருநாவுக்கரசர் சிவஸ்தலங்களில் சிலவற்றைப் போய்ப்பார்த்து, அங்கிருக்கும் சிவமூர்த்திகளைத் துதித்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். அப்பர் சிவபக்தி மிகுந்து, ஏனைய பொருள்களை விட்டுவிட்டு சிவனைப்பற்றியே பாட ஆரம்பித்தார். இதுமுதல் வழிபடு கடவுளைத்தவிர மற்றைய பொருள்களைப்பாடுவது தமிழ்நாட்டில் தழைக்கவில்லை. இது முதல் மூன்று நூற்றாண்டுகள் வரையில் அகப்பொருள் இயற்கைப்பொருள், போர், அரசாது மகிமை முதலிய விஷயங்களைப் பற்றி செய்யுள் செய்வது இல்லாமற் போயிற்று. சிவனைப்பற்றி அப்பரும் அவருக்குப் பின் திருஞான சம்பந்த மூர்த்தியும், சுந்தரமூர்த்தியும் பாடின பாசுரங்களுக்குத் தேவாரம் என்று பெயர். இப்பாட்டுகள் அனேகமாய் பத்துப் பத்தாய் ஆன பதிகங்கள். இவைகளுள் சங்கச் செய்யுள் முறையாயல்லாது, ஆரிய மொழிகள், ஆரிய விருத்தங்கள், ஆரியக்கவி நடைகளும், புராணக்கதைகளும் மிகுந்திருக்கும்.

ஆகமங்களில் சொல்லப்படும் விஷயங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களென்றும். அதில் முதலிரண்டும் கரும மார்க்கம் நிறைந்தும் மற்றிரண்டும் ஞானமார்க்கம் நிறைந்தும் இருக்கும். ஞான நெறி மிகக் கஷ்டமானது. கோயில்களில் தொண்டு செய்து கடவுளை இடைவிடாது போற்றுவது சுலபம். ஆதலால் அப்பர் இறுமாப்பற்று எளிய தொண்டுகளைச் செய்ய

வேண்டுமென்பதையே வற்புறுத்திப் பாடினர். உதாரண மாக அவர் பாசுரங்கள் சிலவற்றை எழுதுவோம்.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினால் பத்திசெய்கேன் என்னை நீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தா உன்னாடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

வேதம் ஓதிலென் சாத்திரங் கேட்கிலென்,
நீதி நூல் பல நித்தல் பயிற்றிலென்
ஓதி அங்கம் ஓராறும் உணரிலென்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே.

சாத்திரம் பல பேசும் சுழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற் பேறரோ.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே
நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்

---

காண்பான் = காணும்பொருட்டு; அத்தா = தந்தையே; அடியனேன் = தொண்டனாகிய நான்; வந்தவாறே = வந்தவாறு, எ (வந்தது); நித்தல் = தினந்தோறும்; பயிற்றிலென் = போதித்தால் என்ன; அங்கம் = வேதாங்கங்கள் ஆறு; உள்குதல் = சிந்தித்தல்; சுழக்கர்காள் = வீணர்கள், வாதிடுவோர்; பாத்திரம் = உரிய பொருள், போற்றத் தகுந்த பொருள்; பணிதிரேல் = பணியா விட்டால், வணங்காவிட்டால்; மாத்திரை = கண்ணிமைக்கும் அளவு அல்லது கை நொடிக்கும் அளவு; மாற்பேறு = ஒரு சிவ ஸ்தலம் = திருமாற்பேறு; புலர்வதன்முன் = பொழுது விடியு

தலையாரக் கும்பிட்டு கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம் மாதியென்றும்
ஆரூரா என்று என்றே அலறாநில்லே.

பூக்கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக்கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றூரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.

அப்பர் காலத்தில் தமிழ் நாட்டில் வட மொழி வேரூன்றி யிருந்த தென்றும், ஆரியர்களுக்கும், தமிழர் களுக்கும் மாறுபாடு ஒன்று மில்லை யென்றும் இவ பாசுரங்களிலிருந் தறியலாம்.

---

முன் ; அலகிட்டு = விளக்குமாற்றால் கூட்டி, கோவிலில் இருக்குப் விளக்குமாறுக்கு திருவலகு என்று பெயர் ; மெழுக்குமிட்டு = பசுவின் சாணத்தால் மெழுகி ; புனைந்து = கட்டி, தொடுத்து அலைபுனல் = அலைகளை யுடைய கங்கை ; ஆதி = முதல்வன் ஆரூர் = திருவாரூர் இப்போது திருவாலூர் என்பர் ; பூ + கைக் கொண்டு = மலரைக் கையில் கொண்டு; நவில்கிலார் = சொல்லார் கள், நவில் (பகுதி) ; ஆக்கை = யாக்கையின் திரிபு = உடம்பு = சரீரம், இரை = உணவு ; அலமந்து = கலங்கி (அலமரு = பகுதி) கழிவர் = இறப்பர் ; காமுற்று = ஆசை கொண்டு ; அரற்று = வாய் விட்டுக் கதறல் ; புறக்கணிப்பார் = ஒதுக்கிவிடுவார், பொருளல்ல என்று கருதுவார் ; கீழ்க் கணக்கு = நுட்பமான கணக்கு.

மூரி முழங்கொலி நீராளுன் கண்டாய்
முத்தழல் போல்மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க்கு இன்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்
அண்ணுமலை உறையும் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக் காட்டுறையும் மணுளன் தானே.

பந்தணவு மெல்விரலாள் பாகன்றன்னைப்
பாடலோடு ஆடல் பயின்ருன் றன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலையானைக்
கோலமா நீல மிடற்ருன் றன்னைச்
செந்தமிழோடு ஆரியனைச் சீரியானைத்
திருமார்பில் புரிவெண்ணூற் றிகழப்பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறைமேய
வானடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

---

மூரி முழங்கொலி = மிகவும் முழங்குகின்ற, 'ஏரி நிறைந்தனைய செல்வன்' = 'ஊருணி நிறைந்தற்றே' என்ற குறளோடு ஒப்பிடத் தக்கது. ஆரியன் = வட மொழிக்குரியவன், தமிழன் = தமிழ் மொழிக் குரியவன், அண்ணுமலை = திருவண்ணுமலை, வாரி மதம் = கடல் போன்ற மிகுந்த மத ஜலம், களிறு = ஆண் யானை, மறைக்காடு = வேதாரண்ணியம், கிழக்குக் கடற் கரையி லுள்ளது. மணுளன் = நாயகன், வேதாரண்யத்தில் சுவாமி மண மகன் கோலத்துடன் எழுந்தருளியுள்ளார்.

அணவுதல் = தடவுதல், மெல் விரலாள் பாகன் = மெல்லிய விரல்களையுடைய பார்வதி கணவன், கொந்து + அணவு = மலர்க்

சிவபெருமானது திரு உருவத்தை எவ்வாறு பாடினு ரென்பதைக் காட்ட.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்,
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

அப்பர் தம் காலத்துக்கு முன்னிருந்த சமணப் புலவர்களைப்போல் அவரும் மனப் பண்புகளைப் பொருள்களாகப் பாவித்துக்கூறிப் பாசுரங்களைப் பாடியுள்ளார்.

மனமெனும் தோணி பற்றி மதி யெனும்
சோலை ஊன்றி,
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறி
கடலோடும்போது

---

கொத்துகள் நெருங்கிய, நறும் = வாசனையுள்ள, மிடறு = கழுத்து, நீலமிடற்றன் = நீலகண்டன், சீரியான் = கண்டம் சிறப்புடையோன், புரிவெண்ணூல் = திரிக்கப்பட்ட பூணூல், ஆவடுதண்டுறை = திருவாவடுதுறை, அரன் = பாவத்தைப் போக்குபவன், சிவன், உய்ந்தேன் = பிழைத்தேன்.

குனித்த புருவம் = வளைத்த புருவம், குமிண் சிரிப்பு = புன்னகை, பனித்த சடை = ஈரம் பொருந்திய சடை, வெண்ணீறு = வெண்மையான விபூதி, எடுத்த பொற்பாதம் = தூக்கிய திருவடி, மாநிலம் = பெரிய பூமி, செறிகடல் = அலைகள் நிறைந்த கடல், மதனெனும் பாறை = காமமாகிய பாறை, மறியும்போது = கலங்கும்போது, உனையுறும் = உன்னைச் சிந்திக்கும், உணர்வு = ஞானம், = அறிவு, ஒற்றியூர் = திருவொற்றியூர் சென்னைக்கருகில் உள்ளது, வித்தி = விதைத்து, பொறை = பொறுமை, தகவு = தகுதி.

மதனெனும் பாறை தாக்கி மறியும்போது
அறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றி யூருடைய கோவே.

மெய்யாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறை
யெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கொண்டு தகவெனும்
வேலிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவ கதி
விளையுமன்றே.

சிவபெருமானை வழிபட்டால் மனிதர் அச்ச மறப் பிழைக்கலாம் என்ற தீரமொழியை உறுத்துக் காட்டுவர்.

மண்பாதலம் புக்குமால் கடன்மூடி மற்றேழுலகும்
விண்பா றிசைகெட்டிரு சுடர்வீழினு மஞ்சனெஞ்சே
திண்பா னமக்கென்று கண்டோந் திருப்பாதிரிப்புலியூர்
கண்பாவு நெற்றிக்கட வுட்சுடரான் கழலிணையே.

சுண்ண வெண்சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கட் சூளாமணி
வண்ண வுரிவையுடையும் வளரும் பவள நிறமும் [யும்
அண்ணலரண் முரணேறு மகலம் வளாயவரவும்
திண்ணன் கெடிலப் புனலுமுடையா ரொருவர்தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை; யஞ்சவருவது மில்லை.

---

மால்கடல் = பெரிய கடல், விண்பால் + திசைகெட்டு, விண் = ஆகாயம், இருசுடர் = சூரிய சந்திரர், அஞ்சல் = பயப் படாதே, கண்பாவு நெற்றி = கண்பொருந்திய நெற்றி, கழலிணை = இரண்டு பாதங்கள், திருப்பாதிரிப்புலியூர் = பாதிரி விருக்ஷத்தை

கல் நெஞ்சு கரையுமாறு அப்பர் அனேக பாசுரங்கள் பாடியிருக்கிறார்.

பழியுடைய யாக்கைதனில் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுந்தெளிய நில்லேன்
அழிவுடைத்தாய வாழ்க்கை ஐவரால் அலைக்கப்பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர் வீரட்டனாரே.

செத்துச் செத்துப் பிறப்பதைத் தேவென்று
பக்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்தனென்று அரியொடு பிரமனும்
துத்தியஞ் செய்ய நின்ற நற்சோதியே.

நூறு கோடி பிரமர்க ணொங்கினா
ராறு கோடி நாராயண ரங்ஙனே
யேறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாத நல்லீச னொருவனே.

பக்தியைப் பெருக்குமாறு பாடுவோர் தாம் வழிபடு கடவுளை முதல் தெய்வமாய்ப் போற்றுவது கடனே. அன்றியும் ஏனைய தமிழ்ப் புலவர்களைப் போல நீர்வளம், நில

---

யுடையது, புலிவியாக்கிரபாதர் = அவரால் பூஜிக்கப்பெற்றது, சுண்ணம் = வெண்மை, சூளாமணி = சிரசில் அணிந்துகொள்ளும் மணி, உரிவை = புலி = அரண் = மதில், அரவு = பாம்பு, தமர் = உறவினர்.

யாக்கை = சரீரம், பாழுக்கே = வீணுக்கே, தெளியநில்லேன் = தெளியவில்லை, கழி = உப்பங்கழி, தேவென்று = தெய்வமென்று, அத்தன் = தந்தை, அரி = விஷ்ணு துத்தியம் = ஸ்தோத்திரம், நொங்கினார் = மாண்டார்கள், இந்திரர் = கங்கையின் மணலைப்போன்று எண்ணில்லாதவர்கள், ஈறு இலாத = முடிவிலாத, ஈசன் ஒருவன் = கடவுள் ஒருவனே.

வளங்களைக் கூறாது, பக்திக் குரியவற்றையே பன் முறை யும் வற்புறுத்திச் சொல்வர். ஆனாலும் ஆங்காங்கே வருண னைக்குரிய சிற்சில குறிப்புகளும் காணலாம். சிதம்பரப் பாசுர மொன்றில்

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாட
    நெருங்கி யெங்கும்
வாளையுடைப் புனல்வந்து
    எறிவாழ் வயல்தில்லை தன்னுள்
ஆளவுடைக் கழல் சிற்றம்பலத்தான்
    ஆடல் கண்டால்
பீளையுடைக் கண்களால் பின்னைப் பேய்த்
    தொண்டர் காண்பதென்னே.

## வைஷ்ணவம்

வைஷ்ணவ சமயமும் சைவ சமயத்தைப் போல் பக்தி மார்க்கத்தையே உயர்வாகக் கொண்ட நெறியாகக் கூறும். ஆனால் சைவர் சிவன் அருளால்தான் வீடுபெற இயலு மென்றும், வைஷ்ணவர் விஷ்ணுவின் கருணையினால் மாத்திரம்தான் மோக்ஷம் அடைய முடியும் என்றும் கூறுவர். முதலில் பக்தியதிகத்தால் சைவர், சிவன் விஷ்ணுவைவிட உயர்ந்தவரென்றும் வைஷ்ணவர், விஷ்ணு சிவனைவிட உயர்ந்தவரென்றும் போற்றினர். அப்போது சிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் ஒன்றற்கொன்று அருகிலேயே உண்டாயின; அன்றியும் அப்போது கட்டின சிவன் கோயில்களின் சுவர்மேல் விஷ்ணு விக்கிரகங்களும், விஷ்ணு கோயில்களின் சுவர்மேல் சிவ விக்கிரகங்களும்

---

கமுகு = பாக்கு மரம்; மாடம் மாளிகை; புனல் = நீர்; தில்லை = சிதம்பரம்; பீளையுடைய கண்கள் = அழுக்குடைய கண்கள்.

நிரூபிப்பது உண்டு. பிற்காலத்திலோ (கி. பி. 1000-க்குப் பின்) சைவர்க்கும் வைஷ்ணவர்க்கும் பகை மிகுந்து, இவ்வாறில்லாமல் போய்விட்டது.

விஷ்ணுவைத் தமிழ்ப் பாசுரங்களில் பாடினவர்களுக்கு ஆழ்வார்கள் என்று பட்டப் பெயர் உண்டு. இவரில் முதல்வர் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய இம்மூவர். இவர் தொண்டை மண்டலத்தவர் ; பொய்கை ஆழ்வார் கச்சித்திருப்பதியி லிருக்கும் திருவெஃகா வென்னும் திவ்ய ஸ்தலத்திலும், பூதத்தாழ்வார் கடல்மல்லை (மகாபலிபுரம்) என்னும் க்ஷேத்திரத்திலும், பேயாழ்வார் மைலாப்பூரிலும் அவதாரஞ் செய்தவர்கள். இவர் மூவரும் ஓரிரவில் (தென்) பெண்ணை யாற்றங்கரையிலுள்ள திருக்கோவலூரில் ஒரு இடைகழி* யில் சேர நேர்ந்தது. அப்போது ஒவ்வொருவரும் விஷ்ணுவைப்பற்றி ஒரு திருவந்தாதி பாடினர்.

இவர்கள் திருமாலைத் துதித்த முறையையும் இவர் செய்யுள் நடையையுங் காட்ட இவரது பாசுரங்கள் சிலவற்றை வரைவோம். பண்புகளைப் பொருள்களாய் வைத்துப் பாடு முறையில் பொய்கை யாழ்வார்,

> வையம் தகளியா வார்கடலே நெய்யாக
> வெய்யகதிரோன் விளக்காக — செய்ய
> சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
> இடராழி நீங்குகவே யென்று

பாடினர். பூதத்தாழ்வாரும் அவ்வகையாகவே,

---

* கொடுந்தமிழில் இதை ரேழி' என்பர்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச்சுடர், விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான். என்று பாடினார்.

விஷ்ணுவை வழிபடுதல் எவ்வாறென்றும் அது எப் பயனைப் பயக்குமென்பதும் இப்பாட்டுகளில் பொய்கை யாழ்வார் சொல்லியிருக்கிறார்.

தொழுது மலர் கொண்டு தூபம் கையேந்தி
எழுதும் எழுவாழி நெஞ்சே — பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன்றில்லை யடை.

நாடிலும் நின்னடியே நாடுவன் நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன் — சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவதற்கு
என்னாகில் என்னே எனக்கு.

நாவாயிலுண்டே நமோ நாரணா வென்று
ஓவாதுரைக்கும் உரையுண்டே — மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும்திறம்.

திருநாவுக்கரசர் நடையைப் போலவே பொய்கையாழ் வார் திருவாக்கும், எளிதாயும் உள்ளத்தை உருக்குவதாயும்

---

தகளி = விளக்கு எரிக்கும் அகல், வார் = நீண்ட, கதிரோன் = சூரியன், சுட ராழியான் = பிரகாசம் பொருந்திய சக்கரத்தை யுடையவன், ஆர்வம் = அன்பு, தூபம் = நல்ல வாசனையுள்ள புகை, வாழி = வாழ்வாயாக, பழுதின்றி = குற்றமின்றி, மால் = விஷ்ணு, சூடினும் = தரித்துக்கொண்டாலும், ஆழி = சக்கரம், திறம் = சிறப்பு.

இருக்குமென்பதைக் கவனிக்கவேண்டும். இவர் நான்கு கோயில்களை முக்கியமாய்ச் சொல்லியிருக்கிறார்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகரும் நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்.

பூதத்தாழ்வார் பக்தியின் பெருமையை,

அரியது எளிதாகும் ஆற்றலால் மாற்றி
பெருக முயல்வாரைப் பெற்றால்—கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்றி முடித்தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து.

என்று பாடினார். கனவிலுங்கூடத் திருமாலைத் திருவுள்ளத்தில் வைத்திருந்ததாகப் பின்வரும் பாசுரங்கள் சொல்லும்.

கண்டேன் திருமேனி யான்கனவில் ஆங்கவன்கைக்
கண்டேன் கனவிலுஞ் சுடராழி—கண்டேன்
உறுநோய் வினையிரண்டும் ஓட்டுவித்துப் பின்னும்
மறுநோய் பெறுவான் வலி.

பகல்கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில்
மிகக்கண்டேன் மீண்டு அவனை மெய்யே—மிகக்கண்டேன்
ஊன்திகழும் நேமி ஒளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு.

---

வெஃகா = கச்சியிலுள்ள ஒரு ஸ்தலம், கோவல் = கோவலூர், இடர் = துன்பம், கோடு = கொம்பு, கோட்டு மாமலரால் தாழ்ந்து = கொம்பினுள்ள மாமலரைக் கொண்டு வணங்கி, கனலும் = பிரகாசிக்கும், சுடர் ஆழி = சுடர் பொருந்திய பிரகாசம், ஊன்திகழும் நேமி = மாமிசம் தங்கிய சக்கரம், தாரகை = நட்சத்திரம், இறை = கடவுள், எழில்கொண்ட-அழகு வாய்ந்த, கார்வானம்-கரிய மேகம்.

பேயாழ்வார் திருமலையை வெகு அழகாக வர்ணிக்கிறார்.

தானே தனக்குமவன் தன்னுருவே எவ்வுருவம்
தானே தவஉருவந் தாரகையும் — தானே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்
திருசுடரு மாய விறை.

எழில்கொண்டு மின்னுங்கொடி யெடுத்து வேகத்
தொழில் கொண்டு தான் முழங்கித்தோன்றும் — எழில்
நீர்மேகம் அன்ன நெடுமால் நிறம்போல [கொண்ட
கார்வானங் காட்டுங் கலந்து.

திருவல்லிக்கேணிக் கடவுளைப் போற்றும் பாசுரம் மிக அழகியது.

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்திவிளக்கு மணி விளக்காம் — எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக்கேணியான் சென்று.

திருவேங்கட முடையானது உருவு சிவன், விஷ்ணு இவ்விருவர் உருவமும் கலந்திசைந்திருந்ததாகப் பின் வரும் பாசுரத்தில் சொல்கிறார். இவ்வொன்றினாலே இக்கோயில் மிகப் பழைய கோயிலென் றறியலாம்.

தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந்தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவம் ஒன்றாயிசைந்து.

---

திரைகள் = அலைகள், வல்லி = கொடி, ஒன்றிய = பொருந்திய, திருவல்லிக்கேணி சென்னைக்கருகிலுள்ள ஒரு வைணவத் திருப்பதி, ஒள்மழுவு = பிரகாசமுடைய மழு வாயுதம், மழு = நெருப்பு, அரவு = பாம்பு, திருமலை = இதற்குத் திருவேங்கட மென்றும் திருப்பதி யென்றும் பெயர்.

இம்மூன்று ஆழ்வார் பாடல்கள் சிறியவர்க்கும் தெரியுமாறும் பெரியவர்க்கும் மனமுருகுமாறும் உள்ளவை. ஆகையால் இப்பாசுரங்களைக் கேட்டவர் விஷ்ணு பக்தரானார்; வைஷ்ணவமும் விரைவாய் தென்னாட்டில் பரவிற்று. பூதத்தாழ்வார் பாடியபடி மக்கள்,

வரைச்சந் தனக்குழம்பும் வான்கலனும் பட்டும்
விரைப்பொலிந்த வெண்மல்லிகையும் — நிறைத்துக்
ஆதிக்கன் நின்ற அறிவனடியிணையே கொண்டு
ஓதிப் பணியத் தலைப்பட்டார்கள்.

## 2. நரசிங்கப் போத்தரையன்

(கி. பி. 625—650.)

### போர்கள்

மகேந்திரப் போத்தரையன் காலஞ்சென்ற பின்பு அவன் மகன் நரசிங்கப்போத் தரையன் பட்டாபிஷேகம் பெற்றான். உடனே தன் தந்தையுடன் போராடின புளகேசியினது இறுமாப்பை அழிக்கவேண்டுமென்று கருதி அவன் நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றான். பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய சிற்றூர்களில்* போராடி வெற்றியுற்றான் பின்பு வாதாவி நகரத்தையும் கைப்பற்றி அவ்வூரை நாசஞ்செய்தான். அழித்து அவ்வூரில் ஜய ஸ்தம்பத்தை நாட்டி, அதன்மேல் தன் வீரச்செயல்க

வரை = மலை, கலன் = ஆபரணம். விரை = வாசனை, பணிய = வணங்க.

* இவ்வூர்கள் இப்போது இருக்கின்றனவா என்றும் எங்கே இருக்கின்றன என்றும் தெரியாது.

ளைக் குறிப்பிட்டு ஒரு கல்வெட்டு வெட்டுவித்தான். அக் கல்வெட்டு இப்போது அழிந்துபோய்விட்டது. ஆனாலும் அதன்மேல் நரசிங்கன் பட்டப் பெயரான 'மகாமல்ல(ன்)' என்பதும் 'க்ஷிதிபுஜாம் அக்ரேஸர: பல்லவ' (அரசரில் முதல்வனான பல்லவன்) என்பதும் 'ஸ்தம்பம்ஜப' என்பதும் '(நரஸி)ம்ஹவிஷ்ணு' என்பதும் இப்போதும் காணலாம். இது நடந்தது கி. பி. 642-ல்இல். நரசிங்கப்போத்தரையனது மகனுக்கு மகனான பரமேச்வரப்போத்தரையன் அளித்த சாசனம் ஒன்று கூரம் என்னும் ஊரில் கிடைத்திருக்கிறது. அதில் நரசிங்கனைப்பற்றிப் பின்வருமாறு புகழ்ந்து கூறியிருக்கிறது:—"கீழ் மலையிலிருந்து சூரிய சந்திரர் உதித்தாற்போல் இப் பல்லவ குலத்து அரச பரம்பரையில் வந்தவன், தலைவணங்கா மன்னரது தலைமேலிருக்கும் சூடாமணி, தன்னை எதிர்த்த யானைக்கூட்டத்துக்குச் சிங்கம்போன்றவன், நரசிங்கப்பெருமானே அவதரித்ததுபோல் தோன்றுபவன், சோழ, கேரள, களப்பிர, பாண்டியர்களை அடிக்கடி முறியடித்தவன், (கார்த்தவீர்யனென்னும்) ஆயிரங்கையனைப்போலப் பலநூறு போர்கள் புரிந்தவன், பரியள, மணிமங்கல, சூரமார யத்தங்களில் புளகேசியானவன் தோல்வியுற்று ஓடும்போது விஜய என்னும் மொழியை அவன் முதுகு ஆகிய பட்டயத்தின்மேல் எழுதினவன்."

இந்தப் பெரும்போரில் நரசிங்கனுக்குப் படைத்தலைவனாயிருந்து நடத்தினவர் பரஞ்சோதி என்பவர். இது பெரியபுராணத்திலுள்ள சிறுத்தொண்டநாயனார் வரலாற்றின் 6-வது பாசுரத்தால் தெரியவரும்.

மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்தும்

மண்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகல்அரசன் முன்கொணர்ந்தார்.

இதுவுமன்றி நரசிங்கப்போத்தரையன் மற்றோர் போர் நிகழ்த்தினான். இதைப்பற்றி மகாவம்சம் என்னும் பாலி பாஷையில் எழுதியிருக்கும் இலங்கைச் சரித்திரத்தில் விவரமாய் எழுதியிருக்கிறது. என்னவெனில்:—

இலங்கை அரசன் ஹட்டதத்தன் என்பான் அத்தீவினது இளவரசனான மானவம்மனைத் துரத்திவிட்டான். அவன் நரசிங்கனது சன்னிதியில் அடைக்கலம் புகுந்து, இப் பல்லவ அரசன் சளுக்கவல்லவன் புளகேசியுடன் போட்ட சண்டையில் நரசிங்கன் பக்கத்தில் நின்று போர் புரிந்தான். நரசிங்கன் நன்றியறிவும், சிநேகமும் பாராட்டி மானவம்மனுக்கு மாப்படை, மக்கட்படை, மரக்கலப்படைகளை அளித்து, இலங்கைக்கு அனுப்பினான். இப்படைகள் இலங்கையில் இறங்கினவுடன் அந்நாட்டில் ஒரு பகுதியை மானவம்மன் கைப்பற்றினான். ஆனால் உடனே ஹட்டதத்தன் மானவம்மனை முறியடித்துத் துரத்திவிட்டான். மானவம்மன் கச்சிமாநகருக்குத் திரும்பிவர, நரசிங்கனது உள்ளத்தில் பின்வருமாறு நினைப்பு உண்டாயிற்று:— 'புகழ் பெற விரும்பும் எந்தோழன் எம் முன்னிலையில் பலகால

---

தண்டு = சேனை, வடபுலம் = வடநாடு, துகளாக = தூளாக, நெடுங்கைவரை = நீண்ட கையையுடைய மலையொத்த யானை, குவை = குவியல், பகட்டினம் = எருமைக்கூட்டம், பரி = குதிரை, கவர்ந்து = கைக்கொண்டு, இகல்அரசன் = வெற்றியையுடைய அரசன்.

யிருந்தும் தனக்கு உரிய நாட்டைக் கைப்பற்ற இயல வில்லை. அவனுக்கு மூப்போ முதிர்ந்துகொண்டு வருகிறது. அவன் இத்துணைத் துன்பத்தைப் படும்போது நான் எவ் வாறு இன்பத்தை அனுபவிப்பது? இப்போதேனும் அவன் தன்னாட்சியை அடையுமாறு என் படையெல்லாம் கொடு த்து உதவவேண்டும். இல்லாவிடின் நான் உயிர்த்திருப் பது உவப்பைப் பயக்காது. இவ்வகை ஆலோசனையால் தன் படைகளை ஒன்றுகூட்டி, மானவம்மனிடம் ஒப்பு வித்து, தானும் துறைமுகம் சென்றான். பின்பு தன் போர் வீர ரனைவரையும் மானவம்மனுடன் கப்பலேறிக் கடலைக் கடந்து செல்லச் செலவிட்டான். ஆயினும் தான் கூடப் போகாவிடின் போர்வீரர்க்குக் கப்பலேறச் சம்மத மிரா தென்று ஐயமுற்று, மானவம்மனிடம் தன் ஆபரணங்களை யும், காவலாள்களையும், தனக்குரிய குடை, சாமரம் முத லிய அரச அணிகளையும் கொடுத்து, அவனை ஒருவர்க்குந் தெரியாமல் கப்பலேறச் சொல்லி, கப்பல் மேல் தட்டி லிருந்து கொட்டை என்று பெயருள்ள அரச பேரிகையை அடிக்கக் கட்டளையிட்டான். முரசொலி கேட்கவே, அர சன் கப்பலேறிவிட்டான் என்று நினைத்து, வீரரெல் லோரும் பரபரப்பாய்க் கப்பலேறினார்கள். உடனே கப்பல் கள் புறப்பட்டன. அக்கப்பல்கள் கடல்மீது மிதக்கும் பேரூர்போலப் பொலிந்தன. மானவம்மனும் இலங்கை போய்ச் சேர்ந்து வெற்றி பெற்று அரசாட்சியைக் கைக் கொண்டான். இச் செய்திகளைக் குறித்து ஒரு பல்லவ சாசனத்தில் நரசிங்கனை இராமனைவிட உயர்வலி யுற்றவன் என்று புகழ்ந்திருக்கிறது.

நரசிங்கன் தன் தந்தையை விட அதிகமாய்க் கணக் கற்ற பட்டங்களைத் தரித்தான். அவைகளை அவன் செய்

வித்த கோயில்களிலுள்ள கல் வெட்டுகளில் பார்க்கலாம். அப் பட்டங்களில் சிலவாவன :— மகாமல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், அத்தியந்தாகமன், அமேயமாயன், நயகாங்குரன் ஸ்ரீநிதி, இரணஜயன். போர்த்திறத்திலும், கோயில்கள் நிருமிப்பதிலும் தகப்பனில் தாழ்ந்தவனல்லன். நருமதை நதியின் தீரம் முதல் இலங்கை வரையில் இவனது மகிமை நான்கு திசைகளிலும் பரவி யிருந்தது.

## நாட்டு நிலை

நரசிங்கப் போத்தரையன் கச்சிமா நகரில் அரசாட்சி புரியுங்கால் சீனதேசத்தி லிருந்து இவான் சுவங் (தருமத் திராதன்) என்ற சீனதேசத்தவன் இந்திய நாட்டிலுள்ள பௌத்த க்ஷேத்திரங்களில் ஸ்வாமிதர்சனம் செய்வதற் கும், ஸம்ஸ்கிருத கிரந்தங்களைச் சம்பாதிப்பதற்குமாக யாத் திரை செய்து வந்தான். இவன் காஞ்சீபுர க்ஷேத்திரத்தை யும் வந்து பார்த்தான். பின்பு சீனபாஷையில் இந்தியா நாட்டை வர்ணித்து எழுதினான். அந்நூலில் தொண்டை மண்டலத்திற்கு த—லோ—பி—து என்று பெயரிட்டிருக் கிறான். 'திராவிட' என்னும் மொழி சீனபாஷையில் தலோ பிது என்று திரிந்து வரும். ஏனெனில் சீனத்தில் 'ர' 'ட' என்னும் எழுத்துக்கள் கிடையாது. திராவிட மென்பது அக்காலத்தில் தமிழ் என்பதின் வடமொழிப் பெயர். தமிழ் என்னும் மொழி வட இந்தியரால் உச்சரிக்க முடியா மல் திராவிடம் என்று மருவி வந்தது. அவர் ஆரியமுறை கள் நிரம்பி, ஆரிய மொழி அதிகமாய்ப் பயின்ற நாடான தொண்டைமண்டலத்தைத் திராவிடமென்று பெயரிட் டழைத்தார். அவரிட மிருந்து இவான் சுவங் இப்பெயரைக் கற்று தலோ பிது என்று தொண்டைமண்டலத்துக்குப்

பெயரிட்டான். இந்த நாடு செழிப்பாய், செல்வ மிகுந்தி ருந்ததென்றும், இதில் பலவகைப் பழங்களும் மலர்களும் மணிகளும் அதிகமாய்க் கிடைக்குமென்றும் இச்சீன யாத்திரைக்காரன் எழுதியிருக்கிறான். அன்றியும் திராவிட தேசத்தில் மக்கள் மனத்திடமுள்ளவர்கள். அவர்களிடம் பொய்யும் நம்பிக்கைத் துரோகமும் எள்ளளவும் இல்லை. அவர்கள் பிறர் நலத்தையே நாடுவர், கற்றவர்களைப் போற்றுவர் என்றும், அந்நாட்டில் நூறு பௌத்த மடங்களும் அவைகளில் பதினாயிரம் துறவிகளும், விஷ்ணு, சிவன் முதலிய தேவர்கள் ஆலயங்களும், சமணர்களின் ஒரு வகுப்பான நிர்கிரந்த முனிவர்கள் கோயில்களும் பலவுண்டு என்றும் சொல்லியிருக்கிறான்.

அக்காலத்திலிருந்த மற்றோர் சீனத்தான், காஞ்சிபுரம் இந்தியாவின் தென்புறக் கடற்கரையில் சிம்மளத்தை (இலங்கையை) நோக்கி யிருக்கிறது. அதிலிருந்து கப்பல் மூன்று நாளில் சிம்மளம் போய்ச்சேரும் என்று ஒரு புஸ்தகத்தில் சொல்லி யிருக்கிறான். இதனால் நாம் அறியவேண்டியதென்ன வென்றால் கச்சி நகரம் அப்போது 30 மைலுக்குக் குறையாமல் பரந்து கடற்கரை வரையில் பெருகியிருந்தது. கடற்கரையிலுள்ள துறைமுகத்துக்குக் கடல்மல்லை யென்று பெயர். அவ்வூர் பெரிய நகரமாய் நரசிங்கன் காலத்தில் ஆயிற்று. அதற்கு மாமல்லன் என்னும் தன் பட்டப் பெயரை அளித்ததால் மாமல்லபுரம் என்ற பெயர் உண்டாயிற்று. இந்தப் பெயர் பிற்காலத்தில் மகாபலிபுரம் என்று மருவியது. பல்லவர் ஆட்சி அழிந்த பிற்பாடு மகாபலியின் குலத்தவரென்று சொல்லிக்கொண்டிருந்த பெரும்பாணர் என்னும் சிற்றரசர் இவ்வூரில் ஆண்டு வந்ததால் மாமல்லபுரம் என்பது மகாபலிபுரம் என்றாயிற்று என்று

தோன்றுகிறது. இம் மல்லை யென்ற ஊர் இப்போது கொஞ்சம் கடல் கொண்டும், மற்றையது மணல் மேடிட்டும் பாழாய்ப் போயிருக்கிறது. அக்காலத்திலோ இந்த "கச்சிக் கிடந்தவனூர்க் கடன்மல்லை" என்றும், "புலன் கொள் நிதிக் குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும் நலங்கொள் நவ மணிக்குவையும் சுமந்து எங்கும் நான்று ஒசிந்து கலங்கள் இயங்கும் மல்லைக் கடன் மல்லை"* என்றும் பிரபந்தம் பாடின திருமங்கையாழ்வார் பாடுமாறு பொலிந்திருந்தது. நிதிக் குவைகளும் யானைக் கூட்டங்களும் நவமணிக்குவைகளும் ஏற்றுமதியானால் நரசிங்கப் போத்தரையன் காலத்தில் புற நாட்டு வணிகம் எவ்வளவு வளர்ந்திருந்ததென்று தெரிய வரும். இந்தியாவிலிருந்து சிம்மளத்திற்கும் சீனத்திற்கும் பொருள்களைக் கப்பலேற்றிக் கொண்டுபோய் விற்றார்கள்.

## இருவகைக் கோயில்கள்

நரசிங்கப் போத்தரையன் தகப்பனைப்போல் கோயில்கள் நிருமிப்பதில் மிக்க அவாக்கொண்டவன். இவன் முதலில் செய்வித்த கோயில்கள் மகேந்திரன் செய்வித்தவை போன்ற குகைக்கோயில்களே. ஆனால் நரசிங்கனது குகைக் கோயில்களில் சித்திரவேலை அதிகமாயிருக்கும். குகைக் கோயிலின்முன் மண்டபச் சுவர்களில் வெகு அழகிய விக்கிரகங்களும் வரிசையாய் அன்னங்களும், சிறுமணிக் கோவைகளும் வெட்டுவித்திருக்கும். அன்றியும் மகேந்

---

* இதன் பொருள்:—

நிதிக்குவை = செல்வக்குவியல், புழைக்கைம்மாகளிறு = துதிக்கையையுடைய யானை, நவமணிக்குவை = ஒன்பது வகை யான மணிக்குவியல், நான்று ஒசிந்து = அசைந்து, கலங்கள் = மரக் கலங்கள், கப்பல்கள்.

திரன் கோயில்களின் தூண்கள் சதுரமாயும் கனமாயும் இருக்க, நரசிங்கன் கோயில்களின் தூண்களின் போதிகை கள் உருண்டு, காடிகள் வெட்டியிருக்கும். போதிகைக்குக் கீழிலும், தூணின் மேல் புறம் உருண்டும், பூச் செதுக்கி யும், இலேசாயுமிருக்கும். தூண்களின் அடியில் 2 முழ உயர



நரசிம்மன் தூண்கள் (மகாபலிபுரம்)

மும் 2 முழ அகலமுமாய், திறந்த வாயுடன் உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்கங்கள் அதைத் தலைமேல் தாங்கிக் கொண்டிருக்கும். இவன் நரசிங்கனுகையால் சிங்கத் தூண் களே இவன் செய்வித்த கட்டிடங்களுக்கு அடையாளமாக அமைத்தான்.

இவ்வித சிங்கத் தூண்களுள்ள குகைக் கோயில்கள் மூன்று மகாபலிபுரத்தில் இன்னமும் பார்க்கலாம். அவை

கோயில்களென்று தெரியாமல் இக்காலத்தினர் அவை கட்கு மஹிஷாஸுர மண்டபம், வராஹ மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவை மண்டபங்களல்ல; கோயில்களே. ஒவ்வொன்றிலும் மண்டபத்துக்குப் பின்னுள்ள சிற்றறையில் சிவலிங்கம் முன்பு இருந்தது. மஹிஷாஸுர மண்டபம் என்பதின் சுவரில் உயர்ந்த கிரீடம் பூண்ட சிவ விக்கிரகம் இருக்கிறது. அதன் பக்கத்தில் குழந்தை கார்த்திகேயனை மடியில் வைத்துக்கொண்டிருக்கும் பார்வதி விக்கிரகம் உளது. பின்னால் விஷ்ணு, பிரம்மா விக்கிரகங்களும் முன்னால் நந்தியும் செதுக்கி யிருக்கின்றன. பக்கச் சுவரில் மஹிஷாஸுர வதையைக் காட்டிக் கல்லில் சிற்பம் வெட்டி யிருக்கிறது. பிற்காலத்தவர் இதைக் கண்டே இந்தக் கோயிலை மஹிஷாஸுர மண்டபம் என்றனர். இவ்வாறே வராஹ மண்டபச் சுவரில் வராஹாவதாரக் கதையும், வாமனாவதாரக் கதையும், திரிமூர்த்தி மண்டபச் சுவரில் திரிமூர்த்தி விக்கிரகமும் உள. எனினும் இவை வெறும் மண்டபங்களல்ல; ஒவ்வொரு மண்டபத்துக்குப் பின் கர்ப்பக் கிருகமும் அதில் சிவலிங்கம் இருந்த சுவடும் காணலாம்.

நாமக்கல் மலையடியில் உள்ள நரஸிம்ஹஸ்வாமி குகைக் கோயில் நரசிங்கப் போத்தரையன் காலத்ததுபோலும். அதனது சுவரில் புராணக் கதைகள் சிற்பத்தால் காட்டி யிருக்கும். இவையன்றித் தஞ்சைமாநகரில் வெண்ணாற்றங் கரையிலுள்ள கோயில்களிலும் திரிசிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், கொடுமுடி முதலிய இடங்களிலும் நரசிங்கனது சிங்கத்தூண்கள் உடைந்து போனவை சிதறி இருக்கின்றன. இவன் காலக் குகைக் கோயில்களின் சிதைந்து போன தூண்கள் போலும் இச் சிதறுண்ட தூண்கள். இவை

யன்றி, கோயிலில்லாமல் பெரும் பாறைகள்மீது புராணக் கதைகளை மட்டும் காட்டும் பெரிய சிற்பங்கள் நரசிங்கன் காலத்தியவை மகாபலிபுரத்தில் உண்டு. ஒரு பாறைமேல் கிருஷ்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிரஜைகளைக் காப்பாற்றிய கதை முழுவதையும் காட்டியிருக்கிறது. இரண்டாவது பாறைமேல் இருக்கிற சிற்பம் எக்கதையைக் குறித்ததோ என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. சிலர் அர்ஜுனன் தவம்புரிந்த கதையென்றும், வேறு சிலர் பகீரதன் கதை யென்றும், இன்னும் சிலர் தேவர் பூஜை செய்யும் தீர்த்தத்தைக் காட்டுவதென்றும் சொல்கிறார்கள்.

அன்றியும், திரிசிராப்பள்ளி மலையின் அடியில் தென் மேற்கு மூலையில் ஒரு குகைக் கோயில் உண்டு. அதன் தூண்கள் நரசிங்கன் காலத்துத் தூண்களைப் போலிருந்தாலும், அவையடிப்புறத்தில் சிங்கங்கள் செதுக்கப்படவில்லை. இக் குகைக் கோயிலின் கிழக்குப் பக்கத்தில் சிவன் கோயிலும், மேற்குப் பக்கத்தில் விஷ்ணு கோயிலும் குடைந்திருக்கின்றனர். இரண்டு கோயில்களுக்கு நடுவில் பெரிய மண்டபம் உண்டு. அதனது சுவர்மேல் இந்திரன், சிவன், துர்க்கை, பிரமன், கணபதி இவ்வைவர் விக்கிரகங்கள் மிக்க அழகியவைகளாய்ச் செதுக்கி யிருக்கிறார்கள். கோயிலின் முன் மரவிட்டங்கள்போல் கல்லில் நீண்டு வெட்டியிருக்கிறது. இது கூரை வீட்டின் தாழ்வாரத்தில் விட்டம் நீட்டிக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். இக்கல் விட்டங்களின் நுனியில் நகைப்பு உண்டாக்கத் தக்க பெருந் தொந்தியையுடைய குபேரன் முதலிய உருவங்கள் செய்திருக்கின்றனர்.

திரிசிராப்பள்ளிக்கு வட மேற்கே திருவெள்ளறை யென்ற ஒரு சிற்றூர் உளது. அங்குள்ள மலைமேல் பழைய

விஷ்ணு கோயில் உண்டு. அம்மலையடியில் பெரிய குகைக் கோயில் குடைய ஆரம்பித்து வேலை முடியாமல் விட்டு விட்டிருக்கிறது. இக்குகை குடையுமுன் இவ்வூர்க்குத் திருவானைக்கா என்று பெயர். பின்பு திருவெள்ளறை யென்ற பெயர் வந்தது. இவ்வூரில் குகைக்கோயில் மற்றொன்றில் சிவாலயம் உண்டு.

புதுக்கோட்டைக் கருகிலுள்ள குடுமியா மலையில் மகேந்திரனது சங்கீதக் கல்வெட்டிற்குப் பக்கத்தில் மற்றோர் குகைக் கோயில் இருக்கிறது. இதனது தூண்களும் திரிசிராப்பள்ளி கீழ்க் குகைத் தூண்கள்போல் வேலை செய்தவை. இக்கோயில் சுவரில் பரிவாதினி என்ற பெயர் வெட்டியிருக்கிறது. பரிவாதினி யென்பது எவளோ தெரியாது. அன்றியும் புதுகோட்டைக்கு இன்னொரு பக்கத்திலுள்ள திரு மயத்தில் மகேந்திரன் செய்வித்த சிவன் கோவில் பக்கத்தில் வைஷ்ணவ குகைக் கோயில் உண்டு. அதுவும் இக் காலத்தியது தான். ஆனால் நரசிங்கன் செய்வித்த கோயில்களில் இருப்பதுபோல் வேலை அழகாயிராது.

நரசிங்கன் குடைவித்த குகைக்கோயில்கள் ஒருவகை. இதுவன்றி அவன் இன்னொருவிதக் கோயில்கள் செய்வித்தான்; அதாவது, ஒரு குன்றைச் செதுக்கிக் கோயிலுருவம் வருமாறு செய்வித்தல். இவைகளைக் ஒருக்கல் கோயில் என்போம். இவ்வகை ஒருக்கல் கோயில்கள் மகாபலிபுரத்தில் இருக்கின்றன. இக்காலத்தில் இவைகளைக் கோயில் என்று தெரியாமல் தேர்களைப்போல் தோன்றுவதால் இரதங்கள் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவை ஐந்து கோயில்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஆகையால் இவைகளைப் பஞ்சபாண்டவ ரதங்கள் என்று நினைத்து, தர்மராஜ ரதம், பீமசேன ரதம், அர்ஜுன ரதம், திரௌபதி



திருச்சிராப்பள்ளி கீழ்க் குகைக் கோயில்

ரதம், நகுல சகாதேவ ரதம் என்று இவைகளுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். இவை கல்லாலான தேர்கள் அல்லவே அல்ல.

கோயில்களைத் தேர்கள் என்று தப்பாய் நினைப்பதற்குக் காரணமென்ன? பல ஆயிர ஆண்டுகளுக்குமுன் நம் நாட்டில் வீடுகளும், மாடமாளிகைகளும், அரண்மனைகளும், ஆலயங்களும், மரத்தாலே கட்டினார்கள். ஏன்! காடுகள் அடர்த்தியாய் வளர்ந்து, அவைகளில் இருள், ஆச்சா, தேக்கு முதலிய பலமுள்ள மரங்கள் சுலபமாய்க் கிடைத்ததால்தான். அவ்வாறு கட்டிய மரக்கட்டடங்களைக் கொத்து வேலையைக் கொண்டு பலவித விக்கிரகங்கள், கோலங்கள் முதலிய சித்திர வேலைகளைச் செய்து அழகுறச் செய்தார்கள். சிற்றுளி வேலைக்காரர் மிகுந்து, கோயில்களின் தூண்களிலென்ன, சுவர்களிலென்ன, வாயிற்படிகளிலென்ன, விமானத்தின் மேலென்ன, எங்கே சரிப்பட்டாலும் அங்கே, அற்புதமான அழகுள்ள திருப்பணிகள் செய்தார்கள். இது இப்படி யிருக்க, தேர்கள், மக்கள் பிடித்து இழுத்துக்கொண்டு ஊர்வலம் வரும் நகரும் கோயில்களாகையால், தேர்களையும் கோயில் விமானங்களைப் போன்றிருக்குமாறு செய்தார்கள். நரசிங்கன் பெருங்கல்லைச் செதுக்கிக் கோவிலுருவமாய்ச் செய்வித்தபோது, அதை விமான உருவமாய்ச் செய்தான். நடுவில் சிற்றறையில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான். காலக்கிரமத்தில் சிவலிங்கம் அச்சிற்றறைகளி லிருந்து நஷ்டமாக, ஜனங்கள் இவைகளை ஒருக்கல்கோயில் என்று மறந்து இரதங்கள் என்று நினைக்க இடமுண்டாயிற்று.

இதில் மற்றொரு விஷயம் கவனிக்கத் தக்கது. வெகு காலம் மரத்தால் கோயில் கட்டி, பின்பு கல்லால் கட்டின

போது, மரத்தில் செய்த வேலை யெல்லாம் கல்லினும் செய்தார்கள். மரத்தில் எளிதாய்ச் செய்யக் கூடிய வேலை கல்லில் செய்வது கஷ்டம். ஆயினும் வேலைத் திறத்தைக் காட்ட மர வேலைகளையெல்லாம் கல்லில் செதுக்கினார்கள். திரிசிராப்பள்ளியில் மகேந்திரன் குகைக் கோயிலில் மரத்



பஞ்சபாண்டவ ரதங்கள்

தால் சுலபமாய்க் கட்டும் வேலியைப் போல் கல்லில் செதுக்கிக் காட்டி யிருக்கிறார்கள். நாமக்கல் கோயிலில், வளைந்த மூங்கில்களை வைத்துப் போட்ட தாழ்வாரம் போல் மலையில் குடைந் தெடுத்திருக்கிறார்கள். திரிசிராப்பள்ளி கீழ்க் குகையில் மர விட்டம் போல் கல் நீட்டிக்கொண்

டிருக்கும். இவ்வாறு மரத்தில் செய்ய வேண்டிய வேலையைப் போல் கல்லில் செய்திருக்கும்.

மகாபலி புரத்திலுள்ள இவ்வைந்து ஒருக்கல் கோயில்களில் மிகப் பெரியது தர்மாராஜாரதம். மூன்று அடுக்காய் செய்து, சித்திர வேலைகள் நிரம்பியிருக்கும். இரண்டாவது அடுக்கின் நடுவில் கர்ப்பக் கிருகம் வெட்டி யிருக்கிறது. அது மாடப் புரையைப் போல் சிறியது. அதனடியில் ஸோமஸ்கந்த விக்கிரகம் செதுக்கி யிருக்கிறது. பீமசேன ரதத்துக்கு முன்னும் பின்னும் மண்டபங்கள் செய்திருக்கிறது. அர்ஜுன ரதத்துக்கும், திரௌபதி ரதத்துக்கும் கலந்து ஒரு முன் மண்டபமும், யானை விக்கிரகமும், சிங்க விக்கிரகமும் மாறி மாறியுள்ளது. திரௌபதி ரதம் என்பது துர்க்கை கோயில். துர்க்கைக்குக் கீழ் வேலைக்கார விக்கிரகம் ஒன்று உண்டு. வேலைக்கார னென்றால் அரசனுக்கு உண்மையாய்ப் பணி செய்யும் அடியான்; வேலைக்காரர் எப்போதாவது அரசர்க்கு உதவாமற் போனால் துயர்வுற்றுத் தங்கள் கழுத்தைக் காளி கோயிலில் அறுத்துக்கொண்டு காளிக்குத் தாங்கள் பலியாவர். இந்தத் திரௌபதி ரதம் கூரை வீட்டைப் போல் கல்லில் வெட்டியது. நகுல சகாதேவ ரதம் வேலை ஆரம்பித்து முடிக்காமல் விட்டு விடப்பட்டது.

நரசிங்கன், கோயில்கள் மாத்திரம் அல்லாமல், கோட்டைகளும் கட்டினான். காஞ்சீபுரத்தில் அவனது கோட்டை இருந்தவிடம் தெரியாமல் பட்டணம் அபிவிருத்தி யாகிவிட்டது. திரிசிராப்பள்ளிக் கடுத்த லால்குடிக்குச் சமீபத்திலுள்ள பெருவளநல்லூர் கிராமத்தைச் சேர்ந்து பல்லவரம் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. பல்லவரம் பல்லவபுரமென்பது மருவி வந்தது. இவ் வூரில் நரசிங்கப்போத்தரை

யன் காலத்தில் கோட்டையொன்று பாறை மேல் கட்டியது இருந்தது. இக் கோட்டை இப்போது முழுவதும் அழிந்துவிட்டது; ஆனால் அதன் அஸ்திபாரம் மாத்திரம் பார்க்கலாம். அதில் பல்லவர் காலத்துப் பெருஞ் செங்கல் கிடைக்கும். இப் பல்லவரம் பல்லவாது சோழ நாட்டுத் தலைநகர் போலும். இவ் வூருக் கருகில் பல்லவருக்கும், சளுக்கருக்கும் அடுத்த அரசன் காலத்தில் பெரும் போர் நிகழ்ந்தது. அதைப் பற்றி அந்த அரசன் சரித்திரத்தில் சொல்வோம். பல்லவரம் பாறைமேல் தேய்ந்துபோன கல் வெட்டு ஒன்றுண்டு. அது இந்த யுத்தத்தைப் பற்றியதோ, பல்லவ அரசரைப் பற்றியதோ என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

## சமய நிலை: வைஷ்ணவம்

(நாசிங்கப்போத்தரையன் காலத்தில் தொண்டைமண்டலத்தில் வைஷ்ணவ முறை கொஞ்சம் பரவியது.) அப்போதிருந்த ஆழ்வார் பக்திசாரர் என்கிற திருமழிசையாழ்வார். திருமழிசையென்கிற மஹீஸார க்ஷேத்திரத்தில் பிறந்தவர். பல சமயங்களையும் ஆராயக் கருதி, லோகாயதம், பௌத்தம், சமணம் முதலியவைகளில் ஒன்றன்றாய்ப் புகுந்து, அவ்வந் நூல்களைப் பயின்று, பின்பு அச் சமயங்களில் பற்று குறைந்து சைவர் ஆனார்; அப்போது சிவவாக்கியர் என்று பெயர் பெற்றார். சில காலம் சிவ பக்தராயிருக்க, பேயாழ்வார் இவரை வைஷ்ணவ ராக்கினர். திருமழிசை யாழ்வார் சிஷ்யன் கணிகண்ணனென்பான். ஒரு நாள் ஒரு பல்லவன் கணிகண்ணனைப் பார்த்து, "உமது பரமகுருவை யான் சேவிக்குமாறு இங்கு அழைத்து வர வேண்டும்" என்றான். அதற்குக் கணிகண்ணன், "நம் ஆசாரியார் ஒருவரிடத்தும் எழுந்தருளார்" என்று கூறிவிட்டான்.

பல்லவன், "என்னை அங்கு அழைத்துப் போயாயினும் அவரது கருணைக்கு இலக் காக்குவித்து அவ ரருளால் நான் எப்போதும் இளமைப் பருவத்தில் இருக்குமாறு செய்ய வேண்டும்" என்று வேண்டினன். அதற்கும் அவன் உடன் படாமல், "உன்னைப் போல இம்மைப் பயனையே எதிர் நோக்கி நிற்பாரை ஆழ்வார் கண்ணெடுத்துப் பார்த்தலும் அரிது" என்று மறுத்துவிட்டான். பின்பு பல்லவன் வருந்திய சிந்தையனாய் கணிகண்ணனைப் பார்த்து, "எனக்கு அழியாத யௌவனம் உண்டாகுமாறு நீயாவது ஒரு கவி பாட வேண்டும்" என்று வேண்டினன். அதற்குக் கணிகண்ணன், "நாராயணனைப் பாடுவேனே ஒழிய நரனைப் பாட மாட்டேன்" என்றான். பல்லவனுக்குக் கோபம் வந்து, "என் நகரத்தினின்று உடனே வெளியே போ" வென்று, உத்தரவிட்டான். இதைக் கணிகண்ணன் ஆழ்வாரிடஞ் சொல்ல, அவர் "நானும் பெருமானை எழுந்தருளிக்கொண்டு உன்னுடன் வருவேன்" என்று,

கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா — துணிவுடைய
செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்.

என்று பாடி, புறப்பட்டார். கடவுளது விக்கிரகம் போய் விட்டதால் ஊரினது பொலிவும் குறைந்தது. அப்போது பல்லவன் ஆழ்வாரைத் திரும்பிவரப் பிரார்த்தித்தான். ஆழ்வார் மறுபடியும்,

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும்—துணிவுடைய
செந்நாப்புலவனும் பாக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்ப்படுத்துக் கொள்.

என்று பாடித் திரும்பிக் கச்சி வந்தடைந்தார்.

திருமழிசைப்பிரான் பாடியது **நான்முகன் திருவந்தாதி யும், திருச்சந்த விருத்தமும்** ஆகும். அந்தாதியில் மறு சம யங்களைப் பின் வருமாறு இகழ்ந்து பாடியுள்ளார்.

அறியார் சமணர், அயர்த்தார் பௌத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில் — வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலாலின்று.

நாராயணன் என்னையாளி நரகத்துச்
சேராமல் காக்கும் திருமால்தன் — பேரான
பேசப்பெறாத பிணச்சமயர் பேசக்கேட்டு
ஆசைப்பட்டாழ்வார் பலர்.

**திருச்சந்த விருத்தத்தில்** கடவுளைப்பற்றி

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே.

உலகுதன்னை நீபடைத்தி உள்ளொடுக்கி வைத்துமீண்டு
உலகுதன்னுளே பிறத்தி ஓரிடத்தை யல்லையால்
உலகுநின்னொ டொன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்
உலகுநின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே.

---

அயர்த்தார் = சேர்ந்தார், செப்பில் = கூறுமிடத்தில், ஈன வர் = தாழ்ந்தவர், ஆளி = ஆள்பவன், பிணச்சமயர் = பிணத்தை யொத்த சமயத்தவர்.

அரங்கம் = அலை, நீர்மை = தன்மை, உள் ஒடுக்கி = உள்ளே அடக்கி, ஒன்றி = பொருந்தி, நிற்றி = நிற்கின்றாய், சூழல் = சூழ்ச்சி.

சக்கரக்கையனைக் காண்பதைப்பற்றி,

புன்புல வழியடைத்து அரக்கு இலச்சினைசெய்து
நன்புல வழிதிறந்து ஞானநற்சுடர் கொளீஇ
என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந்து எழுந்ததோர்
அன்பிலன்றி ஆழியானை யாவர்காண வல்லரே.

வேங்கடத்தையும் குடந்தையையும் கலந்து பாடினதும்
மிக அழகாயிருக்கும்

செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந் தெழுந்துவிண் புடைக்கும்வேங் கடத்துள்நின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்
செழுந்தடங் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே.

### சமயநிலை : சைவம்

நரசிங்கப் போத்தரையன் காலத்தில் சோணாட்டில் சைவம் மிகப் பரவிற்று. வாதாவி நகரைக் கைப்பற்றி அழித்த பரஞ்சோதி என்னும் படைத்தலைவர், வைராக்கியம் பிறந்து அரசன்கீழ் தொண்டு செய்யும் வேலையைவிட்டுச் சிவனுக்கு ஈடுபட்டு, தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் திருச்செங்காட்டான் குடியில் பரமசிவனுக்குப் பணி செய்யத் தொடங்கினார். சிவனடியாரானபின் இவரை, சிறுத்தொண்

---

புன்புலவழி = புன்மையைத் தரும் பஞ்சேந்திரியங்களின் வழி, புன்மை = இழிவு, பஞ்சேந்திரியங்கள் = மெய், வாய், கண், மூக்கு, செவி, இலச்சினை = முத்திரை, கொளீஇ = கொளுத்தி, எள்கி = இழித்து, ஆழியான் = சக்கரமுடையவன்.

வேய் = மூங்கில், விண்புடைக்கும் = மேகத்தைத் தீண்டும், வேங்கடம் = திருப்பதி, பொழில் = சோலை, தடம் = விசாலமான, குடந்தை = கும்பகோணம்.

டர் என்பர். அவ்வூரில் கணபதீச்சுரம் என்ற கோயிலைக் கட்டுவித்து அதில் நாடோறும் கடவுளைத் தொழுது வந்தார். ஒருநாள் இவர் பக்தியைச் சோதிப்பதற்குச் சிவ பெருமான் பைரவ வேஷம் பூண்டு இவர் வீட்டுக்குப் போனதும், அப்போது பக்தி மிகுந்து தன் மகன் சீராள தேவனைக் கறியாக்கி அரனுக்குப் படைத்ததும், உமாம கேசன் உள்ளம் உவந்து, பிள்ளையைப் பிழைக்கச் செய்து சிறுத்தொண்டனார்க்கும், அவர் மனைவிக்கும், மகனுக்கும் வீடளித்ததுமான காதை **பெரிய புராணச்** செய்யுளில் சொல்லியிருப்பது சைவர் எல்லோர்க்கும் தெரியும்.

மற்றோர் சிவனடியார், அறுபத்துமூவரிலும் மிகப் பெயர் பெற்றவரான திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் என்னும் பெரியார் இக்காலத்திலேயிருந்தார். இவர் பிரம புரமென்றும், திருபுரமென்றும் மாறு பெயர்களுள்ள சீர் காழியில் பிறந்து, மூன்று வயதில் அரனருள் அடைந்து, பாசுரங்களைப் பாடத்தொடங்கினர். சோழநாட்டில் அலைந்து சிவஸ்தலங்கள் பலவற்றில் சிவனைத்தொழுது இனிய தேவாரங்களைப் பாடினர். அப்போது சோழநாடு பல்லவர் கீழிருந்தது. ஆதலால் சம்பந்தர் சரித்திரத்தில் சோழ அரசரெவரையும் அவர் பார்த்ததாகக் கதை ஒன்றுமில்லை. பாண்டிய அரசனிடத்துக்குப் போனதாகவும், அவன் முன் னிலையில் நின்று சமணருடன் வாது செய்து வென்றதாயும் **பெரிய புராணம்** சொல்லும். இப் பாண்டியனை நின்றசீர் நெடுமாறனென்பார்கள். இப் பாண்டியன் மனைவியின் பெயர் மங்கையர்க்கரசியார். இம் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரென்ற மந்திரியுந்தான் திருஞான சம்பந்தரை ஆதரித்தார்கள். இவரிருவரும் சைவசமயத்தைச் சார்ந்த வர்கள். பாண்டியனோ சமண முனிவர்களை வழிபட்டவன்;

அதனால் அவன் முன்னிலையில் சமணர் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். பாண்டியனைச் சிவனடியானுக்க நினைத்து அவன் மனைவியும் அமைச்சனும் ஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்தார்கள். அவர் அப்போது இளம்பிராயத்தினர். இவர் மதுரை சேர்ந்து, சமணருடன் வாது செய்யப் புறப்பட்டபோது மங்கையர்க்கரசி "சமணர்கள் வயதில் முதிர்ந்து மிகவும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றனரே. இக் குழந்தையை என் செய்வரோ" என்று சிறிது ஏங்கினள். இதை யறிந்த திருஞானசம்பந்த சுவாமி அவளைத் தேற்ற, சமணர்களின் இழிவையும் தமக்குள்ள தெய்வத்துணையையும் பல பாசுரங்களில் பாடினர். அவை யொன்றில்,

மானினேர்விழி மாதராய் வழுதிக்குமா பெருந்தேவிகேள்
பாலன் வாயொரு பாலனீங்கிவனென்று நீபரிவெய்திடே
லானைமாமலை யாதியாய விடங்களில் பலவல்லல்சே
ரீனர்கட் கெளியேன லேன்றிருவா யானிற்கவே

என்றார். மற்றொன்றில்,

சந்து சேனனுமிந்து சேனனுந்தரும சேனனுங் கருமைசேர்
கந்து சேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா
மந்தி போற்றிரிந் தாரியத்தோடு செந்தமிழ்ப் பயனறிகிலா
வந்தகர்க்கெளியேன லேன்றிரு வாலவாயானிற்கவே.

என்றார். மறுபடியும்,

---

மானின் நேர்விழி = மானின்கண்ணைப் போன்ற கண், வழுதிக்கு = பாண்டியனுக்கு, மாபெருந்தேவி = பட்டமகிஷி, பரிவெய்திடேல் = வருந்தாதே, ஆனை மாமலை = மதுரைக்கடுத்த மலை, ஈனர்கள் = தாழ்ந்தவர்கள், எளியேன் = தாழ்ந்தவன்.

முதலிரண்டு வரியில் வந்துள்ளவைகள் சமணர்களின் பெயர்களாம். மந்தி = குரங்கு, ஆரியத்தோடு செந்தமிழ்ப்பயன் = வடமொழி தமிழ்மொழியில் உள்ள நூல்களின் பயன்.

கூட்டினார் கிளியின் விருத்த முரைத்ததோ ரொலியின்றெழிற்
பாட்டுமெய் சொலிப்பக்கமே செலுமெக்கர் தங்களைப்பல்லறங்
காட்டியே வருமாடெலாங்கவர் கையரைக் கசிவொன்றிலாச்
சேட்டைகட் கெளியேனலேன் திருவாலவா யரனிற்கவே.

இன்னும் ஒரு பாட்டில்,

கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியுங் குணமா
சுனகநந்தியுங் குணகநந்தியுந் திவணநந்தியு மொழிகொளா
வனகநந்தியர் மதுபொழிந்தவமே தவம்புரிவோ மெனுஞ்
சினகருக் கெளியேன லேன்றிருவாலவா யரனிற்கவே.

இவ்வாறு பல பாசுரங்களைப் பாடி மங்கையர்க்கரசி மனதைத்தேற்றி, சமணர்களுடன் வாதஞ்செய்யத் தொடங்கினார். இவ்வாதம் மூன்று வகையாய் நிகழ்ந்தது. முதலில் பாண்டியனுக்கு நேர்ந்த சுரத்தைப் போக்குவதற்கு இரு திறத்தாரும் முயன்றார்: பின்பு அவரவர் ஓலையை நெருப்பிலிட்டும், நீரில் போட்டும் பார்த்தார். இம்மூன்று முறையிலும் சம்பந்தரே வெற்றி பெற்றார். அதனால் பாண்டியன் சிவனடியானாயினன். அரசனும் குடிகளும் சைவராயினர்.

இம் மன்னனுக்குப் பல பட்டப் பெயர்கள் உண்டு. அவை அரிகேசரி, அசமசமன், மாறவர்மன், அலங்கிய விக்கிரமன், அகாலகாலன். இவன் தகப்பன் சடையன் (ஜடிலவர்மா) செழியன், வானவன், செங்கோல் சேந்தன் (ஜயந்தன்) என்ற பட்டங்களுள்ளவன். ஜயந்தன் தகப்பன்

---

கிளியின் விருத்தம் = ஒரு நூல் (நரிவிருத்தம் போன்றது போலும்.) மாடெலாம் = பக்கங்களெல்லாம், கையர் = வஞ்சகர், சேட்டைகள் = தீய காரியங்கள்.

நந்தி என்பது சமணர்களுக்குள்ள ஓர் பட்டப் பெயர், அவமே = வீணே, சினகர் = சமணர்.

மாறவர்மன், அவனி குடாமணி, பாண்டிய குலத்தை நிலை நிறுத்தின கடுங்கோன் பாண்டியாதிராஜனது மகன் மங்கையர்க்கரசியார் புருஷனான அரிகேசரி மாறவர்மன். பட்டாபிஷேகம் பெற்றபோது ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் முதலிய வைதிக கர்மங்களைச் செய்து அந்தணர்களுக்குப் பொற்குவியல்களைத் தானஞ் செய்தான். நெல்வேலி யென்னும் ஊரில் வில்வேலி என்பவன் கடல் தானையையும், பாழி, செந்நிலம் என்னும் ஊர்களில் நிகழ்ந்த போர்களிலும் வென்று, கேரள மன்னனையும் தோற்கடித்து உறையூரையும் கைப்பற்றினான்.

திருஞான சம்பந்தர் சிஷ்யனான பின்பு,

"அந்நாளிலாளுடைய பிள்ளையாரருளாலே
தென்னாடுசிவம்பெருகச் செங்கோலுய்த்து"

ஆண்டா னென்று **பெரிய புராணத்தில்** சொல்லி யிருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனார் **திருத்தொண்ட தொகையில்** இவனை,

"இறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி
வென்றநின்றசீர் நெடுமாற னடியார்."

என்று பாடினார்.

பின்பு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் மதுரையில் தங்கியும், பாண்டி நாட்டிலுள்ள சில திருப்பதிகளைத் தரிசித்துப் பாசுரங்கள் பாடியும், சில காலங் கழித்தனர். பின்பு திரும்பிச் சோணாட்டுத் தலங்களுக்குச் சென்றனர். திரிசிராப்பள்ளி போய், அவ்வூர் மலைமேல் உள்ள தாயுமான சுவாமியைப்பற்றி அழகிய பாட்டுகள் பாடினர். அதிலொன்று,

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிரும்மே.

இப் பாட்டிலுள்ள 'நன்றுடையான்' 'தீயதில்லான்' என்னும் பெயர்களுள்ள குளங்களுண்டு. நன்றுடையான் குளம் மேல் விசாரணையில்லாமல் கெட்டுப்போயிருக்கிறது. தீயதில்லான் குளத்தைப் பிற்காலத்தினர் தூர்த்து அதன் மேல் வீடுகள் கட்டியுள்ளார். மற்றோர் பாட்டில்,

கைம்மக வேந்திக்கடுவ னோடிக்கழை பாய்வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முக வேழத்தீருரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம்மதியுடன் வைத்தல் பழியன்றே.

திருவையாற்றைப் பாடின பாசுரங்களில் ஒன்றைப் பார்ப்போம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந் திட்டைமேலுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங் கோயில்

---

நறைவெள்ளேறு = வெண்மையான ரிஷபம், உமை = பார்வதி.

மகவு = குட்டி, கடுவன் = ஆண் குரங்கு, மந்தி = பெண் குரங்கு, கரு வரை = கரிய மலை, வேழம் = யானை, விகிர்தன் = மேலானவன், நாகம் = பாம்பு, மதி = சந்திரன்.

வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

சிறுத்தொண்டர் வாழ்ந்த ஊரான திருச்செங்காட்டான் குடியிலுள்ள கணபதீச்சுரத்தைப் பாடினது.

செடிநுகரும் சமணர்களுஞ் சீவரச் சாக்கியரும்
படிநுகராதய ருழப்பர்க் கருளாத பண்பினன்
பொடிநுகரும் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சுரத்தானே.

தான் பிறந்த ஊரான சீர்காழியை வர்ணிக்கும் பாசுரங்களில் சில அழகிய வரிகளை வரைவாம்:—

"நலமார்வெள்ளை நாளிகேரம் விரியாதே நறும்பாளை
சலமார் கரியின் மருப்புக்காட்டுஞ் சண்பைநகரே."

"எண்ணார் முத்தமீன்று மரகதம் போற்காய்த்துக்
கண்ணார் கமுகு பவளம் பழுத்திடுங் கலிக்காழி."

புகாரென்னும் காவிரிப்பூம் பட்டினத்தருகில் பல்லவனீச்சுரமென்று ஒரு திருப்பதி உண்டு. எந்தப் பல்லவன் கட்டினனோ தெரியாது. அவ்வூர் பாசுரத்தில் ஒன்றாவது:—

---

புலன்=பொறிகளால் உணரப்படுவன, பொறி=மெய், வாய், கண், மூக்கு, செவி, ஐ—கபம், அலமந்தபோது=கலங்கியபோது, மடவார் = பெண்கள், முழவு = மத்தளம், அலமந்து = கலங்கி, முகில்=மேகம்.

செடி=துன்பம், சாக்கியர்=பௌத்தர், சிறுத்தொண்டர்= சிறந்ததொண்டர், கடிநகராய்=காவலுடைய நகரமாய், கணபதீச்சுரம்=திருச்செங்காட்டங்குடியிலுள்ள ஆலயத்தின் பெயர்.

நாளிகேரம்=தெங்கு, சலமார் கரி=கோபம் அமைந்த யானை, சண்பை=சீர்காழி, கமுகு=பாக்குமரம், காழி=சீர்காழி.

அடையாதார் தம்புரங்கள் மூன்றுமாரழலி லழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும் வித்தகர்மேயவிடங்
கடையார் மாடநீடி யெங்கும் கங்குல்புறந்தடவப்
படையார் புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சுரமே.

வேதாரண்யத்தில் அப்பர் திருக்கதவைத் திறக்கும்படி அருமையான பாசுரங்களைப் பாடினர். அவைகளில் ஒன்றுவது :—

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினா லுமைக்காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே.

திருஞானசம்பந்தர் அக் கதவினையடைக்கும்படி பல அரிய பாசுரங்களைப் பாடினர். அவைகளில் ஒன்றுவது:—

சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கு
மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்த வெனக்குன்
கதவுந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

திருஞானசம்பந்தர் தென்னாட்டிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு வடக்கே தொண்டைநாட்டுத் தலங்களை வணங்கச் சென்றனர். அவ்வாறு போகும்போது மயிலாப்பூரைச் சென்றடைந்தார். அங்கே சிவநேசச் செட்டி

---

ஆரழலில் = மிகுந்த நெருப்பில், விடையயர் மேனியராய் = இடபத்திலேறியவராய், வித்தகர் = சிறப்புடையவர், மாடம் = மாளிகை, கங்குல் = இருள், புரிசை = மதில்.

பண்ணினேர் மொழியாள் = யாழின் இசையை யொத்த சொற்களை யுடையவள், திண்ணமாக = திட்டமாக, சதுரம்மறை = நான்கும்மறைகள், திருக்காப்பு இடுதல் = கதவைச் சாத்துதல்.

பாரென்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கிருந்த ஒரு புதல்வி பாம்பினுல் தீண்டப்பட்டு இறந்துவிட்டாள். அவள் எலும்பை ஒரு குடத்தில் அந்தச் செட்டியார் எடுத்துவைத்திருந்து திருஞானசம்பந்தர் முன் கொண்டுவந்து வைத்தார். உடனே அவர் திருமயிலாப்பூரிலுள்ள கபாலீசர் சந்நிதியில் அந்த எலும்பு நிறைந்த குடத்தைக் கொண்டுவரச் செய்து கடவுளைப்போற்றி அரிய பாசுரங்களைப் பாடினர். எலும்பும் பெண்ணுருவம் பெற்றது. கண்டார் அனைவரும் கசிந்து உருகிக் காழியில் அவதரித்த ஞானசம்பந்தரைப் போற்றினர்.

அங்ஙன மெழுந்துநின்ற வணங்கினை நோக்குவார்கள்
ஈங்கிது காணீரென்ன வற்புத மெய்தும்வேலைப்
பாங்குசூழ் தொண்டரானே ராகாவென் னப்பார்மேல்
ஓங்கிய வோசையும்பர் நாட்டினை யுற்றதன்றே.

இப்படித் திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் இருக்கும்பொழுது வைஷ்ணவப் பெரியாராகிய திருமங்கை மன்னனைச் சந்தித்தாரென்று கூறுவார்கள். சந்தித்த காலத்தில் பாடிய பாட்டுகளாகச் சில பாட்டுகளைக் கூறுவார்கள். அவைகள் எம்மட்டும் உண்மையோ தெரியவில்லை. ஆராய்ந்து அறியவேண்டும்.

## 3. பரமேச்சுரப்போத்தரையன் I.

(கி. பி. 650—690)

### சளுக்கருடன் போர்

நரசிங்கப்போத்தரையன் மகனுன மகேந்திரன் நீண்ட காலம் ஆண்டதாகவாவது, யாதேனும் உயர்ந்த வேலை செய்ததாகவாவது காணேம். இம்மகேந்திரன் மகன் பரமேச்வரன். மகேந்திரன் அரசனும் பரமேச்வரன் இள

வரசனுயு மிருந்தபோது இவர்க்கு ஒரு விரோதி தோன்றி னுன். இவன் புளகேசிமகன் விக்கிரமாதித்தியன். தந்தை நரசிங்கனுடன் போர்செய்து இறந்தது முதல் சளுக்கவம் சத்தை மறுபடி நிலைநிறுத்த வேண்டுமென்று முயன்று கொண்டே யிருந்தான். புளகேசி இறந்து 10-வருஷ மாவ தற்கு முன்னமே சளுக்க இராஜ்யத்தைப் பிரபலமுறச் செய்தான். சளுக்க வம்சத்தினது முதல் விக்கிரமாதித்திய னை இவன் அளித்த பல சாசனங்களில் ஹைதராபாத், அதற்கடுத்த கத்வால், இவ்வூர்களில் அகப்பட்டவைகளைக் கொண்டு இவன் சரித்திரத்தை அறியலாம். தன் இராஜ் யத்தை ஸ்தாபித்தவுடன் ஸ்ரீவல்லவனுன விக்கிரமாதித் தியன் நரசிங்கனது புகழைக் கெடுத்து, மகேந்திரனது பெருமையைக் குறைத்து, அவன் மகன் ஈச்வரனை ஒடுக்கின தாக அச்சாசனங்களில் சொல்லியிருக்கிறது; என்றால் நரசிங்கன் அழித்த வாதாவியைப் பிடித்துக்கொண்டு, சளுக்கர் மகிமையை மறுபடி பெருக்கினதால் நரசிங்கன் புகழைக் கெடுத்தானென்று அறிய வேண்டும். பின்பு மகேந்திரனைப் போரில் தோற்கடித்து அவன் பெருமை யைக் குறைத்தான் போலும். பின்பு காஞ்சீபுரத்தைப் பிடித் துக் கொண்டு பரமேச்வரனைத் தனக்குக் கீழ் சிற்றரசனுய் வைத்தான். மேலும் சாசனங்களில் "தென்னுடென்னும் மங்கையின் ஒட்டியாணமான காஞ்சியைப் பிடித்து, அவளை வசப்படுத்தி, மணம் புரிந்து ஸ்ரீ தேவியின் அன்பைப் பெற் றுன்" என்றும், "ஈச்வரப் போத்தராஜாவை வென்று, உடைக்க முடியாதுயர்ந்த மதில்களும், தாண்ட முடியாத அகழ்களும் சூழும் காஞ்சி யென்னும் தென்னுட்டினது ஒட்டியாணத்தைப் பற்றிக்கொண்டான்" என்றும் சொல்லி யிருக்கிறது. அன்றியும், 'இரணரஸிகன்', என்றால் போர் செய்வதில் பற்றுடையவன் என்றும், 'இராஜமல்லன்', என்

ருல் மகாமல்லன் குலத்தை யழித்தவன் என்றும், பட்டங்களைத் தரித்தான். விக்கிரமாதித்தியன் காஞ்சீபுரத்தைப் பிடித்ததைப்பற்றி அவன் மகன் விநயாத்தித்தியன் கொடுத்த சாசனம் (ஸோரப் என்னும் ஊரில் அகப்பட்டது) ஒன்றில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது. "விக்கிரமாதித்தியனது பாதபத்மங்கள், வேறொருவரையும் வணங்காத காஞ்சி மன்னனது அணிகள் நிறைந்த முடியின் கிரணம் என்னும் நீரைத் தெளிக்கப் பெற்றன."

பின்பு விக்கிரமாதித்தியன் சோழ தேசத்தின் மேல் படையெடுத்துச் சென்றான். இதைப்பற்றி மேலே சொல்லிய கத்வால் சாசனத்தில் பின்வருமாறு கூறியுள்ளது. "பல்லவ குலத்தின் பெருமையை யழித்து, பாமேசுவரனை ஆளாக்கி, சோளிக விஷய (சோழ தேச)த்தையும் கைக்கொண்டு, காவிரித் தென்கரையிலுள்ள உரகபுரம் (அதாவது உறையூர்) சேர்ந்து அங்கே சில நாள் தங்கினான்." இந்தச் சோழரது பண்டைய காலத்துத் தலை நகரத்தில் தங்கி யிருக்கும்போது, கத்வால் சாசனத்தில் சொல்லி யிருக்கும் தானத்தைச் செய்தான். இது விக்கிரமாதித்தியன் பட்டாபிஷேகம் பெற்று 20 ஆண்டுகளான பின்பு, அதாவது சகாப்தம் 596-ம் (கி. பி. 674) வருஷத்தில் நிகழ்ந்தது. உறையூரினின்று புறப்பட்டு, பாண்டி நாட்டிலும் வெற்றிக்கொடியை நாட்டுவதற்காக மதுரை நோக்கிப் புறப்பட்டான். அப்போது மதுரையாண்ட பாண்டியன் நெடுமாறன் மகனான ஜடிலவர்மாவென்கிற கோச்சடையன் ஆவன். இந்தக் கோச்சடையன் மதுரையிலிருந்து புறப்பட்டு திருச்சினாப்பள்ளிக்கு அருகாமையிலிருக்கும் மருதூரில் மகாரதன் விக்கிரமாதித்தியனது கடல்போன்ற சேனையைத் தேக்கி, மங்கல புரத்தில் அவனைத் தோல்வி

யடித்தான். இரணரஸிகனை வென்றதால் இரணதீர னென்னும் பட்டத்தைப் பாண்டியன் பெற்றான். இந்த விஷயத்தை வேள்விக்குடியில் அகப்பட்ட பாண்டிய சாசனம் ஒன்றிலிருந்து அறியலாம்.

விக்கிரமாதித்தியன் தோல்வியுற்றுத் திரும்ப, இது தான் சமயமென்று, பரமேச்வரன் திரிசிராப்பள்ளிக் கருகிலுள்ள பல்லவரத்தில் தன் கோட்டையில் பெரும் படையைச் சேர்த்து அவனை எதிர்த்தான். அடுத்த கிராமமான பெருவள நல்லூரில் மகா யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தைப் பின்னால் சொல்லப்போகிற கூரம் சாசனத்தில் வடமொழிக் கத்திய காவியான காதம்பரி நடையை மொத்த உயர்ந்த நடையில் வர்ணித்திருக்கிறது. அதிலிருந்து சில மொழிகளை யெடுத்துக் கூறுவாம். "வீரரும் குதிரைகளும் யானைகளும் கணக்கற்றவை நடந்து போனதால் கிளம்பின தூளி சூரியனை மறைக்க, அவனொளி சந்திரனது கோட்டைபோல் மங்கிற்று. முரசொலி இடியைப்போல் அச்சம் உண்டாக்கிற்று. உறையிலிருந்து உருவின வாள்கள் மின்னல்போல் கண்களைப் பறித்தன. யானைகள் மேகம்போல் அசைந்தன; அகாலத்தில் மழை வந்ததுபோல் தோன்றிற்று. உயரமான குதிரைகள் ஓடும்போது கடலின் அலைகள் போல் தோன்றின; அவை நடுவில் யானைகள் வந்து கடலைக் கலக்கினதுபோல் ஆயிற்று. கடலில் கோரமான ஜந்துக்கள் வரும்போது உண்டாகும் சுழலைப்போல் இருந்தது. சமுத்திரத்தினின்று சங்குகள் புறப்பட்டாற்போல் வீரர்கள் சங்குகளைத் தூக்கி ஊதினார்கள். கத்திகளும் கேடயங்களும் ஆகாயத்தில் சுழன்றன. பகைவர்கள் வீழ்ந்து இறந்த காட்சி, காண்டா மிருகம் செடிகளையும், மரங்களையும்

முறித்தெறிவதுபோல் தோன்றியது. வில்வீரர்கள் அஸந, நாக, திலக, புன்னை மரங்கள் நிறைந்த காடுகளைப்போல் நின்றார்கள். வீரர் வில்லை வளைத்து அம்பை விடுத்த போது காட்டில் காற்று தடைப்பட்ட காலத்தில் உண்டாகும் பேரொலிபோல் பெரும் முழக்கம் உண்டாயிற்று. யானைகள் ஒன்றோடொன்று மோதியபோது தந்தங்கள் குத்தி மாட்டிக்கொண்டு நின்றன. குதிரைவீரர்களது வாள்கள், ஒன்றோடொன்று சிக்கிக்கொண்டு அவர் அசைய முடியாமல் நின்றார்கள். மற்றைய வீரர் ஒருவருடைய மயிரை ஒருவர் பிடித்திழுத்தனர். தண்டாயுதங்கள் ஒன்றோடொன்று மோதின. உதிரமும், யானைகளின் மத நீரும் தரையில் விழுந்து கலந்ததால், பூமி மஞ்சள் பூசினாற் போலாயிற்று. கைகளும், தலைகளும், கால்களும், துடைகளும், பற்களும் வெட்டுண்டு உதிர்ந்தன. இருதரத்தாரும் முன்னுக்கும் பின்னுக்கும் அலைந்தோடி விழுந்தார்கள். நதியா யோடும் இரத்தத்தின் மேல் பாலம்போல் நின்ற யானைகள்மீது உள்ள வீரர்கள் போராடும் காலத்தில், ஸ்ரீதேவி சந்தேகம் என்கிற ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு முன்னுக்கும் பின்னுக்கும் ஆடினாள். அடிபட்ட வீரர் உயிருடன் இருந்தாற்போல் கையில் வாளை ஏந்தியே, உதடு உதறி, கண் சிவந்து, நின்றார்கள். கிரீடங்களும், புஜ பந்தங்களும், மாலைகளும், வளையல்களும் நசுங்கி, உடைந்து தவிடு பொடியாயின. கூஷ்மாண்டர்கள், அரக்கர்கள், பிசாசங்கள் முதலியவர், இரத்தத்தைக் குடித்து, மதிமயங்கினார்கள். முரசையடிக்கும் போது தாளம் போட்டாற் போல் தலைவெட்டுண்ட முண்டங்கள் கூத்தாடின. விக்கிரமாதித்தியன் பல லட்சம் வீரருடன் வந்த அரசன், ஒண்டியாய்க் கந்தையைப் போர்த்திக்கொண்டு, போர்க்களத்திலிருந்து ஓடிச் சென்றான்.

பரமேச்சுரப் போத்தரையன் விக்கிரமாதித்தியனைப் பின் தொடர்ந்து அவனூரைக் கொள்ளை யடித்தான் போலும். ஏனெனில் அவன் மகன் இராஜஸிம்ஹன் தந்தையின் பட்டத்தி லொன்றாக ரணரஸிகபுரோமர்த்தனன் என்று ஒரு கல் வெட்டில் வெட்டி யிருக்கிறான்.

## கூரம்சாசனம்

மேலே விவரமாய்ச் சொல்லியிருக்கும் பெருவளநல்லூர் யுத்தத்தின் வர்ணனை கூரம்சாசனத்திலிருந்து எடுத்தெழுதினோம். இக்கூரம் சாசனந்தான் மகேந்திரப் போத்தரையன் குலத்தார் கொடுத்த முதல் தாமரப்பட்டயம் ஆகும். இது தமிழிலும் ஆரியத்திலும் கலந்து எழுதினது. இப் பட்டயத்தின் முதலிரண்டு சுலோகங்களில் பரமேச்வரனை கடவுளைத் தோத்திரஞ் செய்து பின்பு பல்லவர் புகழைப் பின்வருமாறு போற்றி யிருக்கிறது. "பல்லவ குலத்தார் பூமியைக் கஷ்டத்தினின்று காப்பாற்றட்டும். அக்குலத்தில் தருமத்திற்கு எதிர் நடையில் இருப்பவராவது, ஸோமயாகம் செய்யாதவராவது, யுத்த தண்டத்தை அநியாயமாய் எடுத்தவராவது, போலியறத்தினராவது, தானஞ் செய்யாதவராவது, நாவினால் பொய் சொன்னவராவது, போரில் பயந்தவராவது இருந்ததாகக் கேள்விப்பட்டதில்லை."

பின்பு இச்சாசனத்தில் பல்லவர் குல உற்பத்தியைப் பற்றி எழுதியிருக்கிறது. பல ஆயிர வருஷங்களுக்கு முன் பல்லவரை நிலைகெட்ட க்ஷத்திரியர் என்று புராணங்களிலும் தரும சாஸ்திரங்களிலும் சொல்லி யிருக்கிறது. கச்சிப்பல்லவரது பிராகிருத சாசனங்களில் அசுவத்தாமாவுக்குப் பல்லவனென்று மகன் பிறந்தானென்றும், பல்லவன்

பின்னோர் பல்லவரென்றும், பாரத்துவாஜ கோத்திரத்து க்ஷத்திரிய ரென்றும் கூறியுள்ளது. சில நூற்றாண்டுகளாய் பல்லவர் நிலை உயர, கூரம் சாசனத்தில் இவரை இன்னும் உயர்த்திப் பின் வருமாறு கூறினர். "பிரமனிடத்திலிருந்து அங்கிரஸ் தோன்றினார்; அவரிடமிருந்து பிருஹஸ்பதி; பின்பு பாரத்துவாஜர்; பின்பு துரோணர்; பின்பு அளவற்ற புகழுக்கு இருப்பிடமான அசுவத்தாமா; அவரிடமிருந்து குலத்தின் துயரத்தை துரத்தி யடித்த பல்லவன்; அவனிடமிருந்து சகலபுவன வல்லவ பல்லவ குலம் பிறந்தது." பல்லவன் என்ற குலத்தின் பெயரை ஒரு மனிதன் பெயராக வைத்துச் சொன்னார்கள். இந்த வம்சாவளி சிறிது காலத்தில் என்ன விநோதமாய் வளர்ந்ததோ அடுத்த சாசனங்களில் தெரியும்.

## ஆட்சிமுறை

அக்காலத்தில் எல்லா மனிதரும் ரதகஜதுரகபதாதியான நால்வகை நிலைப்படையை வைத்திருந்தார்கள். பரமேச்சுரப் போத்தரையனும் அவ்வாறே வைத்திருந்தான். அவனுடைய சொந்த யானைக்குப் பெயர் 'அரிவாரணம்.' அதாவது, பகைவரைக் கொல்வது; அதன் முதுகு மேல் தங்கத்தில் கல்லிழைத்த சேணம் போட்டிருந்தது. மலைமேல் அருவிகள் இடைவிடாது ஓடுவது போல் அதன் மதநீர் எப்போதும் ஓடும். அதன்பின் பல ஆயிரம் யானைகள் தொடரும். அரசன் குதிரைக்குப் பெயர் 'அதிசயம்,' அதாவது, உயர்வுற்றது: அதற்கும் கல்லிழைத்த சேணமுண்டு. காதில் சாமரங்கள் கோத்திருந்த நூறுயிரம் குதிரைகள் அதன் பின் ஓடும்.

அரசாட்சி நடத்த அக்காலத்தில் நாட்டைக் கோட்டங்களாகவும், கோட்டத்தை ராஷ்டிரங்களாகவும், ராஷ்

டிரத்தைக் கிராமங்களாகவும், பிரித்திருந்தார்கள். கூரம் என்கிற கிராமமானது ஊற்றுக் காட்டுக் கோட்டத்தில் நீர்வேளூர் என்ற மன்னியவாந்தர ராஷ்டிரத்தில் இருந்தது. இந்தக் கூரம் சாசனத்தால் தானம் கொடுத்த கிராமமான பரமேசுவர மங்கலமானது மணையூர்க் கோட்டத்தில் பன்மா என்று பெயர்கொண்ட மன்னியவாந்தர ராஷ்டிரத்தில் இருந்தது. மன்னியவாந்தர ராஷ்டிர மென்றால் மலைகள் நடுவிலிருக்கும் நாடு என்று பொருள்போலும்.

இதுவுமன்றி அக்காலத்தில் நிலத்தைக் குழிகளாகவும் பட்டிகளாகவும் அளந்து வகுத்தார்களென்று கூரம் சாசனத்தால் அறியலாம். குழி என்றால் 576 சதுர அடி கொண்டது. பட்டி என்றால் ஒரு ஆட்டு மந்தையை மறித்து வைக்கத் தக்க அளவுள்ள நிலம் போலும். பெரிய நிலத் தாக்குகளைப் பொன் கொடுத்து வாங்கினதாகவும் இச் சாசனத்தால் தெரிய வருகிறது.

பல்லவ அரசர் கோயில்களைக் கட்டி அவைகளுக்கும் அந்தணர்களுக்கும் மானியம் விட்டது தவிர, நன்செய் நிலங்களைச் செவ்வையாய்ச் சாகுபடி செய்ய வாய்க்கால்கள் வெட்டி நிலத்துக்கு நீர்ப் பாய்ச்சலை விருத்தி செய்தார்கள். நாட்டுக்குப் பொதுவாக நாட்டுக்கால், ஊற்றுகால்கள் வெட்டி, நீர் பாய்ச்சிக்கொள்ள விதிகளும் செய்தார்கள். குளங்களையும் வெட்டினார்கள். மண்டபங்களில் பாரதம் முதலியன படித்து மக்களுக்குச் சொல்ல ஏற்பாடு செய்தார்கள். கோயில்களைப் பழுது பார்த்தால் (நவகர்மம்) நடக்கும் பொருட்டும் பொருளுதவி செய்தார்கள். கிராமங்களில் பொதுச் செலவுக்காக 'ஊராள்ச்சி, செக்கு, தறிகள், கூலம் (கடை) தரகு, கத்திக் காணம்' இவைகளிலிருந்து வந்த வரும்படியை வழங்கினார்கள்.

கூரம் சாசனத்திலிருந்து கோயிலுக்கு மானியம் விட்டு ஸ்தாபித்த தருமத்தைச் சரிவர நடத்துவதற்கு ஏற்பட்ட முறையையும் அறியலாம்:

"ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டுக் கூரமும் ஞம்மணம் பாக்கமும் [சேர்ந்த கிராமங்களில்] விச்சாவிநீத பல்லவரசன் விலைக்காணம் கையில் கொடுத்து... ஆயிரத்திருநூற்றுக் குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம், தளி எடுப்பதற்கு ஒரு சுடத்தலைப் பாடகத்துள் சூளை மேட்டுப் பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுகூட ஐந்தேகால்பட்டி நிலமும் விற்றுக்கொண்டு, விச்சாவிநீத பல்லவ பரமேச்சுரகரம் எடுத்து ஏரி தோண்டி, இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மனையும் மனைப்படப்பும் வகுத்து, இதனுள் மிக்கநிலம் ஒழுக்கவிக்கு விளை நிலமாகவும், இந்நிலத்துக்கு [கீழ்பா] லெல்லை முதுகாட்டு வழியின் மேற்கும் தென்பா [லெல்லை ஊ]ர் புகு [வழியின் வடக்கு] ம், மேல்பா லெல்லை ஊர் புகு வழி நின்றும் வடக்கு நோக்கி நாட்டுக்கானு (க்) கே போன வ[ழி]யின் கிழக்கும், வடபாலெல்லை நாட்டுக்காலின் தெற்கும், இந்நான் கெல்லை யகத்து[ம்], தளி[யு]ம்ஏரியும் வழிபாடு செய்வார்க்கு மனையும் மனைப்படப்பும் நீக்கி, மிக்க நிலமும் சூளை மேட்டுப் பட்டியும் ஒழுக் கவிக்கு விளை நிலமாகக்கொடுத்து, இத்தளிக்கு வேண்டுங் தேவகருமம் நவகருமஞ் செய்வதற்கும், இருபதின்மர் சதுர்ப்பேதிகளுக்கும் பிரமதேயங் கொடுப்பதற்கும் மணையிற் கோட்டத்துப் பன்மா நாட்டு பரமேச்சுர மங்கலத்துடன் அகப்பட்ட வளையில் சுற்று நிலம் அத்

---

வித்யா விநீதன் என்பது பரமேசுவரன் பட்டப் பெயர். காணம்=பொன். தளி=கோயில். விச்சா=வித்யா; விச்சை=ஞானம். நவகருமம்=புதுப்பித்தல்.

தனையும் இருபத்தைந்து பங்காய், இதனுள் மூன்று பங்கும் கூரத்துத் தளிக்கு [தே]வ [கரும] நவகருமஞ் [செய்]வதாக வும், கூரத்து மண்டக[த்து]க்குத் தண்ணீர்க்குந் தீக்கும் ஒரு பங்காகவும், இம்மண்டகத்தே பாரதம் வாசிப்பதற்கு ஒரு பங்காகவும், நின்ற இருபது பங்கும் இருபதின்மர் சதுர்ப் பேதிகளுக்குப் பிரமதேயமாகக் கொடுத்தது. இவ்வூர் மனை யும் மனைப்படப்பும் ஊராள்ச்சியும் செக்கும் தறி[யும்] கூல மும் தரகும் கத்திக்காணமும் மற்றும் பொதுவினுல் உள்ள தெல்லாம் இப்பங்கு இருபத்தைந்தின் வழியாலே பங்கிட் டுண்பாராகவும். இவ்வூர் பரமேச்சுரத் தடாகத்துக்குப் பாலாற்று நின்றும் தோன்றின பெரும் பிடுகுகாலி[ன்] புழு திப் பாடும் [தலை]வாயும் தலைப்பெழையும் ஊ[ற்]று[க்] காலும் தோண்[டின நில] மெல்லாம் பரமேச்சுர மங்கலத்து நி[ல] மாக.''

இந்தச் சாசனத்தில் சில எழுத்துகளைத் தற்காலத்து முறையாக மாற்றியும், அழிந்துபோன எழுத்துக்களை உத் தேசமாயும் எழுதியிருக்கிறோம். சாசனக் கடைசியில் பத்து வரிகள் அதிகமாய் அழிந்துபோயின. அவைகளி லிருந்து தானம் வாங்கினவர்களில் ஒருவன் பெயர் அனந்த சிவாசாரியனென்றும், மற்றொருவன் பெயர் புல்லசர்மா வென்றும் தெரியவருகிறது.

கூரம் சாசனம் எழுதி ஏறக்குறைய 1250 ஆண்டுக ளாயின. ஆனாலும் அப்போதைய தமிழிற்கும், இப்போ தைய தமிழிற்கும் எள்ளளவேனும் வேற்றுமை இல்லவே

---

சதுர்ப்பேதி = சதுர்வேதி; நான்மறைகளையும் ஓதினவர். பிரமதேயம் = பிராம்மணர்களுக்குத் தானமாய் கொடுத்த நிலம். இச்சாசனத்திற்கண்ட சில மொழிகளுக்கும் தொடர்மொழிகளுக் கும் உரிய பொருள்கள் திட்டமாய் விளங்கவில்லை.

யில்லை. ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய பாஷைகள் இத்தகையனவல்ல. 1250 வருஷங்களுக்கு முன்னிருந்த ஆங்கிலமானது இக்காலத்தில் கொஞ்சமேனும் புலப்படாது. ஐரோப்பிய மொழிகள் நாளடைவில் வேகமாய் மாறிக்கொண்டே யிருக்கும். தமிழோ அவ்வாறல்ல. கி. பி. 650-ல் வழங்கின தமிழினது இலக்கண முறையாவது, பேச்சு நடையாவது இப்போது வரையில் மாறவில்லை. கொஞ்சம் வடமொழிச் சொற்களதிகமே தவிர வேறு எவ்வித மாறுபாடுங் கிடையாது.

மொழி நடை மாறாது போயினும் எழுத்து முறை கொஞ்சம் மாறியிருக்கிறது. அதைக் காட்டக் கூரம் சாசனத்திலிருந்து சில வரிகளைச் சாசனத்திலிருக்கும் வகையாகவே, தேய்ந்துபோன எழுத்துக்களைத் தெரிந்த மட்டும் சேர்த்துக் காட்டுவோம்.

ஊ [ற்] றுக்காட்டுக் கொட்டத்து நீர்வெளூர் நாட்டுக் கூரமும் ஞம்மனம் பாக்குமு......[ஞங்கணத] [உ] விச்சாவிநீதப் பல்லவாசன் விலைக்காணங் கெயிக்கொடுத்து [ச்சி]... செய்து ஆயிரத்தி [ரு] நூற் றுக் குழிப்படியால் விற்றுக் கொண்ட நிலம் த[ளி] எடிப்பதற்கு ஓடு சுடக்கொண்ட நிலம் தலைப்பாடகத்துள் குளமெட்டுபட்டியும் ஊருள் மண்டகம் எடுத்தி நிலத் தொடுங் கூட அயிங்தெகாப் பட்டி நிலமும் விற்றுக் கொண்டு விச்சாவிநீத பல்லவ பரமெச்சுரகரம் எடுத்து எரி தோண்டி இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மனெயும் மனப்படப்பும் வகுத்து இத நுள் மிக்க நிலம் ஒழுக்க விக்கு விளைநிலமா [க] வும் இந்நிலத்துக்கு முன் பக்கத்தில் இதையே இக் காலத்திய நடையில் அச்சிட்டிருக்கிறது அதனுடன் ஒத்துப்பார்த்தால் அப்போது 'எ', 'ஒ', 'ே', என்ற எழுத்

துக்களில்லை யென்றும், 'ந', 'ன' இவைகளை வித்தியாச மில்லாமல் வழங்குகிறென்றும் அறியலாம்.

## சமய நிலை

பௌத்தமும் சமணமும் குறைந்து, ஏறக்குறைய தற்காலத்திலிருப்பதுபோல கோயிற்பூசை, சமய நிலை முதலியவை ஏற்பட்டன என்று இந்தச் சாசனத்தில் தெரிய வருகிறது. ஏனென்றால் இச்சாசனத்தாலே கோயிலில் பூஜா ஸ்தாபன, குஸுமம, கந்த, தூப, ஹவிருபஹாரபலி, சங்க, படாஹ முதலிய கிரியைகள் நடப்பதற்கும், உதகம், அக்கினி, பாரதம், ஆக்கியானம் இவைகளுக்காகவும், ஒரு கிராமத்தைக் கொடுத்தான். இந்தக் கிரியைகள் இப்போதும் கோயில்களில் நடக்கின்றன.

நாசிங்கன் பஞ்சபாண்டவர் இரதங்களில் முக்கியமான தான தர்மாராஜர் ரதத்தில் இரண்டு அடுக்கு தஸ்துகளைத் தான் முடித்திருந்தான். பரமேச்சுரன் மூன்றுவதையுங் கட்டி முடித்து அதன்மேல் அத்யந்த காமபல்லவேச்வரக்ருஹம் என்றும், 'ரணஜய, என்றும் வெட்டுவித்தான். 'அத்யந்த காமன்' 'ரணஜயன்', இவ்விரண்டும் பரமேச்சுரன் பட்டங்கள். இது தவிர இன்னும் அனேக பட்டங்கள் அவனுக்கு உண்டு. இவைகளுக்குச் சிவபரமாயும், அரசன் பரமாயும் பொருள் தருமாறு, சிலேடைகள் நிறைந்த 11 வடமொழி சுலோகங்களை அரசன் எழுதுவித்தான். மகாபலிபுரத்தில் கணேசாலயம் என்று ஒரு ஒருக்கல் கோயில் கட்டி, அதின்மேலும் இந்தச் சுலோகங்களைக் கல்வெட்டாக வெட்டுவித்தான். அவைகளின் பொருளாவது :—

1. காமனை யழித்த சிவன் உற்பத்தி, ஸ்திதி, நாசத்துக்குக்காரணன். **அகாரணன், அத்யந்தகாமனுக்கு** வேண்டியதெல்லாம் கொடுப்பானாக.

2. மாயையற்றவன், சித்ரமாயன், குணபாஜனன், ஸ்வஸ்தன், நிருத்திரன், நிரீசன், பரமேச்வரன்.

3. கால் பெருவிரலால் கைலாசத்தையும் தசானனை யும் பாதாளம் வரைக்கும் இறங்கும்படி அழுத்தின அஜ னைத் (தலைமேல்) ஸ்ரீநிதி வசிக்கிறான்.

4. பக்தி நிறைந்திருக்கிற மனதில் பவனையும், கை மேல் பூமியை அழகிய நகை போலவும், தாங்கியிருக்கிற ஸ்ரீபரன் வெகு காலம் வெற்றியுறுவானாக.

5. சத்ரு மண்டலத்தை ஜயித்து ரணஜயன் என்று பெயர்பெற்ற அத்யந்தகாம ராஜா இந்தச் சம்புக்கிருகத்தைக் கட்டுவித்தான்.

6. மரங்களைப் போல் ஸ்தாணு; (ஆனாலும்) அறி வுள்ளவன். கலையற்றவன், (ஆனால்) ஸோமன். பாகவ தாத்மா; ஆகாஸ தேஹி; பயங்கரன் (பீமன்), மங்களகரன் (சிவன்); நன்மை செய்வோன் (சங்கரன்); காமனைக் கொன் றவன்; இத்தகைய சிவன் ஜயிப்பானாக.

7. தருணாங்குரன் ஜயிப்பானாக; அவன் இராஜராஜன்; ஆனாலும் (இராஜராஜ னென்கிற குபேரனைப் போல்) அவ லட்சணனல்ல; (சக்கரவர்த்தியாயும் ஜனார்த்தனனாயுமான விஷ்ணுவைப் போலல்லாமல்) சக்கரவர்த்தியானாலும் ஜனங் களை வருத்தாதவன்; (சந்திரன் தாரகைகளுக்கு அதிபதி யானாலும் அஸ்வஸ்தனாயிருக்க), இதன் தாரகாதிபதி (அதா வது பாதுகாப்போருக்கு அரசன்) ஆனாலும் ஸ்வஸ்தன் (தன்னிலையிலுள்ளவன்).

8—9. ஸ்ரீமான் அத்யந்தகாமன் தன் விரோதிகளது கர்வத்தை யழித்தவன்; ஸ்ரீநிதி, காமராகன், ஹராராதனத்

தில் ஆஸக்தி யுடையவன்; இவனது அபிஷேக ஜலமும், மணிகளாலான தாமரைகளும், நிறைந்த தடாகம் போன்ற விசாலமான தலை மேலே சங்கரன் எப்போதும் குடி கொண்டிருக்கிறான்.

10. அவன் சங்கரனை அடைய விரும்பி, இந்தப் பெரிய சிவ மந்திரத்தைத் தன் பிரஜைகளின் காமங்கள் நிறைவேறக் கட்டுவித்தான்.

துன் மார்க்கத்தில் நடக்காமல் காப்பாற்றும் சிவன் எவனுடைய இருதயத்தில் இரானோ அவனுக்கு ஆறு முறைதிக் (சாபம்) அத்யந்த காம பல்லவேச்வாக்ருஹம்.

மேலே பொருள் எழுதிய பதினொரு சுலோகங்கள் வெகு சமத்காரமாய்ப் பல அர்த்தங்கள் தருமாறு செய்தவை. அரசனையும், சிவனையும் ஒரே பெயரிட்டுச் சொல்லியிருப்பதி லிருந்து அரசனது பலமும், சிவ பக்தியும் எவ்வளவு உயர்ந்திருந்த தென்று அறியலாம். சிவனைத் தலையில் தூக்கிக்கொண் டிருந்தா னென்று சொன்னது உருத்திராட்சத்தாலான சிவலிங்கத்தைத் தலை முடியாக அணிந்திருந்தான் என்ற பொருள் கொண்டது.

ஒருக்கல் கோயில்களைத் தவிர, மகேந்திரனைப் போல் மலையைக் குடையாமலும், நரசிங்கனைப் போல் மலையைச் செதுக்காமலும், மலையை யுடைத்துக் கற்பாறைகளை ஒன்று மேல் ஒன்றை அடுக்கிப் பரமேச்சுரன் கோயில் கட்டுவித்தான். இதுதான் தென்னிந்தியாவில் கட்டுவித்த முதற் கற்கோயில். இந்தக் கோயிலைக் கூரம் என்னும் கிராமத்தில் கட்டுவித்தான். இதற்காகத்தான் கூரம் சாசனம் பிறந்தது இக் கோயிலுக்குப் பெயர் வித்யாவிநீத பல்லவ பரமேச்வரகாம். வித்யாவிநீத பல்லவ னென்பதும் இவனது பட்டப்

பெயரில் ஒன்று. இக் கோயிலில் பகவான் பரமேஷ்டி பிநாகபாணியைப் பிரதிஷ்டை செய்தான். இக் கோயில் சுவர்களை மாத்திரம் பாறைகளால் கட்டி, மேலே ஓடு போட்டு மூடினான். ஆகையால் கி. பி. 690-ல் முழுவதும் பாறைகளால் கட்டிடம் கட்டத் தென்னிந்தியாவில் ஆரம்பிக்கவில்லை என்றறிய வேண்டியது. இந்தக் கோயில் இடிந்து போய், அதனது கற்களைக் கொண்டு இப்போது ஒரு மண்டபம் கட்டி யிருக்கிறார்கள். அதைக் கூரத்தில் இன்னும் பார்க்கலாம்.

### மறு மன்னர்கள்

பரமேச்சுரப்போத்தரையன் காசியில் ஆண்டபோது மதுரையி லாண்ட பாண்டவர் பலம் அதிகரித்து வந்தது. விக்கிரமாதித்தியன் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்துப் போக முயன்றபோது, பாண்டியன் மதுரையி லிருந்து புறப்பட்டு எதிர் வந்து மகாரத னென்று பட்டம் தரித்த சளுக்க விக்கிரமாதித்தியனது கடல் போன்ற தானையை மருதூரில் தேக்கி, மங்கலபுரத்தில் தோற்கடித்தான் என்று முன்னமே சொன்னோம். இப் பாண்டியனது பெயர் கோச்சடையன். வட மொழியில் ஜடிலவர்மா பல பட்டங்களையுந் தரித்தவன். அவையாவன :— தென்னவன், வானவன், செம்பியன், சோழன், கர்னாடகன், கொங்கர் கோமான், இரணதீரன். இரணதீர னென்ற பெயர் இரணரஹிதனை விக்கிரமாதித்தியனை ஜயித்ததால் வந்தது. சோழன், கர்னாடகன், கொங்கர்கோமான் என்ற பட்டங்களும் தரித்ததால் சோணாடு, கன்னட நாடு, கொங்க நாடு, இவைகளில் இவனது செல்வாக்கு பரவி, இந் நாட்டார் இவனுக்கு ஒருவாறு கீழ்ப்படிந்திருந்தார் என்று நினைக்கலாம். பாண்டியர் செல்வாக்கு கிரமமாய் உயர உயர, பல்லவரது செல்வாக்கு இந் நாடுகளில் மங்கத் தொடங்கிற்று என்றும் ஊகிக்கலாம்.

பரமேச்சுரன் கச்சியிலும், கோச்சடையன் மதுரையி லும் ஆண்டுகொண் டிருக்குங்கால், இவ ரிருவர் இராஜ்யங்க ளுக்கு நடுவில் காவிரிக்குத் தென்பா லிருக்கும் நாட்டில் முத்தரைய குல மன்னர்கள் தோன்றினார்கள். இக் குல முதல் மன்னன் பெயர் குவாவன் மாறன், அவனுக்கு மாறன் என்ற பட்ட மிருந்ததாலும், மாறன் என்பது பாண் டியர் பலருக்குப் பெயராதலாலும் முத்தரையர் குலம் பாண் டியர் குலத்தின் கிளையாகும். முதலில் பாண்டிய நாட்டில் முத்துக் குளிக்கும் கடலோரங்களில் சிற்றரையா யிருந்த தால் முத்தரைய ரென்று பெயர் வந்தது போலும். பின்பு 7-ம் நூற்றாண்டில் பாண்டியரை விட்டுப் பிரிந்து பல்லவரு டன் சேர்ந்து, அவர் ஆதரவைக் கொண்டு தனி யாட்சி பெற்று அரசர் ஆனார். இவர் மீனவர் என்ற பட்டம் பெற் றவரென்றும், மதுரை அரசரிலிருந்து வேறாய் வந்தவ ரென் றும் புதுக்கோட்டைக்கருகிலுள்ள நார்த்தா மலையில் உள்ள ஒரு கல் வெட்டில் சொல்லியிருக்கிறது. அவ்வா று வேறு பட்ட பின்பு பல்லவருடன் சேர்ந்ததால் குவாவன் மாறன் பல்லவர் பட்டங்களையும் தரித்து, பெரும் பிடுகு முத்தரை யன் என்ற பெயரையும் வைத்துக்கொண்டான். அக்காலத் தில் சிற்றரசர் தங்களுக்கு உதவி செய்யும் பேரரசர் பட்டங் களைத் தரிப்பது வழக்கம். பெரும் பிடுகு என்பது பரமேச் சுரன் பட்டங்களில் ஒன்று; அவன் பரமேச்வர தடாகம் ஒன்று ஒரு ஏரி வெட்டுவித்தபோது அதற்குப் பாலாற்றி லிருந்து நீர் பாய பெரும்பிடுகு கால் என்று ஒரு வாய்க்கால் வெட்டுவித்தான். அந்தப் பெரும்பிடுகு என்ற பெயரைக் குவாவன்மாறன் முத்தரையனும் வைத்துக் கொண்டான். அவனது தலைநகரங்கள் தஞ்சாவூரும், அதற் கடுத்த வல்லமும் இக் குவாவன்மாறன் மகன் இளங்கோவதிரையன் பரமேச்சுரன்.

முத்தரையர் ஆண்ட நாட்டுக்கும், பாண்டி நாட்டுக்கும் நடுவில் கோனாடு என்று ஒரு நாடு உண்டு. அது இப்போது புதுக்கோட்டை சீமையின் ஒரு பகுதி. அக்காலத்திலோ இருக்கு வேளிர் என்பவர் அதை ஆண்டார். இவரது தலை நகரம் கொடும்பை என்ற கொடும்பாளூர். கொடும்பை உறையூரிலிருந்து மதுரை போகும் வழியிலுள்ளது என்று சிலப்பதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. கச்சியிலிருந்து மதுரை போகும் மார்க்கத்தில் முறையே திருப்பாதிரிப்புலியூர், குடந்தை, தஞ்சை, உறையூர், கொடும்பை உள்ளன. இக்கொடும்பையில் தொன்று தொட்டு வேளிர் சிற்றரசாய் ஆண்டார்கள்.

## 4. ராஜஸிம்ஹன்

(கி. பி. 690 — 710.)

பரமேச்வரன் மகன் ராஜஸிம்ஹன். இவனொரு பல்லவ ராஜன் காலத்தில்தான் யாதொரு சண்டையும் நடக்கவில்லை. கோயில் கட்டுவதைத்தவிர இவன் செய்தது வேறொன்றும் இல்லை. ஒரு பல்லவ சாசனத்தில் இவனைப் பின்வருமாறு புகழ்ந்திருக்கிறது. "பரமேச்வரனது* அங்கங்கள் எல்லாம் ஒன்றுகூடி மனிதனுக அவதரித்ததால் உண்டானவன். தேக பலத்தாலும், இவன் பெயர் உலகெல்லாம் பரவியதாலும், நரஸிம்ஹ அவதாரத்தின் தன்மையைப் பெற்றவன். இந்த க்ஷத்திரிய சூடாமணியானவன் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் ஐச்வரியம் கொடுத்துத் தன் கீழிருக்கும் பூதேவியைச் சதுர்வேதம் கற்ற பிராமணர்கள் அனுபவிக்குமாறு செய்தான்." மற்றோர் சாசனத்தில் இவன்

---

* சிலேடை (1) கடவுள் (2) பரமேச்சுரப் போத்தரையன்

பரம மஹேச்வரனென்று சொல்லியிருக்கிறது. மற்றொன்றில் மகேந்திரனுக்குச் சமானமானவனென்றும் காஞ்சியில் பிராமணர் கடிகை (கல்லூரி)யை மறுபடியும் ஏற்படுத்தினனென்றும், கைலாசத்தை யொத்த கைலாசநாத சுவாமி கோயிலென்கிற சந்திரசேகராலயத்தைக் கட்டினனென்றும் கூறியிருக்கிறது.

பல்லவ அரசருக்கு ஈச்வர பக்தி, பிராமண ஆதரணை, அதிகரிக்க, அதிகரிக்க, பிராமணர்களும் அரசர்களை உயர்த்தி வைத்து, அவர் வம்சாவளிகளை விஸ்தரித்து எழுதத் தொடங்கினர். கைலாசநாத சுவாமி கோயிலின் வெளிப்புறத்திலுள்ள ஒரு கல்வெட்டில் அவ் வம்சாவளியைப் பின்வருமாறு எழுதியிருக்கிறது.—பிரமனுக்குப்பின் அங்கிரசர். அவர் பின் சக்கரன் புரோகிதனும தேவர்க்குக் குருவுமான பிரகஸ்பதி; அவர்பின் பயங்கரமான பலமும் மூன்றுலகிலும் கௌரவம்பொருந்திய சம்யு; பின்பு முனிவர் தலைவனும் பல்லவ குலத்துக்கு மூலமுமான பாரத்துவாசர்; இவர்பின் பாண்டவரும் கௌரவரும் நன்குமதித்த ஆசாரியனை துரோணர்; பின்பு அரசர்நிலையையும் கர்வத்தையும் அழித்த அசுவத்தாமா; பின்பு அவன் மகன் பல்லவன்; மனுவைப்போல் குல முதல்வன்; தைரியமும் விஜயமுங்கொண்டு, உலகெல்லாம் ஆண்ட (பல்லவ) அரசகுலத்தை ஸ்தாபித்தவன். இம்மன்னவர் பிரமண்ணியர், கலியுகத்தின் மதத்தை அடக்கினவர், சத்தியவாக்கினர், கம்பீரமுடையவர், திரிவருக்கமும் தெரிந்தவர், மூத்தவர்க்குச் சேவை செய்வதில் ஊக்கமுடையவர், காமன் முதலிய உட்பகையாரை அடக்கினவர், அஸ்திரவித்தையை அறிந்தவர், திடமுள்ளவர், நயவிநயமடைந்தவர்.

இதற்குப்பின் இக்கல்வெட்டில் ராஜஸிம்ஹனைப் பல சிலேடைகளுடன் பின்வருமாறு துதி செய்திருக்கிறது.

அந்தணர்க்கு அளவற்ற தானம் அளித்ததால் அவரது நன்றியறிவை அளவுக்கு அடங்காத விதமாய் காட்டிப் போற்றினர் போலும், இத்துதியில் தடித்த எழுத்தில் அச்சிட்ட மொழிகள் இருபொருளுடையவை:—புராரியான சிவனுக்குக் குகன் பிறந்தாற்போல, பல்லவ குலமன்னன் உக்கிரதண்டனுக்கு **ஸுப்ரஹமண்யனும், குமாரனுமான** அத்யந்த காமனென்னும் பல்லவ அரசன் பிறந்தான். இவன் தன் சக்தியினால் பகைவர் கூட்டத்தைத் துமித்தவன், **பதுநயன்** சைவநெறியில் நடந்து **மலத்தை** எல்லாம் தீர்த்தவன். காமனைப்போல் பெண்டிரைக் களிப்புறச் செய்தவன்- வாஸவனைப்போல் அவர்களைப் பரிபாலித்தவன். மூன்று வேதங்களையும் வழிபடுவோன். மாதவனைப் போல் முனிவர், பிராமணர், தேவர் இவரது பகைவர் இருதயத்தைக் கிழித்தவன். **வித்தனைப்** போல் நல்லவர்க்குத் தனம் ஈந்து களிப் பித்தவன். கிருதயுகத்தில் தேவரைக் கண்டவன். கண்வர் முதலியவரால் ஸ்வீகரிக்கப்பட்டவன். துஷ்யந்தர் முதலான இராசர் ஆகாயவாணியைக் கேட்டாரானால் ஆச்சரிய மில்லை; நற்குணம் பறந்தோடிப் போன கலியுகத்தில் அந்தவாணியை ஸ்ரீபரன் கேட்டது வியப்பைத்தருவதே. நயவிக்கிரமங்களால் மதம்பற்றின அரசரைத் தாழ்த்தி, முகம் கடுத்ததால் மாத்திரமே அவரை மதிமயங்கச் செய்யும் ரணஜயன் வெகுகாலம் ஜயமுற்றிருப்பானாக. அவன் புருஷோத்தமனைப் போல் பாவக்கடலில் மூழ்கிக் கலியென்

---

**ஸுப்ரஹமண்யன்**=(1) குமாரக்கடவுள் (2) நல்ல பிராமணன்.
**குமாரன்**=(1) முருகன் (2) மகன்.
**பதுநயன்**=(1) கடவுள் (2) அரசன்.
**மலத்தை**=(1)மும்மலங்களை ஆணவ, மாயை, காமிய மலங்களை.
**வித்தனை**=குபேரனை

கிற பயங்கரமான மகரமானது மக்களை விழுங்கும்போது அவரைக் காப்பாற்றினான். இவ்வரசன் நயத்தாலும் வீரத்தாலும் உலகை வென்று பகைவரைக் கொன்று, அரசரை அழித்து உலகத்தை அநுபவித்து, இந்த விசாலமான ஹாமந்திரத்தைக் கட்டினான். இது அவன் புகழைப் போலும் அரனது நகையைப்போலும் இருக்கிறது. சர்ப்ப



கைலாசநாத சுவாமி கோயில்

ராஜனது சுழன்ற உடலை ஆபரணமாய்க் கொண்ட தேவ அசுரகணங்கள் போற்றும் சங்கரன் இந்த ராஜஸிம்ஹ பல்லவேச்வராலயத்தில் வெகு காலம் குடிகொண்டிருக்கட்டும். விருஷபத்தை அடையாளமா யுள்ளவன். எப்போதும் இந்த ராஜஸிம்ஹேச்வரக்கோயில் சன்னிதானம்

கொடுப்பாஞக; இதன் சிகரம் மேகத்தைத் தடவுகிறது. இது கைலாசத்தின் அழகைப் பறிக்கிறது; இதைக் கட்டின வன் ராஜாதிராஜா, நாற்புறத்திலும் அதிகாரம் செலுத்தின வன், விரோதிகளென்னும் யானைக்கூட்டங்களுக்கு ராஜஸிம் ஹம், ராஜஸிம்ஹன், ரணஜயன், ஸ்ரீபரன், சித்ரகார்முகன், ஏகவீரன், சிவசூடாமணி (இவ்வகை 250 பட்டங்களுக்குக் குறையாமல் இக் கோயிலைச்சுற்றி வெட்டி யிருக்கிறது), இவன் வெகுகாலம் உலகத்தைப் பாதுகாக்கட்டும்.

மேலே இருப்பதில் ஆகாயவாணியை இவ்வரசன் கேட்டதாகச் சொல்லியிருக்கிறது. இது என்னவென்று பெரியபுராணத்தில் பூசலார் நாயஞர் கதையைப் படித்தால் தெரியும். இந்தச் சிவனடியார் சிவ பக்தி மிகுந்தவர். சிவ னுக்குத் தான் ஒரு கோயில் கட்டவேண்டுமென்று அவாக் கொண்டிருந்தார்; எனினும் ஏழைத்தனத்தால் கட்டமுடிய வில்லை. ஆகையால் கோயிலைத் தினந்தோறும் கட்டுவதாக மனதில் தியானம்செய்து கொண்டிருந்தார். இப்படியிருக்க கச்சியில் ராஜஸிம்ஹன் கைலாசநாதஸ்வாமி கோயிலைக் கல் லால் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய முயற்சிசெய்து, நாள்வைத்துச் சித்தமாயிருந்தான். அப் போது பெரியபுராணத்தில் சொல்லியபடி,

காடவர்கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து முற்ற [வான்
மாடெலாஞ் சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல்செய்
நாடமா லறியாதாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றைவேய்ந்தார் இரவிடைக் கனவிலெய்தி,

---

கற்றளி = கற்கோயில், மாடெல்லாம் = பக்கமெல்லாம், வகுத்தல் = ஏற்படுத்தல், மால் = விஷ்ணு, தாபிக்கும் = ஸ்தாபிக் கும், நிலைநாட்டும், ஏடலர் = இதழ்கள்விரிந்த, வேய்ந்தார் அணிந்தவர்.

நின்றவூர்ப் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீடாலயத்து நாளைநாம் புகுவோம் நீயிங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாயென்று
கொன்றைவார் சடையார் தொண்டர்கோயில் கொண்டரு
[ளப்போந்தார்.

அவ்வாறே இராஜஸிம்ஹன் செய்தான். பெரியபுரா ணக் கதையும், கல்வெட்டும் தனியே இக் கதையைக் குறிப் பதால், இவ்வாறு வியப்பான செய்தி நிகழ்ந்ததென்பதற் குத் தடையில்லை.

இந்தக் கோயிலைத் தவிர வேறு கோயில்களையும் ராஜ ஸிம்ஹன் கட்டினதாகத் தெரியவருகிறது. கடன்மல்லை யென்னும் மகாபலிபுரத்தில் கடலருகில் ஒரு கோயிலுண்டு. இதில் 11-ம் நூற்றூண்டில் வாழ்ந்த ராஜராஜசோழனென் பான் மூன்று திருப்பதிகள் உண்டென்றும், அவைகளுக்கு முறையே, க்ஷத்திரிய பல்லவேசுவரம், ராஜஸிம்ம பல்ல வேசுவரம், பள்ளிகொண்டருளிய தேவாலயம் என்று பெயர்கள் என்றும், கல்வெட்டில் எழுதிவைத்திருக்கிறூன். நிகழ்காலத்தில் இக் கோயில்கள் பாழாய்ப் போயின. இந்த க்ஷேத்திரங்களைக் குறிக்க இரண்டு பலிபீடங்களும் ஒரு கற்கொடிமரமும் உண்டு. கடலை நோக்கி யிருக்கும் ஒரு சிவலிங்கம் உண்டு. அது க்ஷத்திரிய பல்லவேசுரக்கோயிலி லிருந்தது, ஜலசயனம் என்று மற்றோர் பெயருண்டு. இதற்கு மேற்கில் உள்ள பள்ளிகொண்ட விஷ்ணு விக்கிர கம், தலசயன மென்ற பள்ளிகொண்ட தேவாலயத்தினது போலும். முற்காலத்தில் சிவன் கோயில், விஷ்ணு கோயில் கள் மிக அருகில் இருப்பது வழக்கம்.

---

நெடிதுநாள் = நீண்டநாள், ஒன்றிய = பொருந்திய, போந் தார் = போனூர்.

இந்த விஷ்ணு கோயிலைத் திருமங்கை ஆழ்வார்,

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனொடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்விசும்பில்
கணங்களியங்கும் மல்லைக்கடன் மல்லைத் தலசயனம்
வணங்குமனத் தாரவரை வணங்குஎன்தன் மடநெஞ்சே.

என்று பாடி யிருக்கிறார். மூன்றும் கோயிலைச் சேர்ந்தது பலிபீடந்தான் இருக்கிறது. அதைச் சுற்றி அத்யந்த காமன், அபராஜிதன், ஏகவீரன், சிவ சூடாமணி, சண்ட சனி, பேராசர் தாக்காத வலியுடையோன், காமனைப் போல் எல்லோரையுங் களிப்புறச் செய்பவன்; அப்ரதிமன், அவனி பூஷணன் என்று இருப்பதால் அதுதான் இராஜஸிம்ஹ பல்லவேச்வரம் நின்றவிடம். இக் கோயில்கள் ராஜஸிம்ஹன் கட்டினவை.

இவை தவிர, மகாபலிபுரத்துக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ள சாளுவன்குப்பத்தில் அதிரண சண்டேச்வரம் என்ற குகைக் கோயில் உண்டு. அதிரண சண்டன் என்பது இராஜஸிம்ஹன் விருது. ஆகையால் இந்தக் குகைக் கோயிலை இவன்தான் கட்டி யிருக்கலாம். இக் குகை மேல் பரமேச்வரனது மகாபலிபுரக் கல்வெட்டின் பிரதியையும் வெட்டி யிருக்கிறது. ஆதலால் சாளுவன் குப்பம் குகைக் கோயிலைச் செய்வித்தவன் இராஜஸிம்ஹனோ, அவன் தகப்பனோ என்று நிச்சயமாய்ச் சொல்வது மிகக் கஷ்டமாகிறது.

இந்தக் கோயில்களன்றி விழுப்புரத்துக்கு 16 மைலிலுள்ள பானைமலையில் ராஜஸிம்ஹன் கட்டின கோயி

---

பிணங்களிடுகாடு = சுடுகாடு, பிஞ்ஞகன் = சிவபெருமான், விசும்பில் = ஆகாயத்தில், கணங்கள் = கூட்டங்கள், சயனம் = படுக்கை.

லொன்றுண்டு. அன்றியும் காஞ்சிபுரத்தி லுள்ள ஐராவதேச்வரன் கோயிலும், கைலாசநாத சுவாமி கோயிலுக் கருகில் ராஜஸிம்ஹன் மனைவி ரங்கபதாகை கட்டின நித்திய விநிதேச்வரம் என்னும் சிறு கோயிலும், மகாபலிபுரத்தில் இவர் மகன் மகேந்திரன் கட்டின முகுந்த நாயனார் கோயிலும் இக்காலத்தியவை.



இராஜசிம்மன் சிங்கத் தூண்கள்

இராஜஸிம்ஹன் கோயில்களெல்லாம் தூரத்தி லிருந்து பார்த்தால் தர்மராஜ ரதத்தைப் போலவே தோன்றும். ஆனால் அதைப்போல் குன்றைக் கோயி லுருவமாய்ச் செதுக்கியதல்ல; கற்பாறைகளைக் கொண்டு கட்டியவை. வர வரச் சிறுத்து உயரும் அடுக்குக ளுடையவை. கர்ப்பக்கிருகம்

வேறு, கோபுரம் வேறு என்று இராது; நான்கு பக்கங்களி லும் புரைகளில் சிவலிங்கமிருக்கும்; திருவாட்சிகள் ஒற்றை வளைவு உள்ளவை. கோயிலுக்குள் பிரதிஷ்டை செய்த சிவ லிங்கங்கள் 8, அல்லது 16 பட்டைகள் தீர்ந்தவை; சில பக்கங்களில் காடி வெட்டியவை. சிவலிங்கத்துக்குப் பின்சுவர் மேல் ஸோமஸ்கந்த விக்கிரகம் இருக்கும். இவை யெல்லாவற்றையும்விட முக்கியமான அடையாளம் என்ன வென்றால், தூண்களுக்கு அடியில் பின்கால்மீது எழுந்து நிற்கும் சிங்கங்கள் வெட்டியிருக்கும். சில சிங்கங்கள் சுண்ணாம்பினால் கட்டியிருக்கும். இவ்வகைச் சிங்கங்கள் தூண்களினின்று தறித்துப் போனவை சோழநாட்டில் பல ஊர்களில் உண்டு. அங்கெல்லாம் ராஜஸிம்ஹன் கோயில் கள் கட்டி, அவைகள் சிதைந்து போயின போலும்.

## சமயநிலை.

திருஞான சம்பந்தர்க்குப்பின் ஒரு நூற்றாண்டு வரைக் கும் சிவனடியா ரெவரும் தேவாரம் பாடினவரில்லை. ஆயி னும் சைவநெறி தொண்டைமண்டலத்தில் மிகப் பரவியது. பல்லவச் சிற்றரசர் இருவர் சிவபக்தி மிகுந்து சிவனுக்குத் தொண்டு செய்தவராதலால் அவரை அறுபத்துமூவரில் சேர்த்தார். அவர்கள் ஐயடிகள் காடவர்கோனாயனாரும், கழற் சிங்க நாயனாரும். இவர் சரித்திரத்தைப் பெரியபுராணத்தில் படிக்கலாம். இவருள் ஐயடிகள் சில பாசுரங்கள் பாடினார். அவைகளைப் பதினோராம் திருமுறையில்சேர்த்திருக்கிறது.

வைஷ்ணவம் இக் காலத்தில் சோழமண்டலத்தில் பரவியது. ஸ்ரீரங்கத்தில் திருப்பாணாழ்வாரும், தொண்ட ரடிப்பொடியாழ்வாரும் விஷ்ணுவைப் புகழ்ந்து பாசுரங்கள் பாடினார்கள். இவருள் திருப்பாணாழ்வார் பாணர்; இழிந்த

குலத்தவர். ஆகையால் கோயிலுக்குத் தூரமாய் நின்றே கடவுளைத் தொழுதார். தன் காலைத் திருவரங்கத்தில் வைக்கக் கூடாதென்று அவர் நினைத்ததால், அவர் அரங்கநாதனைக் கண்ணுறக்காண முடியாமலிருந்தது. கடைசியில் இவர் பக்தியால் ஆச்சரியமுற்ற லோகசாரங்க முனி இவரைத் தோளில் ஏற்றிக்கொண்டு அரங்கமா நகருளானைச் சேவிக்கச் செய்தார். திருப்பாணாழ்வார் பாடினது ஒரே பதிகம். அதன் கடைப்பாசுரம்,

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே

தொண்டரடிப் பொடியாழ்வாரது மற்றொரு பெயர் விப்ரநாராயணன். இவர் நந்தவனம் வைத்தும் பெருமாளுக்குப் பூ, திருத்துழாய் வளர்த்துச் சமர்ப்பித்து வந்தார். இவர் இயற்றிய நூல்கள், திருமாலையும், திருப்பள்ளியெழுச்சியும். இந்நூல்களின் நடையைக் காட்ட இரண்டு பாசுரங்களை எழுதுவோம்.

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தேயென்னும்
இச்சுவைதவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

---

கொண்டல் = மேகம், கோவலன் = இடையன், கவர்ந்தானை = கொள்ளைகொண்டவனை, அண்டர்கோன் = தேவநாயகன்.

அச்சுதன் = அழிவில்லாதவன், அமரர் = தேவர், ஆயர் = இடையர், முரலும் = சப்திக்கும், ஆலும் = ஆடும், அணவும் = தடவும், மிண்டர் = புறச்சமயத்தவர், களிற்றீட்டம் = ஆண்யானைக் கூட்டம், பிடி = பெண்யானை.

வண்டினமுரலுஞ்சோலை மயிலினமாலுஞ்சோலை
கொண்டல் மீதணவுஞ்சோலை குயிலினம் கூவுஞ்சோலை
அண்டர்கோனமருஞ்சோலை அணிதிரு வரங்கமென்னா
மிண்டர்பாய்ந் துண்ணுஞ்சோற்றைவிலக்கிநாய்க்கிடுமினீரே.

இவை இரண்டும் திருமாலையிலுள்ளவை.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனையிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே.

இவை திருப்பள்ளியெழுச்சியிலிருந் தெடுத்தவை. அந் நூல் முழுவதும் இயற்கை வர்ணனை நிறைந்திருக்கும்.

## 5. பரமேச்சுரப் போத்தரையன் II.

### (கி. பி. 710—717)

இவன் ராஜஸிம்ஹன் மகன். சிலகாலமே ஆண்டான். முதலாழ்வார்கள் மூவரும் கச்சிமாநகரிலுள்ள விண்ணகரத் திருப்பதியை அதிகமாய்ப் பாடினார்கள். விண்ணகரம் என்றால் விஷ்ணுக்கிருஹம். இக்கோயிலைத் திருமங்கையாழ்வார் பரமேச்சுர விண்ணகரமென்று பாடினார். ஆதலால் பழங் கோயிலை இப் பரமேச்வரன் புதுப்பித்துக் கட்டினான்போலும். இக்கோயிலுக்கு இப்போது வைகுண்டநாதப் பெருமாள் கோவில் என்று பெயர்.

பரமேச்சுரப் போத்தரையன் பிள்ளையில்லாமல் இறந்தான். அவனுடன் நரஸிம்ஹவிஷ்ணுவின் குலமும் முடிவுற்றது.

# பல்லவர் சரித்திரம்

## (மூன்றும் பாகம்)

(கி. பி. 717 முதல் — 900 வரையில்)

---

## 1. நந்திவர்ம பல்லவமல்லன்

(கி. பி. 717 — 779.)

இரண்டாம் பரமேச்வரன் இறந்தபோது சிம்மாதனம் ஏறத்தக்க மகன் அவன் பட்டமகிஷிக்காவது, வேறு மனைவிக்காவது பிறக்கவில்லைபோலும். மேலும் பரமேச்வரன் தனக்குப் பிற்காலம் அரசுபுரிய எவ்வித ஏற்பாடும் செய்யாமல் விண்ணகரப் பெருமாளைத் தொழுதுகொண்டே உயிர் விட்டான். அதனால் மந்திரிகளும், கடிகையாரும் (அதாவது கற்றறிந்தவர்களும்), நகரத்தாரும், குறுநில மன்னர்களும் கூடி, பல்லவ அரசகுலத்தில் பிறந்த ஹிரண்யவர்மன் மகன் நந்திவர்ம பல்லவனை அரசனைத் தெரிந்தெடுத்தார்கள். முற்காலத்தில் நாட்டில் உயிர்நிலையி லிருந்தவர்கள் கூடி, அரசனைத் தெரிந்தெடுத்து அபிஷேகம் செய்வித்தல் இந்நாட்டில் வழக்கமாயிருந்ததென்று அறியவேண்டியது. இவ்வாறு நிகழ்ந்ததென்பதை வைகுண்டப் பெருமாள் கோயிலைச்சுற்றிப் பதுமைகள் வெட்டிப் பல்லவர் சரித்திரத்தைக்காட்டி யிருப்பதினின்றும், அதன் கீழுள்ள கல்வெட்டி

விருந்தும் அறியலாம். கல்வெட்டு அழிந்துபோயிருந்தாலும் பின்வரும் மொழிகள் தெளிவாய் இருக்கின்றன :— பரமேச்வரப் போத்தரையன், சுவர்க்கஸ்தன், மகா மாத்தியர், கடிகையார், ஹிரண்யவர்ம மகாராஜா, ஸ்ரீமல்லன், ரணமல்லன், பரமேச்வரன் நான்போவேன் என்று தொழுது நின்ற இடம், தரணிகொண்ட பூசர், நகரத்தார், முத்தரையர், அபிஷேகம். இம்மொழிகளைக்கொண்டு நடந்ததென்னவென்று அறியலாம்.



வைகுண்டப் பெருமாள் கோயில்

நந்திவர்ம பல்லவமல்லனை 'சுத்த' மாதாவினின்றும் உற்பத்தியானவனென்று ஒரு சாசனத்தில் சொல்லியிருக்

---

கும்பகோணத்தின் அருகில் உள்ளது. இப்போது நாதன் கோயில் என்று பெயர்.

கிறது. அதனால் அசுத்த மாதாவினின்று பிறந்தவனொருவன் இவனுக்கு எதிரியாயிருந்தானென்று ஊகிக்கலாம். அவ்வாறு எதிர்த்தவன் பெயர் சித்திரமாயன்; பரமேச்சுரனது வைப்பாட்டி மகன்போலும். சில தமிழரசர் உதவியைக் கொண்டு சித்திரமாயன் பல்லவமல்லனோடு போர் புரிந்து, அவனை நந்திபுரக் கோட்டையில் முற்றுகைபோட்டான். அப்போது பல தலைமுறைகளாய் இடைவிடாது பல்லவருக்குத் தொண்டுசெய்துவந்த பூச்சான் குலத்தினுதித்த உதயசந்திரன், வெஃகாவென்ற வேகவதிக்கும் வில்வலனூருக்கும் நாதன், போர்க்களம் சேர்ந்து, அல்லிமலரைப்போல் ஒளிக்கும் வாளால் சித்திரமாயனையும் மற்றையவரையும் கொன்று, நந்திவர்ம பல்லவ மல்லனுக்கு உதவிபுரிந்தான்.

இந்தப் போரில் சித்திரமாயனுக்குச் சகாயஞ் செய்தவரில் சிறந்தவன் சளுக்க விக்கிரமாதித்தியனைத் தோற்கடித்த பாண்டியன் கோச்சடையனது மகனான மான்தேர் மாறன் அரிகேசரி. இவன் சித்திரமாயனுக்கு உதவிசெய்து அவனை அரசனாக்கினால், தனக்குக் கீழ்ப்படிந்திருப்பானென்றும், தான் மகாராஜாதி ராஜாவாகலாமென்றும் நினைத்தான். சித்திரமாயன் இறந்தபின்பும், அரிகேசரி மாறவர்மன் யுத்தத்தை நிறுத்தவில்லை. நெடுவாயில், குறுமடை, மண்ணைக் குறிச்சி, திருமங்கை, பூவாலூர், கொடும்பாலூர், சங்கரமங்கை இவ்வூர்களில் அரிகேசரியானவன் பல்லவனை வென்றதாகப் பாண்டிய சாசனங்களில் சொல்லி யிருக்கிறது. ஆயினும் இவ்வூர்கள் சிலவற்றில் பல்லவன் பாண்டியனை வென்றதாகப் பல்லவ சாசனங்களிலும் கீழே மேற்கோளாய்க் காட்டியிருக்கிற திருமங்கை மன்னன் பரமேச்சுரவிண்ணகரப் பாசுரங்களிலும் சொல்லியிருக்கிறது.

இவ்வாறு ஒரே யுத்தத்தில் இருதாத்தாரும் ஜயம் பெற்றதாக அவரவாது சாசனங்களில் கூறி யிருப்பதால், ஒருவர் சாசனம் பொய் என்று நினைக்க வேண்டுவதில்லை. ஏனென்றால், பெருவளநல்லூர் யுத்தத்தைப்போல ஏதோ ஒன்றிரண்டு போர்கள், நாட்டைப்பற்றிக் கொள்வதற்கோ, இழந்த நாட்டை மீட்கவோ நிகழ்ந்தவை. மற்றையவை யெல்லாம் எவர், உயர்ந்தவர், எவர் தாழ்ந்தவர், எவர் மகா ராஜாதிராஜா என்றும் அசுவமேதயாகம் செய்யத்தக்கவர் என்றும் ஏற்படுவதற்காக நிகழ்ந்தவை. இத்தகைய போர்கள் தரும சாஸ்திரங்களில் சொல்லுந் தருமயுத்த விதிப்படி புரிந்தவையே யன்றிப் பலவீரரைக் கொன்று இரத்தப்பிரவாகம் ஓடுமாறு நடந்தவையல்ல. இரு பக்கத் தாரும் சமான பல முற்றிருந்தால் இருவரும் வெற்றி பெற்றதாகச் சொல்விக்கொள்வது வழக்கம். இது பிசகல்ல.

பல்லவ மல்லனது போர்களைப் பற்றித் திருமங்கை யாழ்வார் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் பாடியிருக் கிறார் என்றோம். அப்பாசுரங்களை எழுதுவாம் :—

சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவையூ றொலிநாற்றமுந் தோற்றமுமாய்
நல்லரன் நான்முகன் நாரணனுக்கிடந்தான்
தடஞ்சூழ்ந் தழகாயகச்சி
பல்லவன் வில்லவ னென்றுலகில்
பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற்
பல்லவன் மல்லையர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே.

---

சுவை = ருசி, ஊறு = தொடுதலால் உண்டாகும் உணர்ச்சி, ஒலி = சப்தம், நாற்றம் = வாசனை, தோற்றம் = காட்சி, அரன் = சிவன், நான்முகன் = பிரமன், நாராயணன் = விஷ்ணு.

வைகுண்டப் பெருமாள் கோயிலில் அழிந்துள்ள கல்வெட்டில் "நான் போவேனென்று தொழுது நின்ற இடம்" என்றதும், இப்பாசுரத்தில் "பல்லவன் மல்லையார்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்" என்பதும் ஒரே விஷயத்தையே குறிக்கின்றன :—

கார்மன்னு நீள்விசும்பும் கடலும் சுடரும்
நிலனும் மலையும் தன்னுந்தித்
தார்மன்னு தாமரைக் கண்ணனிடம்
தடமாமதிள் சூழ்ந்தழ காயகச்சி
தேர்மன்னு தென்னதனை முனையிற் செருவில்
திறம்வாட்டிய திண்சிலையோன்
பார்மன்னு பல்லவர் கோன்பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே.

தேர்மன்னு தென்னவனென்றால் மான்தேர்மாறன், தேருக்குக் குதிரை கட்டியோட்டினவன். பாண்டியர் வெகு காலமாய்ப் பாரசீகத்தி லிருந்து குதிரைகள் வரவழைத்து வழங்கினவர்.

உரந்தரு மெல்லணைப் பள்ளி கொண்டான்
ஒருகால் முன்னம் மாவுருவாய்க் கடலுள்
வரந்தரு மாமணி வண்ண னிடம்
மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி
நிரந்தவர் மண்ணையிற் புண்ணுகர் வேல்
நெடு வாயிலுகச் செருவில் முனநாள்
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த
பர மேச்சுர விண்ணகர மதுவே.

---

கார் = மேகம், விசும்பு = ஆகாயம், சுடர் = சூரிய சந்திரர், தார் = மாலை, தென்னவனை = பாண்டியனை, செருவில் = யுத்தத்தில், திண்சிலை = பலம் பொருந்திய வில்.

தூம்புடைத் திண்கை வன்தாள் களிற்றின்
　　துயர்தீர்த்து அரவம் வெருவ முனநாள்
பூம்புனற் பொய்கை புக்கானவனுக் கிடந்தான்
　　தடஞ் சூழ்ந் தழகாய கச்சி
தேம் பொழிற் குன்றெயில் தென்னவனைத்
　　திகைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற
பாம்புடைப் பல்லவர்கோன் பணிந்த
　　பரமேச்சுர விண்ணகர மதுவே.

பாம்பென்பது அக் காலத்துக் கங்கை குல மன்னனிட மிருந்து பல்லவமல்லன் பெற்ற ஆதிசேஷ வடிவமுள்ள ஓர் இரத்தின மாலை. இதைப் பற்றிப் பின்னால் சொல்வோம்.

இலகிய நீண்முடி மாவலிதன் பெருவேள்வியில்
　　மாணுருவாய் முன நாள்
சலமொடு நிலங் கொண்டவனுக் கிடந்தான்
　　தடஞ் சூழ்ந்தழ காயகச்சி
உலகுடை மன்னவன் தென்னவனைக்
　　கன்னிமாமதிள் சூழ்கருவூர் வெருவ
பல படைசாய வென்றான் பணிந்த
　　பரமேச்சுர விண்ணகர மதுவே.

இக் கரூர் யுத்தத்தைப் பற்றி ஒரு சாசனங்களிலும் இல்லை.

---

உரம் = வலிமை, அணைப் பள்ளி = ஸர்ப்ப சயனம், மா = விலங்கு, செருவில் = போரில், பணிந்த = வணங்கிய, தூம்பு = துவாரம், அரவம் வெருவ = பாம்பு பயப்பட, பொய்கை = தடாகம், தென்னவன் = பாண்டியன், செரு = போர்.

மாண் உருவாய் = மாட்சி தங்கிய உருத்தாங்கி, வெருவ = பயப் பட, குடைத்திறல் மன்னவன் = இராமன், கடலை யடைத்தவன் = சேது கட்டினவன், பிரானதிடம் = தலைவனுக்கு உரிய இடம்.

குடைத்திறல் மன்னவனும் ஒருகால்
குரங்கைப் படையா மலையாற் கடலை
யடைத்தவ னெந்தை பிரான திடம்
மணி மாடங்கள் சூழ்ந்தழ காயகச்சி
விடைத்திறல் வில்லவன் நென்மெலியில்
வெருவச் செருவேல் வலங்கை பிடித்த
படைத்திறற் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரமதுவே.

நென்மெலி யென்பது தெலுங்கு நாட்டில் உளது போலும்.

இந்தப் போர்களில் வெற்றி யடைந்தது மன்றிப் பல்லவமல்லனது சேனாபதியான உதயசந்திரன் நிம்பவனம், சூதவனம், நெல்வேலி (என்றால் மேற் கூறிய நென்மெலி, திருநெல்வேலியல்ல, ஏனெனில் திருநெல்வேலி பாண்டியன் கீழிருந்தது) சூரவழுந்தூர் முதலிய இடங்களில் போர் செய்து ஜய மடைந்தான். நென்மெலிப் போரில் உதய சந்திரனை உதயனென்னும் ஸவர அரசன் எதிர்த்தான். உதயனது யானையின் கொம்பை உதய சந்திரன் பிடித்து அடித்தபோது அதன் மத நீரால் இவன் பலமுற்ற தோள்கள் நனைந்தன. அதன் மேல் ஸவர அரசனது மயி லிறகாற் செய்த பிரகாசமான கண்ணாடிக் கொடியை, உதய சந்திரன் பற்றிக்கொண்டான். ஸவரர்மகாநதிக்கும், கோதா வரிக்கும் நடுவிலுள்ள நாட்டில் இருப்பவர்கள். ஆகையால், நந்திவர்ம பல்லவ மல்லனது கொடிகள் மகாநதி வரையில் பறந்தன. இவ்வாறு பெற்ற சாம்ராஜ்யத்தைக் கொண்டாடும் பொருட்டு பல்லவ மல்லன் அசுவமேத யாகம் செய்யத் தலைப்பட்டான். சாஸ்திரப் பிரகாரம் ஒரு குதிரையைத்

தேவர்க்கு அர்ப்பணம் செய்து, அவிழ்த்து விட்டபோது, அது வடக்குத் திக்கு நோக்கிச் சென்றது. அப்போது வேங்கி நாட்டில் கிழக்குச் சளுக்க மன்னன் இரண்டாம் விஷ்ணுவர்த்தன னென்ற விஷ்ணு ராஜன் ஆண்டுகொண் டிருந்தான். அவன் பல்லவ மன்னனைத் தன் சக்கரவர்த்தி (சம்ராட்) யென்று ஒப்புக்கொண்டவன். எனினும் விஷ்ணு ராஜன் கீழிருந்த பிருதிவி வியாக்கிரன் என்ற நிஷாதகுறு நிலமன்னன் அசுவமேத யாகக் குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டான். இந்தப் பிருதிவி வியாக்கிரன் இப்போது பஸ்தர் என்று விசாகபட்டணம் ஜில்லாவிற்கு மேற்கிலிருக் கிற நாட்டை ஆண்டவன். 'நாகவம்சி' என்ற குலத்தைச் சார்ந்தவன். வியாக்கிரலாஞ்சனம் உடையவன். இவன் குதி ரையைக் கட்டிவிடவே, உதயசந்திரன் அவன் மேல் படை யெடுத்து, அவனை வென்று, விஷ்ணுராஜன் நாட்டிலிருந்து துரத்தியடித்து, முத்து மாலைக ளென்ன, இவைகளை யெல் லாம் பற்றிக்கொண்டான். பின்பு கி.பி. 738-ம் ஆண்டில் நந்திவர்ம பல்லவமல்லன் அசுவமேத யாகம் செய்து நிறை வேற்றினான். அப்போது அந்தணர்களுக்குத் தானங் கொடுத்த சாசனமான உதயேந்திர சாசனத்திலிருந்து இந்த விருத்தாந்தங்களை ஊகித்தெடுத்திருக்கிறோம்.

அசுவமேதம் நடத்திச் சக்கரவர்த்தியானாலும், பல்லவ மல்லன் புரியவேண்டியிருந்த போர்கள் நிற்கவில்லை. சளுக்க மன்னனுடன் போர் ஒன்று நேர்ந்தது. கி.பி. 733-ம் ஆண் டில் இரண்டாவது விக்கிரமாதித்தியன் என்பான் சளுக்க மன்ன னானான். இவன் முதல் விக்கிரமாதித்தியனுக்குக் கொட்பேரன். சிம்மாதனம் ஏறினவுடனே தன் பிரபிதா மகன் பெருவளநல்லூரில் பல்லவனால் அடைந்த தோல்விக் குப் பழி வாங்கக் கச்சி நகரைக் கைப்பற்ற வேண்டுமென்று

புறப்பட்டான். இந்தக் கதையை அவன் மகன் இரண்டாம் கீர்த்திவர்மன் கொடுத்த கேந்தூர் சாசனத்தில் சொல்லி யிருக்கிறது. "சாம்ராஜ்ய இலட்சுமி அவன்மேல் அன்பு பாராட்டி அபிஷேகம் பெற்றவுடன் ஆனந்தம் அடைந்து தன் இயற்கைப் பகைவனைத் தன் முன்னோர்கள் பெருமை யைக் குறைத்த பல்லவனது குலத்தை வேரோடு களையத் தீர்மானம் செய்தான். துண்டகவிஷயம் (தொண்டை மண்டலம்) விரைவில் போய்ச் சேர்ந்து போர் துவக்கினவுடனே தன்னையெதிர்த்த பல்லவ அரசனை நந்திப்போத்தவர்மனை வென்று, அவனது கடுமுகவாதித்ரம், சமுத்திர கோஷம் என்ற வாத்தியங்களையும், மதம் பிடித்த யானைகளையும், தம் கிரணங்களால் இருளைத் தொலைத்த மாணிக்கக் குவியல்களை யும் கைப் பற்றினான். தென்திசைமாதின் ஒட்டியாணம் போன்ற காஞ்சியை அழிக்காமல் அதனுள் புகுந்தான். பிராமணர்களுக்கும், ஏழைகளுக்கும் அளவற்ற தானம் செய்து சந்தோஷப்படுத்தினான். நரசிம்ஹன் கட்டின ராஜஸிம்ஹேச்வரன் கோயிலுக்கும் மற்றைக் கோயில்களுக்கும் பொற்குவி யல்களைத் திருப்பிக்கொடுத்துப் புண்ணியம் சம்பாதித்தான். எதிர்க்க முடியாத வன்மையுடன் பாண்டிய, சோழ, கேரள, களப்பிராதி மன்னர்க்குத் துன்பமுண்டாக்கினான். கீர்த்தி யாகிய ஜயஸ்தம்பத்தை நாட்டினான்." இவ்வாறு கேந்தூர் சாசனத்திலிருப்பது, பழங்கன்னட மொழியில் இரண்டாம் விக்கிரமாதித்தியனே ராஜஸிம்ஹேச்வரன் கோயிலினது தூண் ஒன்றின்மேல் வெட்டுவித்திருக்கிற கல்வெட்டினால் உறுதி பெறும். அதில் விக்கிரமாதித்திய சத்தியாசிரியன் (சத்தியாசிரியன் என்பது சளுக்கமன்னரது பட்டம்) காஞ்சியைப் பிடித்து ராஜஸிம்ஹேசுவரன் கோயில் தனத்தைப் பார்வையிட்டுக் களித்து, திரும்பி சுவாமிக்குக் கொடுத்து விட்டான் என்று சொல்லி யிருக்கிறது.

இந்தச் சளுக்க அரசன் மகன் இரண்டாம் கீர்த்திவர்மன். தான் இளவரசனுயிருந்தபோதே காஞ்சியைப்பிடித்து பல்லவன் வலியை முறித்து, அவனை ஒரு மலையிலுள்ள கோட்டையில் ஒளிந்துக்கொள்ளச் செய்து அவனது யானைகளையும் இரத்தினங்களையும் தனத்தையுங் கைக்கொண்டு தன் தந்தைக்குக் கொடுத்ததாக ஒரு சாசனத்தில் சொல்லியிருக்கின்றான். எனினும் சீக்கிரத்தில் சளுக்கர் வலி குறைந்து பல்லவ மல்லன் கச்சியில் ஆண்டுகொண்டிருக்கையிலேயே, கி. பி. 760-ல் சளுக்க வம்சம் அழிந்து அவரது நாட்டை ராஷ்டிர கூடர் பற்றிக்கொண்டனராகையால் கீர்த்திவர்மன் சொல்லை நம்ப இடமில்லை.

நந்திவர்மபல்லவமல்லன் 62 ஆண்டுகள் ஆண்டான். அவனது கல்வெட்டுகள் பல அகப்பட்டிருக்கின்றன. எனினும் அவனது 21-ம் ஆண்டில் அளித்த உதயேந்திர சாசனமும், 22-ம் ஆண்டில் அளித்த காசாக்குடி சாசனமும் 58-ம் ஆண்டில் அளித்த தண்டன் தோட்டச்சாசனமும் அவன் சரித்திரத்தைக் கண்டறிய முக்கியமானவைகள். உதயேந்திரம் சாசனத்திலிருந்து அறியக்கூடிய விஷயங்கள் மேலே கூறி யிருக்கிறவை.

இப்போது காசாக்குடி சாசனத்திலுள்ள விஷயங்களை எடுத்து வரைவோம். முந்திய பல்லவ சாசனங்களைவிட இதில் பல்லவ வம்சாவளியை அதிகமாய்ப் பெருக்கி எழுதியிருக்கிறது கவனிக்கத்தக்கது. பிரமன் முதல் அசுவத்தாமா வரையில் பல்லவர் முன்னோரென்று சொல்பவரொவ்வொருவரையும் ஒவ்வொரு சுலோகத்தில் விவரமாய் வர்ணித்திருக்கிறது. பின்பு பல்லவன் என்பவன் பிறந்தவாற்றைக் குறிக்கும் ஒரு புதிய கதையொன்றை சில அழகிய சுலோகங்களில் சொல்லியிருக்கிறது. அதாவது :— "அசு

வத்தமா முனியினது தவத்தால் இந்திரன் தன் பதவி போய்விடுமென்று அஞ்சி மேனகையை அவனிடம் அனுப்பினன். அதனல் அப்போது ஒரு பல்லவ மஞ்சத்தின் மீது (அதாவது கொடிகளாலான கட்டிலின் மேல்) நாடு சிறிதேனும் துன்பமுரு வண்ணம் ஆண்ட ஸ்ரீ பல்லவன் பிறந்தான். இதற்குமுன் உண்டான சாசனங்களில் உள்ள வம்சாவளிகளில் பல்லவன் அசுவத்தாமாவின் மகன் என்ற ஒரு தொடர்மொழியானது இப்போது ஒரு கதையாய் வளர்ந்து விட்டது. அன்றியும் இப்புதுக் கதையைப் பரமேச்சுர விண்ணகரக் கோயிலில் பதுமைகளால் காட்டியிருக்கிறது.

பின்பு, "பிராமண குலத்தில் பிறந்தாலும் க்ஷத்திரியத் தன்மை நிறைந்திருந்தான். இடி மேகத்திலிருந்து பிறந்தாலும் அதன் தீக்குணம் போகுமோ?" என்ற சுலோகம் காசாக்குடி சாசனத்தில் இருக்கிறது. இதனல் பல்லவர் பிரம க்ஷத்திரிய சாதி என்றவாறு. இவ்வாறே திருவெள்ளறைக் கோயிற் கல்வெட்டில் தந்திவர்மப் போத்தரையன் தன்னைப் பிரமக்ஷத்திரிய குலத்தவன் என்று சொல்லியிருக்கின்றுன். ஸ்ரீ பல்லவனுக்குப் பின்பு இச்சாசனத்தில் ஒரு புதிய பெயரை நுழைத்திருக்கிறது. அதாவது, "பல்லவனுக்குப் பிறந்தவன் அசோகவர்மன். அவன் தன் கிழிருந்த வேந்தரை அசோகராயும், எதிர்த்தவரைச் சசோகராயும், மதியைப்போல் விளங்கி, யசோகளங்கனயும் வாழ்ந்தான்." மகத தேச மன்னனய், பல்லவர் தென்னிந்தியாவுக்கு வருவதற்குச் சில நூற்றுண்டுகளுக்குமுன் வாழ்ந்த அசோகன் தென்னிந்தியாவிற்கூடத் தன் கல்வெட்டுத் தூண்களை நாட்டியிருந்ததால் அவனையும் பல்லவர் முன்னோர்களில் சேர்த்துவிட்டார்கள்.

இச்சாசனத்தில் இதற்குப் பின்பு பல்லவமன்னரெல்லோரையும் சேர்த்துப் பின் வருமாறு புகழ்ந்திருக்கிறது:—
"அவன் சார்பில் வலியுற்றுக் களையற்ற பல்லவ குலத்தோர் தோன்றினர். அவர் திருமாலினது குறையவதாரம்போன்று புவி மண்டலத்தைக் கைக்கொள்வதில் விடா வீரமுற்று வருணாச்சிரம தருமங்களைப் பரிபாலித்து, கங்கை வந்திறங்கினாற்போல் பூமியைப்பவனம் செய்தார். இக்குல மன்னர் குமாரனைப் போன்றவர்; ஏனெனில் அவனது சக்தி (வேல்) பிறரால் எதிர்க்க முடியாதது. இவர் சக்தியும் (பலமும்) அவ்வாறே. அவன் மகாசேனன். இவர் மகாசேனர் (பெரும்படையுடையவர்.) அவன் பத்மத்தை (தாமரை போலும் சேனையை யுத்தத்தில் ஏற்பாடு செய்து நிறுத்து முறையை) உற்பவம் செய்தான்; இவர் பத்மத்திலிருந்து (வந்த பிரமனின்று) உற்பவம் ஆனவர். அவன் சுப்பிரமணியன்; இவர் நற்செய்கைகள் நிறைந்தவராதலால் சுப்பிரமணியர். நெருப்பைப்போன்ற இவர் தோள்வலி பகைவர் வீரம் என்ற கடல் நீரை உறிஞ்சிவிட்டது. இவர் புகழென்னும் சந்திர வெளிச்சம் கலிகாலப் பாவமென்கிற இருளை நீக்கிற்று. இவரது உயிர் நடையும் இடையறு வெற்றியும் இவரது தோழர் நேசத்தை அதிகரிக்கச் செய்தன. வலையில் மீன் சிக்குவதுபோல் யுவதிகள் இருதயம் இவருடலழகில் கட்டுண்டது. சந்தன மரத்தின் வாசனைபோல் இவர் புகழ் எங்கும் பாவியது. வானுலக விருக்ஷங்களின் வனப்பைப் பூவுலகினது மரங்கள் மறைக்க இயலாததுபோல் இவரது குடை நிழலை மன்னர் எவரும் குறுக்கிட இயலாது. சூரியன் கிரணங்கள் எல்லோருக்கும் பயன் பயக்குமாறு, இவரது ஒளிமற்றவர்க்கு உதவிபுரியும். (ஸம்ஸ்க்ருத) வியாகரணத்தில் உள்ள ப்ரக்ருதி; ப்ரத்யய, ஆகம, குண, வ்ருத்தி, அபவாதமின்மைபோல்,இவர் பிரஜை (ப்ரகிருதி), அன்பு (ப்ரத்ய

யம்) அதிகம் (ஆகமம்), குணம் தனம் (வ்ருத்தி), இவைகளைப் பெற்று அபவாதமில்லாமல் இருந்தார்கள். நந்தவனம் பாரிஜாத மரத்தை உடைத்தாயது ; எனினும் இவர்கள் அபாரிஜாதநந்தனர்கள், அதாவது, ஜயிக்கப்படாமல் எல்லோருக்கும் ஆனந்தம் அளிப்பவர்கள். கனகமம் (என்றால் கார்காலம்) ஜலமுடையது; ஆனால் இவர்கள் கனகமர் (ஆகமங்கள் படித்தவர்) ஆனாலும் ஜடம் (அவிவேகம்) இல்லாதவர்கள். இந்திரன் சுவர்க்கம் ஆண்டாற்போல் இவர்கள் சக்கரவாள பர்வதம் சூழ்ந்து ஏழு தீபங்களும், சமுத்திரங்களும் நிறைந்த உலகை யாண்டார்கள். வட மொழிப் பயிற்சி பல்லவ அரசர் சன்னிதியி லிருந்த பண்டிதர்களுள் அதிகமாய் இருந்ததென்று காட்ட, இச் சாசனத்தில் உள்ள சிலேடை மிகுந்த சுலோகங்களை ஒரு மொழி இரு பொருள் தெரியுமாறு மொழி பெயர்த்து எழுதியிருக்கிறோம்.

இச் சாசனத்தில் மன்னவனைப் புகழ்ந்திருக்கும் விதம் கவனிக்கத் தக்கது :— ஸ்ரீதரன், ப்போரில் விஜயன் (அர்ஜுனன்), கலைஞானத்தில் கர்ணிஸுதன் (இவனைப் பற்றி காதம்பரி, தசகுமார சரிதை என்னும் இவ்விரு வட மொழிக் கிரந்தங்களிலும் சொல்லி யிருக்கிறது.) கார்முகத்தில் இராமன், வாரண, தந்தி வாத்திய விஷயங்களில் வத்ஸராஜன், வாமவிலோசனார் நடுவில் காமன், கவிபந்தத்தில் நயபரன் (பிருகஸ்பதி), பிரஜைகளை ஆனந்திப்பதில் தருமன (யுதிஷ்டிரன்), நமது சுவாமி பல்லவ குலத்தை உத்தாரணம் செய்வோன், தார்கிக சார்வபௌமன் (பிறவிமன்னன்), அழகன், மற்போரிலும், விநய குணங்களிலும் உயர்ந்தவன், விஜயவிருத்தியுடையவன், ஹிரண்யன் மகன், பீமவர்க்கஸ்தன், ஹரிசாரணன், சுத்தமாதாவின் மகன், இலட்சணமுற்றவன், ரோஹிணி புத்திரன், நரேந்திரன்.

இவன் அளித்த கும்பகோணத்துக் கருகி லுள்ள தண்டன் தோட்டத்துச் சாசன மொன்று உண்டு. அதில் இவனைத் துதித்தவாறு :— ஸ்ரீமான், புத்திமான், பகைவர் கூட்டத்தை ஜயித்தவன், வலிமைக்கு இருப்பிடம், நான்கு சமுத்திரங்களினது தீரம் வரையில் வெற்றியுடன் சென்ற கஜங்களையுடையவன், நந்திவர்மன் என்ற அவன் பெயர் நான்கு திக்குகளிலும் நிறைந்திருக்கிறது. யுத்தத்தில் சர்வ சாஸ்திரங்களினது பிரயோகம் தெரிந்தவன் என்று பெயர் பெற்றவன். இவனை வணங்காத ராஜா மிருகாம்சு, அதாவது இறந்த கிரணங்களையுடைய ஸோமராஜா (சந்திரன்) தான். இவனுக்கு வரிகொடாத நாடு அமர ருலகே; இந்திரனையொத்த இவ்விறைவன் உலகை ஆண்டபோது பிரஜைகளால் அடையமுடியாத இடம் நரகம் ஒன்றே; ஹரி சக்கரத்தைத் தாங்கினதுபோல, நன்மையுள்ளார் கூட்டமென்கிற சக்கரத்தைப் பெற்றிருந்தான்; தேவர் இந்திரனைப் பின் தொடர்வது போல் அறிவுள்ளார் இவனைச் சுற்றியிருந்தார்; இவன் பூமிக்கு நாதன்; நன்னடக்கைமேல் மிகப் பற்றுள்ளவன்; ஏகவீரன் என்று அவனுக்குப் பட்டம் உள்ளது. ஆகையால், பகைமன்னர் இவனைக்கண்டு போரிலிருந்து ஓடிவிடுவர். இவன் கீர்த்தி பத்துத் திக்கிலும் பரவியது.

இவ் விரு சாசனங்களிலும் பலர் நாட்டை ஆண்டவர்களையும், ஆளாதவர்களையும் அரசனது முன்னோர்களாகச் சொல்லியிருக்கிறது. இதற்குப்பின் பிறந்த சாசனங்களிலும், கல்வெட்டுகளிலும் அவ்வாறே வம்சாவளியை வளர்த்தி யிருக்கிறார்கள்.

## ஆட்சி முறை

நந்திவர்மபல்லவன் தானங் கொடுத்த நிலங்களைக் குறிக்கு முறையை ஆராய்ந்ததால் அரசு முறை எத்தகைய

ஏற்பாடாய் நிகழ்ந்ததென்று தெரியவரும். அக் காலத்தில் தானங்கொடுத்த கிராமங்களுக்குத் தானங் கொடுக்கும் போது புதிய பேரிடுவது வழக்கம். உதயேந்திர சாசனத்தால் தானம் செய்த கொற்ற கிராமத்துக்கு உதயேந்திரமங்கலம் என்று பெயரிட்டார். காசாக்குடி சாசனத்தால் ஈந்த கொடுக்கொள்ளி கிராமத்திற்கு ஏகதீரமங்கலம் என்று பெயரிட்டார். தண்டன்தோட்டச் சாசனத்தால் தானம் கொடுத்தபோது அதற்குத் தயாமுகமங்கலம் என்று பெயர் வைத்தார். இந்தச் சாசனங்களில் மூன்று நாட்டுப் பகுதிகள் பெயர்களைக் காணலாம். (1) மேல் அடையாறு நாடு (வட மொழிப் பெயர், பச்சிமாச்ரய விஷயம்) (2) ஊற்றுக் காட்டுக் கோட்டம் (வடமொழியில் உந்திவன கோஷ்டம்). (3) சோழ நாட்டிலுள்ள தென்கரை நறையூர் நாடு. இதனால் தேசத்தைக் கோட்டங்களாயும், நாடுகளாயும் பிரித்து ஆண்டார் என்று அறியலாம்.

உதயேந்திரம் சாசனத்தில் நிலம் தவிர, இரண்டு ஜலயந்திரங்களையும் தானம் செய்தான். தொண்டைமண்டலம் ஆற்றுப்பாய்ச்சல் அதிகமில்லாமல் இருந்த நாடாகையால், இயந்திரங்களை நிலைநிறுத்தி நீரை இறைத்து விவயசாயம் செய்தார் என்று தெரியவருகிறது. அக்காலத்தில் தொண்டைமண்டலத்திலிருந்து, நீர் இறைத்துப் பாய்ச்சுவதில் திறம் அதிகமாய் அடைந்த கார்காத்த வேளாளர் என்பார் சோழமண்டலத்தில் குடியேறி நீரிறைத்து வேளாண்மை செய்தார்கள். பல்லவர் நீர் பாய்ச்சுவதற்காக பல முயற்சிகள் செய்தாரென்பதற்கு அடையாளம் அவர் பல குளங்களை வெட்டினதும், அவைகளுக்குச் சக்கர தீர்த்தம், உரகஹ்ரதம்,சிந்துவாரஹ்ரதம், திரையனேரி முதலிய தனிப்பெயர்களையிட்டு, அப்பெயர்களை இராஜ்யக் கணக்குகளில் பதிந்து

வைத்ததும் ஆகும். ஆறுகளுக்கும் கால்வாய்களுக்கும் இவ்வாறே சேயாறு, வேகவதியென்கிற வெஃகா, தூரசரித்து, க்ஷீரநதி என்ற அரும் பெயர்களுண்டு. தண்டன்தோட்டம் சாசனத்தில் தானம் பெற்றவர் தவிர வேறொருவரும் கால் வாய் வெட்டிக்கொள்ளக் கூடாதென்றும். நீர்வாய்க்கு மேற்புறத்தில் தேக்கி நீரெடுத்துக் கொள்ளவேண்டு மென்றும் கட்டளை யிட்டிருக்கிறதைப் பார்த்தால் அரசர் நீர்ப் பாய்ச்சலைக் குறித்து மிகக் கவனமுற்றவரென்று ஊகிக்கலாம்.

தானம் எவருக்குக் கொடுத்தார்கள் என்பது கவனிக்கத் தக்கது. காசாக்குடி சாசனத்தால் தானம் பெற்றவன் ஜ்யேஷ்டபாத ஸோமயாஜி. அவனைப் பின் வருமாறு வர்ணித்திருக்கிறது:—வேதக்கடலைக் கரைகண்டவன்; இனியரசம் பொருந்திய ஸாமவேதத்தை தனது ரசத்தால் கானம் செய்வோன்! கல்பம், வ்யாகரணம், ஜோதிஷம், நிருக்தம், சிக்ஷை, சந்தோவிசிதி ஆகிய ஆறு வேதாங்கங்களையும் செவ்வையாய் அத்யயன ஸ்வாத்யாயம் செய்பவன்; பதம், வாக்யம், வஸ்து இவைகளினது தர்மம் தெரிந்தவன்; சுருதி, ஸ்ம்ருதி ரஸாயனத்தைப் பானம் செய்தவன்; கர்ம காண்ட, ஞான காண்ட பண்டிதன். உலக யுக்திகளையும் கலைகளையும் நன்குயறிந்தவன். காவிய, நாடக, ஆக்கியான, இதிகாச புராணங்களைக் கற்றவன்; ஸர்வ ஞானமும் விஞ்ஞானம் உணர்ந்தவன். ஸர்வ கர்மாநுஷ்டான நிஷ்டையுடையவன், நன்னடக்கை யுள்ளவன். புவனபவனத்துக்குத் தீபம் போன்றவன். இந்த வர்ணனையிலிருந்து அக்காலத்துப் பண்டிதர் எவ்வளவு அதிகமாகப் படித்தவரென்றும், அதிகமாய்க்கற்றறிந்தோர் வறுமையால் வருந்தாமால் அவரை அரசர் ஆதரித்தாரென்றும் அறியவேண்டும். பண்டிதர்க்குப் பெண்டிர் போட்டுக்கொள்ளும் பதக்கங்களை இக்காலத்தில் கொடுக்கின்

ரூர்களே! அதனால் பயனென்ன; பொருளுதவி யல்லவோ அரசர் அளிக்கவேண்டும்?

தண்டன் தோட்டச் சாசனத்தால் தயாமுகனது வேண்டுகோளின்படி, குமாரன் என்கிற கோசாத்யக்ஷன் (அரசன் பொக்கிஷத்து அதிகாரி)* ஆணத்தியாயிருந்து நந்திவர்மன் 58-வது ஆண்டில் தானம் கொடுபட்டது. இதனால் அந்த ஊரை 308 பிராமணர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்தார்கள். தானம் வாங்கினவர்களுக்கு சதுர்வேதி, ஸோமயாஜி, ஷடங்கவித், க்ரமவித், ஸர்வ க்ரதுயாஜி முதலிய பட்டங்களிலிருந்ததால் அவர்கள் சிறந்த கல்வி யுள்ளவர்களென்று சந்தேக மில்லாமல் சொல்லலாம். அவர்கள் குடிப் பெயர்கள் பல, தெலுங்கு நாட்டு ஊர்களி லிருந்து பிறந்தவைகள். உதாரணமாக, தணுக்கில், காரம்பிச்சேடு, இருங்கட்டி, பிணிக்கிப்பாறு, இத்தகையவை பலவுள. இதனின்று முற்காலத்தில் ஆரியக் கலைகளை இத்தேசம் கொண்டு வந்து பரப்பினவர்கள் தெலுங்கரென்று ஊகிக்கலாம். அன்றியும் இவ்வாறு தெலுங்கர் தமிழ் நாட்டில் பரவி, தமிழருடன் கலந்து, தமிழராய் ஆனது ஆரிய மொழிகள் தமிழில் அதிகமாய்ப் புகுவதற்குக் காரண மாயிற்று என்றும் அறியலாம்.

அக் காலத்தில் தானம் கொடுக்கு முறையைக் காசாக்குடிசாசனத்தி லிருந்தும், தண்டன்தோட்டச் சாசனத்தி லிருந்தும் தெரிந்துகொள்ளலாம். காசாக்குடி சாசனத்தை முதலில் வட மொழியில் எழுதி, பின்பு ஊரார் எல்லோரும் அறிந்து நடத்தி வைப்பதற்காகத் தமிழில் இவ்வாறு ஆரம்பித்து எழுதி யிருக்கிறது.—"கோநேலை, யாண்டிருபத்திரண்டாவது ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நாட்டாருங்

---

* ஆணத்தி = ஆஜ்ஞப்தி = ஆனையை நடத்துவோன்.

காண்க. தந்நாட்டுக் கொடுகொள்ளி முன் பெற்றுரை மாற்றி, பிரமயுவராசன் விண்ணப்பத்தால் கோரசர்மன் ஞணத்தியாக தேவதானப் பிரமதேயம் நீக்கிக் குடி நீக்கி சாமானிய இரண்டு பட்டிப்படியால் பாரத்வாஜ கோத்ராய, சந்தோகஸூத்ராய, பூனிவாஸ்தவ்யாய (பூனியில் வசிப்போனுக்கு) செட்டிரெங்க ஸோமயாஜிக்குப் பிரமதேயமாகப் பணித் தருளி விடுத்த திருமுகம் கண்டு நாட்டோம் நாட்டு வியவன் * சொல்லிய எல்லை போய் படாகை வலஞ்செய்து (சுற்றி வலம் வந்து) கல்லும் கண்ணியு நாட்டிக் கொடுத்தது.'' சாசனத்தின் இறுதியில் இவ்வாறு எழுதி யிருக்கிறது—"நிலைக்கலத்தாரும், அதிகாரரும், வாய்க்கேட்பாரும் உள்ளிருந்து பாதத்தி (தானம்) சென்றது.'' பின்பு வடமொழியில் "ஸ்ரீ பரமேஷ்டி மகாகோஷ்டாகாரியால் எழுதப் பெற்றது'' என்று இருக்கிறது.

இதனால் தானம் செய்யு முன் மந்திரி ஒருவன் விண்ணப்பம் செய்ய அரசன் ஆணையிட்டு, பின்பு ஆணத்தி (ஆஞ்ஞப்தி) கட்டளை யனுப்பி பின்பு ஒரு கவி ப்ரசஸ்தி (தோத்திரம்), கவனம் செய்து, எல்லாவற்றையும் சேர்த்து, கோட்டாகாரி திருமுகம் (கோஞேலை) அனுப்பி, பின்பு அதிகாரிகளும், வாய்க் கேட்பாரும், ஊரில் வாழ்வோரும் ஒன்று கூடி எல்லையைக் குறித்து, நிலத்தை ஒப்புவிப்பது வழக்கம் என்று தெரியவருகிறது. பின்பு தட்டான் சாசனத்தைச் செப்புப் பட்டயத்தில் வெட்டி, அரசன் முத்திரையையும் இட்டுக் கொடுப்பர்.

காசாக்குடி சாசனத்தில் எல்லை முதலியவற்றைக்குறித்திருக்கும் விதத்தைக் காட்ட, அதிலிருந்து ஒரு மேற்கோளை

---

* வியவன் என்றாலும் விசவன் என்றாலும் ஏவுவான், வழி செய்வான் என்பது பொருள்.

எழுதுவாம். "கீழ்பால் எல்லை, பாலையூரெல்லையின் மேற்கும்; தென்பாலெல்லை, பாலையூரெல்லையின் வடக்கும்; மேல்பாலெல்லை, மணற்பாக்கத் தெல்லையென்னும் கொள்ளிப்பாக்கத் தெல்லையின் கிழக்கும்; வடபாலெல்லை, வெளிமானல்லூ ரெல்லையின் தெற்கும், இந் நாற்பேரெல்லையுள்ளும் அகப்பட்ட நீர்நிலனும், புன்செய்யையும், உடும்போடி ஆமை தவழ்வதெல்லாம் சேயாற்றுலும் வெஃகாவிஞலும் திரையனேரியாலு நீரீய்ந்த வழி ஆற்றுக்காலும் வெள்ளக்காலும் தோண்டிக் கொண்டுண்ணப் பெறுவாராகவும். இக்கால்களுக்கு கொல்கலமும், புழுதிபாடும், பெறுவதாகவும், இக் கால்களில் கூடை இறைத்தும் குறங்கறுத்தும், குற்றேத்தம் பண்ணியும் கொண்டுண்டார் கோக்கொள்ளும் தண்டப்படுவதாகவும், மனையும் மனைப்படப்பும் பிறரும் இவரும் இவர் வழிக் கண்ணரும் மாடமும் மாளிகையும் சூட்டிட்டிகையால் எடுத்துக்கொண்டிருக்கப் பெறுவாராகவும்."

இந்தச் சாசனங்களை ஆராய்ச்சி செய்வதால் நிலவரியைத் தவிர, சில காணிக்கைகளைத் தள்ளிவிடுதல் (பரிகாரம்) என்ற வழக்கம் உண்டு என்று தெரியும். இவ்வாறு பரிகாரம் செய்த காணிக்கைகளாவன :— "செக்கும், தறியும், உல்லியக் கூலியும், பிராமணராசாக்காணம், செங்கொடிக்காணமும், கல்லால்காணமும், கண்ணிட்டுக் காணமும், கதிர்க்காணமும், விசக்காணமும், குசக்காணமும், அரிகொழியும், நெய்விலையும், பட்டகவிலையும், பட்டிகைக்காணமும், இருமையும், நாயாடிகளும், தூதுவரும், கணிகாரத்திகளும், பண்ணுப்பாவெடுப்பாரும், புதுக்குதிரைக் குற்றதும், வையும் புல்லும் இருமையும், நல்லாவும் நல்லெருதும்

---

உல்லியர் என்றால் கிணறு வெட்டுவோர்

காணம் என்றால் காசு, பொன்.

இருமையும், நாட்டுவகை இருமையும், படாங்கழியும், கையாளும், நெடும்பறையும், பனம்பாகும் இருமையும், காணத்தண்டமும், அதிகாணத்தண்டமும், பத்தூர்ச் சாற்றும், உமைய வளப் பள்ளிவத்துவும் இருமையும் குவளை நடுவரியும், குவளைக் காணமும், கமுகும் தெங்கும் உள்ளிட்ட வல்லுருவில் படியமரமும், இட்டனகால் கோட்டிருமையும் கோயில் முதல்படியால் இராது இவர் தாமே உண்ணப் பெறுவாராகவும்.''

தண்டம் தோட்டச்சாசனத்தில் பின் வருமாறு இவைகளைச் சொல்லியிருக்கிறது.

"செக்குத் தறியும் உல்லியக்கூலியும், கண்ணாலக்காணமும், ஊரெட்டும், குசக்காணமும், தட்டுக்காணமும், ஈழம்பூச்சியும், இடையும் கூலமும். தரகுபாட்டமும், புதாநாழியும், முன்னிட்டு கோத்தொட்டுண்ணப் பாலன எவ்வகைப் பட்டனவும் இராது இவ்வூர் பெற்ற பிராமணரே உண்ணப் பெறுவாராகவும்.''

இவ்விரு மேற்கோள்களில் பொருள் விளங்காப் பெயர்கள் பலஉள.

தண்டன் தோட்டச் சாசனத்தால் ஊரைப் பல பங்குகளிட்டுப் பலருக்குக் கொடுத்தாரென்றேம். சாசனம் எழுதினவன் ஐயசன் பரமேச்வரன் உத்தரகாரணிகன். அவனுக்கு இரண்டு பங்குக் கிடைத்தது. திருவடிகளுக்கு ஐந்து பங்கும், மகாதேவனுக்கு இரண்டு பங்கும், கிராமத்தில் பாரதம் படித்து அர்த்தம் சொல்வோனுக்கு ஒரு பங்கும், ஊர் மத்தியஸ்தர்கள் மூவரில் ஒவ்வொருவர்க்கு ஒரு பங்கும் கிடைத்தது. அம்பலத்தில் "தண்ணீரட்டு வார்க்கும் தீயெரிப்பானுக்குமாகப் பங்கொன்று" கொடு

பட்டது. இதனால் ஒவ்வொரு ஊரில் ஒரு அம்பலம் இருந்ததென்றும், அதில் நித்தமும் ஒரு பண்டிதன் பாரதம் படித்து மக்களுக்கு உரை சொன்னானென்றும், சண்டை சச்சரவு பிறந்தால் கிராம மத்தியஸ்தர் அதை விசாரித்து ஒழித்தாரன்றி இப்போது நடக்குமாறு வாதங்கள் நிகழவில்லை என்றும், அம்பலத்தில் நீரும் நெருப்பும் வைத்து எல்லோருக்கும் கொடுத்தாரென்றும் அறியலாம். எவனாவது கெட்ட ஒழுக்கமுடையவனானால் அவனைச் சாதியிலிருந்து விலக்கி, அவனுக்கு நீரும் நெருப்பும் கொடுப்பதை விட்டுவிடுவார். அதனால் இக்காலத்தில்கூட ஒருவனைச் சாதியிலிருந்து ஒதுக்க அவனுக்கு "நீரும் நெருப்பும் கொடுக்க மாட்டார்" என்ற மொழியைப் பொருள் விளங்காது வழங்குகிறோம். ஏனென்றால் நெருப்புப்பெட்டியும், குழாய் நீரும் அகப்படும் இக்காலத்தில் இந்த ஆசாரத்துக்கு இடமில்லை.

தண்டன் தோட்டம் கும்பகோணத்துக்கு அருகிலிருக்கிறது. பல்லவர் காலத்தில் கும்பகோணம் ஒரு தலை நகரமாயிருந்தது. அவ்வூருக்கு அடுத்த நாதன் கோயிலுக்கு நந்திபுரமென்று பெயர். இவ்வூரிலிருந்த கோட்டையில் நந்திவர்மன் இருந்தபோது அவனைச் சித்திரமாயனும் பாண்டியன் மான் தேர் மாறனும் முற்றுகை போட்டுத் தோல்வியுற்றார். பல்லவருக்கும் பாண்டியருக்கும் நிகழ்ந்த போர்களில் பல கும்பகோணத்தருகில் நிகழ்ந்தன. ஏனெனில் கும்பகோணம் கச்சிக்கும் மதுரைக்கும் உள்ள சாலையில் நடுவிலிருக்கிறது.

## சமய நிலை

சைவமும் வைஷ்ணமும் பரவினதால் சமணமும் பௌத்தமும் குன்றியன. எனினும், கொஞ்சம் இருந்தன. அதனால் திருமங்கையாழ்வார் அச்சமயங்களைத் தழுவியிருந்தவர்களை இகழ்ச்சியாய்,

பொங்கு போதியும் பிண்டியுமுடைப்
புத்தர் நோன்பியர் பள்ளியுள்ளுறை
தங்கள் தேவரும் தாங்களுமேயாக
என்னெஞ்ச மென்பாய்
எங்கும் வானவர்தானவர் நிறைந்
தேத்தும் வேங்கடமேவி நின்றருள்
அங்கணாயகர்க்கு இன்றடிமைத்
தொழில் பூண்டாயே. — என்றும்,

பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந்துண்ணும்
உண்டியான் சாபந்தீர்த்த வொருவனூர். — என்றும்,

துவரித்த வுடையவர்க்கும் தூய்மையில்லாச் சமணர்க்கும்
அவர்கட்கு அங்கருளில்லா வருளானே. — என்றும்,

வெள்ளியார் போதியாரென் றோதுகின்ற கள்ள நூல்,
என்றும் கூறியுள்ளார்.

இச் சமயங்களன்றி, உலகிலெல்லாம் பிரமமென்ற ஒரு பொருளே உளது. அதுவே மெய்ப் பொருள். மற்றவை பொய்ப் பொருள் என்னும் அத்துவித வேதாந்தம் என்கிற கொள்கையும் கல்விமிகுந்தோர் உள்ளத்தில் பரவிற்று. இந்த வேதாந்தத்தைக் கேரளத்தில் நம்பூதிரி குலத்தில் உதித்த சங்கராச்சாரியர் தம்வடமொழி நூல்களில் விவரமாய் எழுதியதுமன்றி, இந்தியநாடு முழுதும் யாத்திரைசெய்து எல்லோருக்கும் போதித் தருளினர். உதயேந்திர சாசனத்தின் முதல் சுலோகத்தில் இக் கொள்கையே குறித்திருக்கிறது.

---

போதி, பிண்டி=மரங்கள், நோன்பியர்=நோன்பையுடையவர், அங்கணாயகர்=அழகிய கண்ணையுடைய நாயகர், பிண்டியார்=பௌத்தர், உண்டியான்=உணவையுடையவன், துவரித்த உடையர்-துவராடையார்-காவியாடையார், தூய்மை=பரிசுத்தம்.

அதன் பொருள் :— "மூவ்வுலகுக்குச் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரணமான பரப்பிரமம், ஸத்யம், அநந்தம், அநாதி, ஞானம், ஏகம் அம்ருதபதம் ஜ்யிக்க.'' இந்த சுலோகத்துக்குப் பின்பு திருவிக்கிரமனையும், ஹரனையும், பத்மா, ஆர்யா, விநாயகரையும் பொருளாகக்கொண்டு துதித்திருக்கிறார்கள்.

நந்திவர்மன் காலத்தில் தேவாரம் எவரும் பாடவில்லை.

நந்திவர்ம பல்லவ மல்லன் வைஷ்ணவன் என்று முன்பு மேற்கோளாய்க் காட்டின விண்ணகரப் பாசுரங்களால் தெரியவரும். அன்றியும் காசாக்குடிச் சாசனத்தில் நந்திவர்மன், அரிசரணபரன் என்றும், தண்டன் தோட்டச் சாசனத்தில் முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறொன்றிற்கும் அவன் தலை வணங்க வில்லை யென்றும் சொல்லி யிருக்கிறது. அன்றியும் இவன் ஆண்ட காலத்தில் திருமங்கை மன்னன் விஷ்ணு ஸ்தலங்கள் பலவற்றிற்குப் போய் பக்தி ரச மிகுந்த பாசுரங்களைப் பாடி வைஷ்ணவத்தைப் பரவச் செய்தார்.

பல்லவ மல்லன் காலத்தில் காஞ்சிபுரத்தி லுள்ள முக்தேச்வரன் கோயிலும், கூரத்திலிருக்கும் கேசவப்பெருமாள் கோயிலும், திருவதியிலிருக்கும் விரட்டானேச்வரன் கோயிலும், புதுக்கோட்டை நாட்டிலிருக்கும் குன்றாண்டார் கோயிலும் கட்டப் பெற்றன.

நந்திப்போத்தரைய பல்லவ மல்லன் காலத்தில் வைஷ்ணவமும், சைவமும் நாடெல்லாம் பரவியும், சமண நெறி முழுவதும் அழிந்து போகவில்லை. ஆர்க்காடு நகர்க் கருகில் உள்ள பஞ்சபாண்டவர் மலையென்றும், திருப்பான் மலையென்றும் பெயருள்ள குன்றின் மேல் சமணர்கள் குகைகளில் வசித்திருந்தார்கள். அக் குகைகளில் சமண விக்கிர

பத்மா = இலட்சுமி, ஆர்யா = பார்வதி.

கங்களைச் செதுக்கியிருக்கிறார்கள். ஒன்றின் கீழ் பின் வரும் கல்வெட்டு உண்டு :— நந்திப்போத்தரையர்க்கு ஐம்பதாவது நாகநந்தி குரவர் இருக்க பொன்னியக்கியார் படிமம் கொட்டு வித்தான். புகழாலை மங்கலத்து மருத்துவர் மகன் நாரணன். இயக்கி என்றால் யக்ஷி என்றது. வெட்டுவித்தவன் பெயர் நாரணனானதால் வைணவருக்கும், சமணருக்கும் போரில்லாமல் சினேகமிருந்தது என்று ஊகிக்கலாம்.

## மறு மன்னர்கள்

பல்லவ மல்லன் ஆட்சியின் முதற்பகுதியில் அரசு புரிந்த பாண்டியன் இறயனு ரகப்பொருளுரையில் கலந்திருக்கும் கோவையின் நாயகனான பராங்குசன். இவன் போர்கள் பல புரிந்தான். விழிஞம், கோட்டாறு, பூலந்தை, நறையாறு, கடையல் முதலிய இடங்களில் சேரருடனும், நெடுவாயல் குறுமடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை, பூவாளூர், கொடும்பாளூர், சங்கரமங்கை முதலிய இடங்களில் பல்லவருடனும், செந்நிலம், பாழி, மாத்தூர், நெல்வேலி, வல்லம், மணற்றி, களத்தூர், நெடுமங்கலம், குளந்தை முதலிய இடங்களில் வேறு மன்னர்களோடும் போர் செய்தான். இவனுக்கு அரிகேசரி, இராஜோதயன், விசாரிதன், சத்துரு துரந்தரன், விஜய சரிதன், வரோதயன், மானதன், மான் தேர் மாறன், என்று பல பட்டப் பெயர்களுண்டு. இவனது தந்தையான சடையன் பரமேச்வரனுக்கு உதவி செய்து முதல் விக்கிரமாதித்தியனைத் தோல்வியடித்து, இருவரும் தோழரானதால், பரமேச்வரன் மகனுக்கு இட்டது போல் இவன் மகனான சடையன் மாறன் பராங்குசனுக்கும் ராஜஸிம்ஹன் என்ற பெயரையும் இட்டார்கள். பராங்குசன் காவிரியைத்தாண்டி, மலைக் கொங்கநாட்டை ஜயித்து, பாண்

டிக்கொடுமுடியில் பசுபதியைத் தொழுது, பொற்குவியல்களும், மணிக்குவியல்களும் கொடுத்தான். கோஸஹஸ்ரம், ஹிரண்யகர்ப்பம், துலாபாரம் முதலிய வைதிக கருமங்களைச் செய்தான். கூடல், வஞ்சி, கோழி என்னும் பாண்டிய, சேர, சோழத் தலை நகர்களில் புதிய மதில்களைக் கட்டினான். மழவ நாட்டரசன் பெண்ணை மணம்புரிந்து சடையனென்னும் மகனைப் பெற்றான். கங்கை குலத்தரசனான சிவமாறனுக்கு இவன் உறவினன். நெடுமாறன் என்று நூல்களில் வரும் அரசர்களில் இவன் ஒருவன்.

இவன் மகன் பராந்தகன்; மாறன் சடையன் என்னும் பெயர் இவனுக்குண்டு. மாறன் சடையன் என்றால் மாறனது மகன் சடையன். என்றவாறு இவன் கி. பி. 769-ம் ஆண்டில் சிம்மாசனம் ஏறினான். தன் சாசனமொன்றில் தான் பரம வைஷ்ணவனென்று சொல்லியிருக்கிறான். மதுரையில் பராந்தகனும், கச்சியில் பல்லவ மல்லனும், இருவரும் வைஷ்ணவ மன்னராதலால் அச் சமயம் மிகப் பரவியது. அப்போதே குலசேகரப்பெருமாள் என்ற கேரள மன்னனும் ஆண்டான் போலும். பராந்தகனது முதல் மந்திரி மாறன்காரி, வைத்தியகுலத்தவன், கரவந்தபுரத்தவன். கி. பி. 770-ம் ஆண்டில் மாறன்காரி ஆனைமலையில் நரஸிம்ஹாவதாரப் பெருமாளுக்கு ஒரு குகைக்கோயில் குடையச் செய்வித்து, ஒரு அக்கிரகாரத்தைப் பிராமணர்களுக்குத் தானம் செய்து, காலஞ்சென்றான். பின்பு இவன் தம்பி மாறன் எயினன் என்னும் பாண்டிமங்கல விசையரையன் உத்தரமந்திரியாய், அக்குகைக் கோயிலுக்கு முகமண்டபம் செய்வித்து நீர்த்தெளித்தான். இவ்வரசனது 6-ம் ஆண்டில் சாத்தகன் கணவதி என்னும் பாண்டியமிர்த மங்கலவரையன் மகா சாமந்தன் ஆனான். மாறன்சடையன் 17-ம்

ஆண்டிற்கு முன் விண்ணம், வெள்ளூர், செழியக்குடி, என்னும் ஊர்களில் போர்செய்து வெற்றி பெற்றான். அன்றியும், ஆயிரவேலி, அயிரூர், புகலியூர், இவ்வூர்களில் கொங்க நாட்டரசன் அதிகன் மேல் ஜயமுற்று, அவனுக்கு உதவியாய் வந்த பல்லவரையும் சேரரையும் விரட்டியடித்து கொங்கு அரசனை மதுரைக்குச் சிறையாய் அனுப்பினான். காவிரிக்கு வடபுறத்திலுள்ள பெண்ணாகடத்தில் காடவனொருவனையும், ஆயவேளையும், நாட்டுக்குறும்பியில் குறும்பரையும் ஜயித்தான். கோயம்புத்தூரிலிருக்கிற காஞ்சி வாய்ப்பேரூரில் ஒரு பெரிய விஷ்ணு வாலயம் கட்டினான். பின்பு வேணாடுபோய் அதன் அரசனை விண்ணுலகம் சேரச்செய்து, அவனது கோட்டையான விழிஞத்தை இடித்துவிட்டான். பின்பு கரவந்தபுரத்தில் உயர்ந்த மதில்களும் ஆழ்ந்த அகழ்களும் உள்ள கோட்டை ஒன்றைக் கட்டினான்; ஆனால் இக்கோட்டையைச் சேரன் முற்றுகையிட்டு, பாண்டிய சேனையை யழித்தான்.

பராந்தகனுக்கு நெடுஞ்சடையனென்று பெயருண்டு, இவன் வட்டெழுத்தென்ற பழய தமிழெழுத்தில் வெட்டுவித்த சாசனங்கள் அகப்பட்டிருக்கின்றன. இவனுக்கு ராஜஸிம்ஹன் என்ற மகன் உண்டு. ஆனால் அவன் நீண்டகாலம் ஆண்டதாகக் காணோம்.

பல்லவமல்லன் ஆட்சியின் நடுவில் (கி. பி. 754) 760-ல் சளுக்கர் பலம் குறைந்து, அவர் நாட்டின் ஒரு பகுதியை இராஷ்டிர கூடர் பற்றிக் கொண்டார்கள். இராஷ்டிர குலத்து முதலரசன் தந்திதுர்கன் என்றும், தந்திவர்மன் என்றும் பெயர் கொண்டவன்; இவன் சளுக்கர் ஆட்சியைத் தொலைத்து, அவர் நாட்டைப் பற்றிக்கொண்டு, பிருதிவீ வல்லவன் என்ற பட்டத்தையும் பெற்றான். அன்றியும்

காஞ்சி, கலிங்க, கோசல, ஸ்ரீசைல, மாளவ, லாட நாட்டரசர்களை ஜயித்ததாகத் தன் சாசனத்தில் எழுதி யிருக்கிறான் ; என்றால் இம் மன்னர்களெல்லாம் இவன் மகிமையை ஒத்துக்கொண்டு மரியாதை செய்தார்களென்பது பொருள்.

பல்லவமல்லன் காலத்தில் கங்கை குலமன்னனாக இருந்தவன், சிவமாறனென்பான். இவனிடமிருந்து உக்கிரோதயம் என்ற பெயருள்ள பல இரத்தினங்கள் இழைத்த ஆதிசேஷனுருவைக்கொண்ட ஒரு மாலையைப் பல்லவன் பெற்றான் என்று தண்டன் தோட்டத்துச் சாசனத்தில் சொல்லி யிருக்கிறது. இதனால் திருமங்கையாழ்வார் "பாம்புடைப் பல்லவர்கோன்", என்று புகழ்ந்துபாடினார்.

பெரும்பாண ரென்றவர் கி. பி. 4-ம் நூற்றாண்டிலிருந்து தமிழ் நாட்டிற்கும் தெலுங்கு நாட்டிற்கும் நடுவில் ஆண்டார் என்றோம். இவர் நாட்டுக்குப் பல்லவ மல்லன் காலத்தில் மகத நாடு என்ற பெயர் உண்டு என்று தெரியவருகிறது ; அரசர்க்கும் மகதேசர் என்றும், ஆறைக் காவலரென்றும், வாணாதிராய ரென்றும் பெயருண்டு.

செங்கற்பட்டு ஜில்லாவில் பாலாற்றின் உப நதியான நீவா நதியின் மேல் கரையில் திருவல்லம் என்ற கிராமம் இருக்கிறது. அதற்கு முன்காலத்தில் வாணபுரம் என்று மற்றொரு பெயருண்டு ; பாணருடைய தலை நகராய்ப் பல காலம் வாழ்ந்தது. இதற்குத் தீக்காளிவல்லம் என்றும்பெயர்உண்டு. இந்த ஊரில் நந்திவர்ம பல்லவமல்லன் காலத்துக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இது திருவல்லத்தில் பல்லவர் கீழ் குறுநில மன்னராயாண்ட பாண அரசாது நந்திவர்மன் காலத்துப் பாண அரசன் பெயர் 'மகாவலி வாண ராயர். அவன் கல்வெட்டு பின்வருமாறு :—

"ஓ௦ நமச்சிவாய ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசயநந்தி விக்கிரம வர்மற்குயாண்டு 62-வது ஸகல ஜகத்ரயாபி வந்தித ஸுரா ஸுராதீசபரமேச்வர ப்ரதிஹாரிக்ருத மகாவலிகுலோத்பவ ஸ்ரீ மாவலிவாண ராயர் வடுகவழி பன்னீராயிரமும் ஆளவா ணபுரத்து வடசிகர கோயில் புதுக்குவித்து இதற்கு இளங் கிழவர் மகன் மன்றுடிடை அழிஞ்சிற்களம் பட்டி விலைக்கு கொண்டு கொடுத்தேன். ஊற்றுக் காட்டுக் கோட்டத்து அளிங்கணப்பாக்கத்து கீழகத்து தட்டான் மாதன் மகன் அரிதீரன் கொடுத்த தேவர்போகம். மகாவலிவாண ராயர் பிடாகை (கிராமம்) வலஞ்செய்து கொடுத்தார். இது காத்தார் அடியேன் முடிமேலே. இது அழித்தான் மடிகை ஏழாயிர வரையும் கொன்ற பாவத்துப்படுவான்.' இது அழித்தான் இப்பாவத்துக்கு அஞ்சாஞயில் அன்றுள் கோயிலுக்கு ஆயி ரம் காணம் தண்டப்படுவோம் வாணபுரத்தோம்."

விக்கிரமாதித்திய மாவலிவாணராயர் என்னும் பாணத் தலைவன் பல்லவமல்லன்கீழ் குறுநிலமன்னஞ யாண்டான் என்றேம். இவனது கல்வெட்டு மற்றென்று திருவிப்பிரம் பேடென்று பழையகாலத்தில் பெயரும், இப்போது சித் தூர் ஜில்லா காளஹஸ்தி ஜமீந்தாரியில் குடிமல்லம் என்ற பெயருமுள்ள கிராமத்தில் அகப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு :—

ஸ்வஸ்திஸ்ரீ நந்திப்போத்தரையர்க்கு யாண்டு இரு பத்து மூன்றுவது விக்கிரமாதித்த மாவலிவாணராயர் வடுக வழி மேற்கு பிருதிவிராஜ்யஞ்செய திருவிப்பிரம்பே டாளுங் கணத்தாருள் முள்ளிற்கிழார் வேப்பம்போழப்பாழ் இவ்வூர் ஆளுங்கணத்தாருள் குழைப்பஹர் கணியர் அக் கினிசர்மன் விலைசிராவணையால் (விக்கிரயசாசனத்தால்) விற்றுக்கொண்டு இவ்வூர் பரசுராமீசுவரத்து மகாதேவர்க்கு

திருவிளக்கு நெய்ப்புறமாகக் கொடுத்தார். இவ்வூர் சபையோமும் இந்நிலத்தே இவ்வூர்ச், செக்குள்ளான எல்லாம் நட்டுத் திருவிளக்கே வாய எண்ணெய் கொள்வதாகப் பணிந்தோம்.

இந்தக் கல்வெட்டில் சொல்லி யிருக்கும் ஆளுங் கணத்தார் அரசனுக்குப் பிரதியாய் ஊரின் (இராஜ்ய) பரிபாலனமெல்லாம் செவ்வையாய்ச் செய்தார் என்றும், ஸ்ரீகாரிய (கோவில் பரிபாலன) த்தைச் சபையார் பார்த்து வந்தாரென்றும் அறியலாம்.

வைகுண்டநாதப் பெருமாள் கோயில் கல்வெட்டில், முத்தரையன் என்ற மொழி இருக்கிறதாகச் சொன்னோம். அக்காலத்தில் ஆண்ட—முத்தரையன் பெயர் (இரண்டாவது) பெரும்பிடுகு முத்தரையன். இவன் தான் பல்லவமல்லனை நகரத்தார் அரசனாகத் தெரிந்தெடுத்தபோது, கூட இருந்து அரசனுக்கு அபிஷேகம் 'செய்வித்திருக்க வேண்டும். இவன் இளங்கோவதியன் மகன். இவனுக்குச் சுவரன், மாறன், நெடுமாறன், தஞ்சைக்கோன், வல்லத்துக்கோன் என்ற தமிழ்ப் பட்டங்களும், பல வட மொழிப் பட்டங்களும் உண்டு. முத்தரைய மன்னரில் அதிகமான மகிமையுற்றவன் இவனே. இவன் தஞ்சைக்கடுத்த நியமத்தில் பிடாரி கோயில் கட்டி அதன் தூண்களில் கல்வெட்டுகள் வெட்டுவித்தான். அவைகளில் அவன் வம்சாவளியையும் புகழையும் பாடின பாட்டுக்களுண்டு. பிற்காலத்தில், இக் கோயிலை இடித்து, தூண்களைக் கல்வெட்டில் ஒரு பகுதி போகும்படிச் சீவி, செந்தலைக் கிராமத்துக்குக் கொண்டு வந்து அவைகளைக்கொண்டு சிவன் கோயில் கட்டி விட்டார்கள்.

பெரும்பிடுகு முத்தரையனுக்குத் தலைநகர்களாய் தஞ்சையும் அதற்கடுத்த வல்லமும் இருந்தன. கி. பி. 860-இல் இவ்வூர்களைத் தஞ்சைப் பெருஞ்சோழரில் முதல்வனும் அச்சோழராட்சியை நிலை நிறுத்தின விஜயாலயன் என்பவன் பிடித்தான். அதுவரையில் முத்தரை யரசாட்சி நிகழ்ந்தது. பெரும்பிடுகு முத்தரையன் பல போர்களில் வெற்றிபெற்ற வீரன். இவன் நாட்டுக் கடுத்த நாடு கோனாடு. அதிலுள்ள கொடும்பையில் இருக்குவேளிர் ஆண்டார். அவரைப் பெரும்பிடுகு முத்தரையன் தோல்வி யடித்து, அவரது நகரங்களில் ஒன்றான கண்ணனூரைப் பிடித்துக்கொண்டான். இந்தக் கண்ணனூர் என்பது ஸ்ரீரங்கத்துக் கருகிலுள்ள சமயவரமே.

பின்பு பெரும்பிடுகு முத்தரையன் மேற்குக் கரைத் துறைமுகமான காந்தளூர்ச்சாலையில் சேரருடன் கடற்போர் செய்து ஜயித்தான். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மணலூர், திங்களூர், வேங்கோடல், அழுந்தியூரிலும், புதுக்கோட்டை நாட்டிலுள்ள அண்ணல்வாயில் (அன்னவாயில் போலும்), செம்பொன்மாரி (பொன்னமராவதி)யிலும், இன்னும் மாரங்கூர், புகழியிலும் யுத்தம் செய்து வெற்றி யடைந்தான். இந்தப் போர்களில் சிலவற்றில் பல்லவனுக்கு உதவியாகவும், பாண்டியனுக்கு எதிராகவும் இவன் போர் புரிந்தான். பெரும்பிடுகு என்பது நந்திவர்மனது பட்டப் பெயரில் ஒன்று. முத்தரையன் இவன் கீழ் குறுநில மன்னனாகையால் இப் பெயரைத் தானும் வைத்துக்கொண்டான்.

இவ் வரசர்களைத் தவிர, வனவாசியில் கதம்ப மன்னர் ஆண்டுகொண் டிருந்தார். ஆனால் கங்கை குல மன்னர் செல்வாக்கு உயர்ந்து வர வரக் கதம்பரது குறைந்து, சிற்றரசரானார்கள்.

முத்தரைய வேந்தர் மற்றைய மன்னர்களைப் போல் கவிகளை ஆதரித்தார். பெரும்பிடுகு முத்தரையனைப் பாடிப் புகழ்ந்தவர் ஆசிரியர் அனிருத்தனாரும், கோடாற்று இளம் பெருமானாரும், கீழார்கூற்றத்துப் பலதாயமங்கலத்து அமருண்ணிலையாயின குவாவன் காஞ்சனும், பாச்சில்வேள் நம்பனும் ஆவர். அவர் பாட்டு நடையைக் காணச் செந்தலைக் கல்வெட்டு தவிர வேறு வழியில்லை. அக் கல்வெட்டும் சிதைந்து அழிந்து போயிருப்பதால் பல பாட்டுகள் முழுவதும் அகப்படவில்லை. ஆனாலும் பின்னிருக்கும் மேற்கோள்களிலிருந்து செய்யுள் நடையை அறியலாம். அவைகளில் அவன் போர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறது.

வாளமருள் வாகைப் பூக்குஞ்சிக்
கழல் கண்ணிக்
கோறமாறன் றஞ்சைக் கோன்
கோளாளி மொய்ம்பிற்
கொடும்பளூர் காய்ந் தெரிந்தான்.

எரிவிசும்பு மிரு நிலமாய்த் தென்பவான் மாறன்
செருவேன் மறங்கனன்று சீறக்கொடி மாடத்தண்
கொடும்பைக்கூடாத மன்னர் நெடுமதிலெடுத்த நீறு.

எண்கினிருங் கிளையு மேறற்கரிய வேய்வண்கைச்
செருமாறன் வாள்காய்த்தி விண்படர்வான் செய்
நாடு தாழூர்ந்த மாடக்கண்ணனூர்க் கோநா
டர்புக் கொளிந்த குன்று.

---

வாகைப்பூ = வெற்றிமாலை, குஞ்சி = கூந்தல், கழல் கண்ணி = ணக்கும் மாலை, ஆளி = சிங்கம், மொய்ம்பு = பலம், எரி = நெருப்பு, சும்பு = ஆகாயம், செரு = போர், கனன்று = கோபித்து.

பல்லவமல்லன் காலத்துக் கவிகளில் எல்லோரினும் மிக உயர்ந்தவர் திருமங்கையாழ்வாரே. இவருக்குப் பிறந்த போதிட்ட பெயர் நீலன்; கலியன் என்றும் மற்றொரு பெயரு முண்டு. சோழ மண்டலத்தில் திருமங்கை நாட்டிலுள்ள கள்ளக்குடியில் ஒரு சேனைத் தலைவனது மகன். சில நாள் குறுநில மன்னனாய் வாழ்ந்து, பின்பு திருமாலிடத்து அன்பு மிகுந்து ஊரூராய் யாத்திரைசெய்து, 88 திருப்பதிகளிலுள்ள விஷ்ணு அவதாரங்களைப் பற்றிப் பல பாசுரங்களைப் பாடினார். இவர் இயற்றிய நூல்கள் (1) **பெரியதிருமொழி, (2) திருக்குறுந்தாண்டகம், (3) திருநெடுந்தாண்டகம், (4) சிறிய திருமடல், (5) பெரிய திருமடல், (6) திருவெழுக்கூற்றிருக்கை.** இவர் காலத்திலேயே இவரை எல்லோரையும்விட பெருங்கவி என்று அனைவரும் ஒப்புக்கொண்டு இவருக்கு 'நாற்கவிப்பெருமான்' என்று பட்டமிட்டார். அவரும் தன் கவியை 'கலியன்சொன்ன சங்கமுகத் தமிழ்மாலை' என்று சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டில் வைஷ்ணவரும் மற்றவரும் இவர் பாடல்களை மிக்க கொண்டாடுவார். அவற்றில் இனியவை சிலவற்றைக் கீழே எடுத்து வரைவாம். நாராயண நாமத்தின் மகிமையைப் பற்றி,

எம்பிரானெந்தை என்னுடைய சுற்றம்
எனக்காக என்னுடைய வாணாள்
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்தவெம் மண்ணல்
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயில் வணங்கி
நம்பிகாள் உய்யநான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

---

வாணாள் = வாழ்நாள், வெருக்கொள = அச்சங்கொள, செகுத்த - ஒழித்த, வம்புலாம் - வாசனைநிறைந்த, உய்ய-பிழைக்க.

குலந்தரும் செல்வந் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெரு நிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினுமாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

திருவேங்கடப் பாசுரங்களும் மிக அழகியவை.

தாயே தந்தை யென்றும் தாரமே கிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேனுன்னைக் காண்பதோராசையினால்
வேயேய்ப்பூம் பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னையாட் கொண்டருளே.

வந்தாயென் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்
நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பீ
சிந் காமணியே திருவேங்கடம் மேய
எந்தா ய் இனி யானுன்னை என்றும் விடேனே.

திருவல்லிக்கே ரிப் பெருமாள் கோயில் பல்லவர் கட்டின
தென்று பின்வரும் ஆரைப் பாசுரத்தால் தெரியவரும்.

மன்னு தண் பொழி லும் வாவியும் மதிளும்
மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலை
திருவல்லிக்கேணி நின்றானை.

---

நிலந்தரம் = அழிவு, நீள் விசும்பு = வீடு, தாரமே = மனைவி
வேய் = மூங்கில், மன்னி = நிலைபெற்று, எந்தாய் = என்
தையே, தண் = குளிர்ந்த.

எனினும் இப்போதிருக்கும் கோயில் பிற்காலத்தில் இடித்துத் திருப்பிக் கட்டப்பெற்றது. திருச்சித்திர கூடத்திலும் பல்லவன் பணிந்தான்.

பைம்பொன்னு முத்தும் மணியுங் கொணர்ந்து
படை மன்னவன் பல்லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்ததில்லைத்
திருச்சித்திர கூடஞ் சேர்மின்களே.

திருவரங்கப் பாசுரங்களின் அழகைக் காட்ட இரண்டு பாசுரங்களை எழுதுவாம்.

பொய் வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்நின்ற வித்தகனை
மைவண்ணம் கருமுகில் போல் திகழ்வண்ண மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனை யான் கண்டது தென்னரங்கத்தே.

பொன்னும் மாமணியும் முத்தமும் சுமந்து
பொருதிரை மாநதி புடைசூழ்ந்து
அன்னமாடலவு மலைபுனல் சூழ்ந்த
அரங்கமா நகரமர்ந்தானை
மன்னுமா மடமங்கையர் தலைவன்
மானவேற் கலியன் வாயொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப்பாரே.

திருவரங்கப் பாசுரமொன்றில் பல்லவர் கோனொருவனைப்பற்றிச் சொல்லி யிருக்கிறது.

---

திருச்சித்திர கூடம் என்பது சிதம்பரம், பொய் வண்ணம்=பொய்யின் தன்மை, புலனைந்தும்=ஐம்பொறிகள், வித்தகனை=மேலோனை, முகில்போல்=மேகம்போல், திரை=அலை, பனுவல்=பாட்டு, பழவினை=பழமையாகி வரும்வினை.

துளங்கு நீண் முடியரசர் தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்திற லொருவற்கு
உடன் கொளன்பினோடின் னருள் சுரந்து
அங்கோடு நாழிகை யேழுடனிருப்ப
வளங்கொள் மந்திரம் மற்றவர்க்கருளிச்
செய்தவாறு அடியே னறிந்து உலக
மளந்த பொன்னடியே யடைந்துய்ந்தேன்
அணி பொழில் திருவரங்கத் தம்மானே.

நந்திவர்மன் ஸ்ரீரங்கத்தில் ஏழு நாழிகை தொழுது அரங்கத்தம்மான் அருளைப் பெற்றான் போலும். கும்ப கோணத்துக்கடுத்த நாதன்கோயிலையும் இவன் தொழுதான்.

தந்தை மனமுந்து துயர்நந்த இருள்வந்த
விறல்நந்தன் மதலை
எந்தையிவ னென்றமரர் கந்தமலர் கொண்டு
தொழ நின்றநகர்தான்
மந்தமுழ வோசை மழையாக வெழுகார்
மயில்களாடு பொழில்சூழ்
நந்திபணி செய்தநகர் நந்திவிண் ணகரம்
நண்ணு மனமே.

திருநறையூர்ப் பதிக மொன்றில் அக் கோயில் கோச் செங்கண்ணன் தொழுத தென்று பாடியிருக்கிறார். இக் கோச்செங்கண்ணன் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவன். கி. பி. 600-க்கு முன் சைவர், விஷ்ணுவைத் தாழ்ந்திப் பேசுவதும், வைஷ்ணவர் சிவனை இழித்துப் பேசுவதும்

---

குரிசில் = ஆண்மக்களுள் சிறந்தவன், தொண்டை மன்னவன் = தொண்டை நாட்டரசன், பொழில் = சோலை, நந்த = கெட, விறல் = வலிமை, அமரர் = தேவர்கள், கந்தமலர் = வாசனையுடைய மலர்.

கிடையாது. அதனால் செங்கண்ணன் விஷ்ணு கோயில் இரண்டிலும் தொழுதான். திருநறையூர்ப் பாசுரத்தில் இரண்டை வரைவாம் :—

அம்பரமும் பெருநிலமும் திசைகளெட்டும்
அலைகடலும் குலவரையு முண்டகண்டன்
கொம்பமரும் வடமரத்தி னிலைமேல்பள்ளி
கூடினான் திருவடியே கூடகிற்பீர்
வம்பமிழும் செண்பகத்தின் வாசமுண்டு
மணிவண்டு வகுளத்தின் மலர்மேல்வைகும்
செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

முருங்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னைகேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்றுவென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்றவேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநம் சென்னிவைப்பீர்
இருக்கிலங்கு திருமொழிவாயெண் தோளீசற்கு
எழில்மாட மெழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

தாண்டகம் முதலில் பாடியவர் திருநாவுக்கரசர். திருமங்கை மன்னன் அதைப்போல் திருமால்மீது தாண்டகம் பாடினார்.

---

வடமரம் = ஆலமரம், வகுளம் = மகிழமரம், செம்பியன் = சோழன், முருங்கு = முள் முருங்கை, இதன் மலர் சிவந்திருக்கும் ; செருக்களம் = போர்க்களம், துணித்தல் = வெட்டுதல், செவ்வை நில்லாது = செம்மையாய் நில்லாது, தீவினையேன் = கொடிய வினையுடையேன், பணியாய் = கட்டளையிடுவாய், முகில் = மேகம், அத்த = (எட்டாம் வேற்றுமை) தந்தையே.

சித்தமும் செவ்வையில்லாது என்செய்கேன் தீவினையேன
பத்திமைக் கன்புடையேன் ஆவதே பணியாயெந்தாய்
முத்தொளி மாகதமே முழங்கொளி முகில்வண்ணனென்
அத்தநின் னடிமையல்லால் யாதுமொன் றறிகிலேனே.

என்பது குறுந்தாண்டகத்தின் நடையைக் காட்டும்.

அன்றாயர் குலமகளுக்கரையன் தன்னை
அலைகடலைக் கடைந்தடைத்த வம்மான்தன்னை
குன்றாதவலி யரக்கர் கோனை மாளக்
கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து குலங்களைந்து
வென்றானைக் குன்றெடுத்த தோளினானை
வரிதிரை நீர்விண்ணகரம் மருவிநாளும்
நின்றானைத் தண்குடந்தை கிடந்தமாலை
நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே.

என்பது நெடுந்தாண்டகத்தினின்று எடுத்தது.

திருமங்கைமன்னன் பாடல்கள் சிலவற்றில் திருமாலை நாயகனாயும் பக்தனான தன்னை நாயகியாயும் வைத்துப்பாடியிருக்கிறார். இப்பாசுரங்களில் அகப்பொருட்சுவை வரும். உதாரணமாகத் திருநாகைப்பாசுரம் ஒன்றை வரைவாம்.

பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும்
பேரருளாளர் கொல்யானறியேன்
பணியுமென்னெஞ்ச மிதென் கொல் தோழி
பண்டிவர் தம்மையும் கண்டறியோம்

---

அரையன் = அரசன், அம்மான் = சிறப்புடையோன், குன்றாத வலி = குறையாத பலம், அரக்கர் = அசுரர், சிலை = வில், சரம் = அம்பு, திரை = அலை, அலையை யுடையநீர், குடந்தை = கும்பகோணத்தின் திரிபு, பிணி = கட்டு, மொட்டு = அரும்பு, அலர்த்தும் = விரியச் செய்யும், கொல் = அசைச்சொல், பணியும் = வணங்கும்.

அணிகெழு தாமரையன்ன கண்ணுமங்கையும்
பங்கய மேனிவானத்து
அணிகெழு மாமுகிலேயு மொப்பர்
அச்சோ ஒருவ ரழகியவா.

இக்காலத்தில் இறையனாரகப் பொருளுரை எழுதப் பெற்றது. இறையனாரகப்பொருள் என்பது மதுரைக் கோயிலினது பீடத்தின் கீழ் மூன்று செப்பு இதழ்களில் வெட்டியிருந்தது. ஒரு பாண்டிய அரசனுக்கு அகப்பட்ட தென்றும் அதற்குரை நக்கீரனார் இயற்றினாரென்றும், அவர் அதைத் தம்மகனார் கீரங்கொத்தனார்க் குரைத்து, முறையே தேனூர்கிழார், படியங்கொற்றனார், செல்வத் தாசிரியர், பெருஞ்சுவனார், மணலூராசிரியர், புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார், செல்லூர் ஆசிரியர், ஆண்டைப் பெருங் குமரனார், திருக்குன்றத்தாசிரியர் மாதவாளனார், இள நாக னார், முசிரியாயர் நீலகண்டனார் பயின்றாரென்றும் இவ்வுரை யில் எழுதி யிருக்கிறது. இப்பொழுது கிடைத்து அச்சிட் டிருக்கும் உரை நீலகண்டர் விரித்தெழுதிய தென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வுரையில் உதாரணத்திற்காக 329 பாக்க ளடங்கிய ஒரு கோவையுண்டு. இக்கோவை ஒவ்வொரு பாட்டிலும் நந்திவர்ம பல்லவ மல்லன் எதிரியான அரிகேசரி பராங்குசன் செயல்களைப் பாடியிருக்கிறது. இதில் அவன் பெயரும் அவன் போர்புரிந்த ஊர்களின் பெயர்களும் உள்ள இடங்கள் சிலவற்றைக் குறிப்பாம்.

பாவடி யானைப் பராங்குசன் பாழிப்பகை தணித்த
தாவடி வேள் மன்னன்.

வேறுமெனநின்றி கன்மலைந்தார் விழிஞத்து விண்போ
யேலுந்திறங் கொண்ட கோன்.

தூவுண்டை வண்டினங்காள் வம்மின்
சொல்லுமின் றுன்னி நில்லாக்
கோவுண்டை கோட்டாற்றழித்த கோன்.

இருங்கழல் வானவனாற்றுக்குடியிகல் சாய்ந்தழியப்
பொருங்கழல் வீக்கிய பூழியன் மாறன்.

பொருங்கழல் வானவற் காயன்று பூலந்தைப்போர் மலைந்தா
ரொருங்கழலேற வென்றான்.

தேற்றமில்லாத தெவ்வேந்தரைச் சேவூர் செருவழித்து.

பாவலையின் றமிழ்வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
வேவலை வெஞ்சிலையான்.

---

தடித்த எழுத்தில் உள்ளவைகளெல்லாம் ஊரின் பெயர்களாவது, அரசன் பெயர்களாவது ஆகும், பாவடியானை = இனித்த அடியானை, தணித்த = அடங்கிய, தூவடி = தூய்மையான அடி, வேள் மன்னன் = விரும்பத்தக்க அரசன்.

நின்றிகண் மலைந்தார் = நின்று + இகல் + மலைந்தார், இகல் = போர், விழிஞம் = மலைநாட்டில் உள்ள ஓர் ஊர், திறம் = வலிமை, ஏலும் = பொருந்தும், கோன் = அரசன், தூவுண்டை = சுத்தமான ஆகாரம் தின்னும், துன்னி நில்லா = நிலை பெற்று நில்லாத, கோவுண்டை = அரசன் படையுள்ள, கழல் வீக்கிய = கழல் தரித்த, பூழியன் = பாண்டியன்.

போர்புரியும் கழலையணிந்த வானவர்க்காக அன்று பூலந்தையென்ற ஊரில் போர்புரிந்தார் பொருந்திய கழல் ஏற்றமுற வென்றான்.

தெளிவில்லாத பகையரசரைச் சேவூரில் போரிலழித்து பாக்களினால் போற்றப்பெறும் இனியதமிழ் அரசன் பராங்குசன் பாழியை வென்ற வெம்மை பொருந்திய கொடிய வில்லையுடையவன்.

ஒன்றைக் கருதா வயவர் **நறையாற்று**ட னழிந்து
பொன்றப் படைதொட்ட கோன்.

சேலங் குளர்வயற் **சேவூ**ரெதிர்நின்ற சேரலனை
மாலங் கடைவித்த மன்னன **வரோதயன்.**

நீடிய பூந்தண்கழனி **நெல்வேலி** நிகர்மலைந்தா
ரோடிய வாறுகண்டொண் சுடர்வைவே லுறைசெறித்த
வாடில்யானை **அரிகேசரி.**

தெவ்வா யெதிர்நின்ற சேரலர்கோனைச் செருக்கழித்துக்
கைவானி தியமெல்லாமுடனே **கடையற்**கவர்ந்த
மன்னன **வரோதயன் வல்லத்**தொன்னார் கட்குவான்
கொடுத்த தென்னன்.

தானைவணங்காதவர் படச் சங்கரமங்கைத் தனது
வாளைவலங் கொண்டமாறன்.

---

நட்பில்லாத வயவர்களுடைய நறையாற்றுடன் அவர்களையு மழித்து, நாசமுறச் செய்யும் படையைத் தொடுத்தவன், சேல் மீன்கள் அங்குத் துள்ளிக் குதித்து விளையாடும் சேவூரில் எதிர்த்த சேரமன்னனை, மயக்கம் அங்கு அடைவித்த அரசனாகிய வரோதயன்.

நீண்ட அழகிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த நெல்வேலியில் போர் புரிந்தார் பகைவன் பின்னடைந்து ஓடிய வழியைக் கண்டு பிரகாசிக்கும் ஒளிவீசும் கூர்மையான வேலாயுதத்தை உறையி லிட்ட வாட்டமில்லாத யானை ஒத்த அரிகேசரி.

பகைத்து எதிர்த்துநின்ற சேரனது கர்வத்தை ஒழித்து அவன் கையிலுள்ள உயர்ந்த செல்வங்களை யெல்லாம் கடையல் என்ற ஊரோடு கைக்கொண்ட

வல்லத்திலுள்ள பகைஞர்களுக்கு வானையளித்த பாண்டியனாகிய வரோதயமன்னன்.

இக்கோவையில் இவன் பெயரையாவது போரையாவது குறிக்காத பாட்டில்லை. இதனை முசிரி நீலகண்டனார் கி. பி. 750-க்குப் பின்பு பாடியிருக்க வேண்டும். அகப்பொருளில் களவியற்பகுதிகள் எல்லாவற்றிற்கும் முறையே உதாரணங் களா யிருக்கவும், பராங்குசனைப் புகழவும் பாடினது இக் கோவை. இறையனாரகப் பொருளுரையில் அகப்பொருள் நூலில்லாததால் இறையவன் இந்நூலை அருளிச்செய்தார் என்று கூறியிருக்கிறது. அப்போது தொல்காப்பியம் இயற்ற வில்லையா? இருந்து எவர்க்கும் அகப்படாமல் ஒளிந்திருந்ததா? இவ்வினாக்களுக்கு விடை கொடுக்க வழியைக் காணோம்.

தமிழ்ச்செய்யுள் இவ்வாறு செழித்திருக்க வடமொழிக் கல்வியும் தமிழ் நாட்டில் உயர்நிலை பெற்றிருந்தது என்றும் தமிழர் வடமொழியில் எவ்வளவு அழகாய்க் கவனம் செய்தா ரென்றும் சாசனங்களினின்று மொழி பெயர்த்திருக்கும் சுலோகங்களினின்று அறியலாம். வேகவதிநதியை உத யேந்திரச் சாசனத்தில் வர்ணித்திருக்கும்முறையும் அழகா யிருக்கும். அதன்பொருள்:— அதனது கரைகளில் கமுகு, தெங்கு, மா, பனை, ஹிந்தாளம், தாம்பூலம், நாகை, புன் னைகை, செவ்வசோகம், குரவகம், மாதவி, கர்னிகாரம் முத லிய மரங்கள் அடர்ந்த சோலைகள் நிரம்பியிருக்கின்றன. அந்நதி காமத்தால் மயங்கிய மதியையுடைய பெண்டிருடலி னின்று உதிர்ந்த மஞ்சள் வாசனையுற் றிருந்தது.

இதுவுமன்றி சங்கராச்சாரியர் பாஷியத்திலும் வேதாந்த விஷயத்தைப்பற்றி இயற்றிய மறு நூல்களிலும் காவிரியில் தண்ணீர் ஓடுவதுபோல் தடையற்று மொழிகள் ஓடும்

---

பாதங்களில் பணியாதவர்கள் நாசமுற சங்காமங்கையில் தனது வாளால் வெற்றி கொண்ட பாண்டியன்.

நடையைப்பார்த்து ஆனந்திப்பவரெல்லோரும் வடமொழிப் பயிற்சி தென்னாட்டில் எவ்வாறு பரவியதென்று அறிவார். அவர் செய்த வடமொழித் தோத்திரங்களிலுள்ள கர்ணமிர்தத்தை அனுபவிக்காதவர் யார்? அவைகளைப் பாடக்கேட்டு மனது உருகாதவர் நரலோகத்திலும் இருக்கிறார்களோ?

## தந்திவர்மப் போத்தரையன்

## (கி. பி. 777 — 830)

இவன் நந்திவர்ம பல்லவ மல்லன் மகன். இவன் தாயின் பெயர் ரேவா. ரேவா என்றால் நருமதைக்குப் பெயர். இவள் இராஷ்டிரகூடர் முதல் மன்னனான தந்திவர்மன் மகள் போலும். பாட்டன் பெயரை இவள் மகனுக்கு வைத்தாள் போலும்.

தந்திவர்மப் போத்தரையன் சிம்மாசனம் ஏறி, 21 வருஷங்களாகுமுன் வெட்டுவித்த சாசனங்கள் பல அகப்பட்டிருக்கின்றன.

புதுக்கோட்டை சமஸ்தானம் குளத்தூர் தாலூகா மலையடிப்பட்டியில் உள்ள குகைக்கோயில் மகா மண்டபத்துத் தூணில், 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசய தந்திவர்மற்கு யாண்டு பதினாறாவது விடேல் விடுகுமுத்தரையனாகிய குவாவன் சாத்தனேன் திருவாலத்தூர் மலை தளியாக் குடைந்து பட்டாரரைப் பிரதிஷ்டை செய்து'' என்று வெட்டியிருக்கிறது. திருவாலத்தூர் என்பது மலையடிப்பட்டியின் முற்காலத்திய பெயர்.

தந்திவர்மன் தன் தகப்பனைப் போல் சோழ தேசத்தில் பல பிரமதேயங்களைத் தானம் செய்தான். அதில் ஒன்று திரிசிராப்பள்ளி தாலூகாவில் காவிரிக்கு வட கரையிலுள்ள

ஆலம்பாக்கத்தில் இருந்தது. இதனால் இவ் வூர்க்கு முன் காலத்தில் தந்திவர்மமங்கலம் என்று பெயர். இவ் வூரில் கைலாசநாத சுவாமி கோயில் என்று ஒரு கோயில் கட்டினான். அன்றியும் தந்தியின் பட்டப் பெயரான மாற்பிடுகு என்ற பெயரை வைத்து மாற்பிடுகு ஏரி ஒன்று வெட்டுவித்தான். அன்றியும் திருமேற்றளி யென்ற பெருமாள் கோயில் கட்டி காஞ்சீபுர சுவாமியான வரதராஜ சுவாமி விக்கிரகமும் ஸ்தாபனம் செய்தான். இந்த ஆலம்பாக்கம் லால்குடிக்கு 12-மைல் தூரத்தில் உள்ளது.

புதுக்கோட்டை நாடு குளத்தூர் தாலூகா குன்றாண்டார் (குகைக்) கோயில் தூண் ஒன்றில் பின் வரும் கல்வெட்டு உண்டு :— 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசய தந்திப்போத்தரையற்கு யாண்டு 5-வது மாற்பிடுவிஞாயின பேரதி அரையர்களடியான் வாலிவடுகனையின் கலிமூர்க்க இளவரையன் செய்த குளம்வாலி ஏரி' மாற்பிடுகு என்பது தந்திவர்மனது பட்டப் பெயர். மாறர் அல்லது எதிரிகளுக்கு இடி போன்றவன் என்பது பொருள். மாற்பிடுகு பேரதி அரையன் என்பவன் தந்திவர்மன் கீழ் ஆண்ட குறுநிலமன்னன். கலிமூர்க்கன் என்பவன் வடுகனைதால் அக் காலத்திலேகூடத் தெலுங்கர் தென்னாடு வந்து சிற்றரசரானார் போலும்.

திரிசிராப்பள்ளிக்கு வடக்கு 12 மைல் தூரத்தில் உள்ள திருவெள்ளறை கிராமத்தில் பெரிய கிணறு ஒன்று இவ்வரசன் காலத்தில் தோண்டினார்கள். அதன் மேல் உள்ள கல்வெட்டு பின் வருமாறு :—

"ஸ்வஸ்தி ஸ்ரீ பாரத்துவாஜ கோத்திரத்தின் வழித் தோன்றிய பல்லவ திலகுலோற்பவன் தந்திவர்மற்கு யாண்டு நான்காவது எடுத்துக்கொண்டு ஐந்தாவது முற்றுவித்தான், ஆலம்பாக்க விசய நல்லூழான் தம்பி கம்பன் அரையன்

திருவெள்ளறைத் தென்னூர்ப் பெருங் கிணறு. இதன் பெயர் மாற்பிடுகுப் பெருங்கிணறு என்பது. இது ரட்சர் பார் இவ்வூர் மூவாயிரத்தெழுநூற்றிவரும்,

கண்டார் காணுவுலகத்திற் கர்தல் செய்து நில்லாதே
பண்டே பரமன் படைத்தநாள் பார்த்துநின்று ஙங்யாதே
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச்செய்து நில்லாமுன்
உண்டேல் உண்டு மிக்காடு உலக மறிய வைம்பினே.

திரிசிராப்பள்ளிக்கடுத்த உய்யக்கொண்டான் திருமலைச் சாசனங்களில் அவ் வூர்க் கருகிலுள்ள வாய்க்காலுக்கு வைர மேக வாய்க்கால் என்ற பெயரைக் குறித்திருக்கிறது. தந்திவர்மனுக்கு வைரமேகன் என்ற பெய ரிருந்தால், இந்த வாய்க்காலை இவனே தோண்டினான்போலும். அதற்கு இப்போது உய்யக்கொண்டான் வாய்க்கால் என்று பெயர்.

குடிமல்லம் என்னும் ஊரில் இவனது 49-வது ஆண்டுக் கல்வெட்டு அகப்பட் டிருக்கிறது. "ஸ்வஸ்தி ஸ்ரீ கோவி சைய தந்திவிக் கிரப்பருமற்கு யாண்டு நாற்பத்தொன்பதா வது விஜயாதித்த மகாவலி வாணராயர் ப்ருதிவி இராஜ்யஞ் செய்யத் திருவிப்பிரம்பேடு ஆளுங்கணத்தாருள் கழிய மங் கலங் கிழார் (கழியமங்கலத்துத் தலைவன்) அய்யப் போற்றி யேன் எங்கள் தூம்பனேரியுள்ளே நந்தி குண்டிலான சேறு இவ்வூர் வெள்ளேரிக்கு ஏரிச் செருவாக வைத்தேன். இதிற் போகங்கொண்டு இவ்வெள்ளேரியிலே குழி குத்தி அட்டுவ தாக வைத்தேன். இத்தருமஞ் சந்திராதித் யகதஞ் செய்வ தாய்த்து. இத்தருமஞ் செலுத்தினார் 1000 அசுவமேதஞ் செய்த பலன் பெறுவார். இதழித்தார் வாரணசி அழித் தான் பாவத்துப் படுவார். இத்தருமம் ரக்ஷித்தான் அடி என் முடிமேலின."

தந்திப் போத்தரையன் காலத்தில் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் பல வெட்டினதாக இந்தச் சாஸனங்களால் அறிகிறோம். ஆனால் இந்த தருமம் சோழ தேசத்தில் அவனது ஆட்சிக்காலத்தின் இறுதியில் இல்லை. ஏனென்றால்,

தந்திவர்மன் அரசாட்சி கொஞ்சம் சென்ற பின்பு வரகுணபாண்டியன் அவன் நாட்டின்மேல் படையெடுத்து வந்து சோழநாட்டைக் கைப்பற்றினான் என்று சொல்லப் போகிறோம். ஆனால் தொண்டைமண்டலத்தின் வட பகுதி தந்திப் போத்தரையன் வசமாய் அவன் இறக்குமளவும் இருந்தது என்று இந்தக் கல்வெட்டினால் அறியலாம்.

இவனது 6-ம் ஆண்டில் செஞ்சிக்கோட்டைக்கு அருகிலுள்ள தொந்தூரிலும், 7-ம் ஆண்டு, 9-ம் ஆண்டு, 10-ம் ஆண்டு, 21-ம் ஆண்டுகளில் செங்கற்பட்டு ஜில்லா உத்தரமல்லூரிலும், 12-ம் ஆண்டில் திருவல்லிக்கேணியிலும், கூரத்திலும் உள்ள கல்வெட்டுகள் அகப்பட்டிருக்கின்றன. தொந்தூர்க் கல்வெட்டில் மாடுகளுக்காக உற்ற சண்டையில் இறந்த உதாரடி, நம்பி யென்றவர்க்காக விண்ணகோவரையர் குன்றுனார் பட்டாரியைத் தொழுது, சிங்கபுரநாட்டுக் கீழ்வழி அருவாகூரில் உள்ளோர்க்குப் பொன் கொடுத்ததாக இருக்கிறது. உத்தரமல்லூர் சாசனங்களில் தந்திப்போத்தரசர் ஆண்டபோது ஒருவன் குளம் வெட்ட நிலம் வாங்கி, வைரமேக தடாகம் வெட்டுவித்து, அதில் அப்போதைக்கப் போது சேறு வெட்டி எறிவதற்காக முதல் வைத்ததாக இருக்கிறது. தந்திவர்மனுக்கு வைரமேகன் என்று ஒரு பெயருண்டு என்று முன்னமே சொல்லி யிருக்கிறது. திருமங்கைமன்னன் "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீள் முடியாமாலை வைரமேகன் தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி" என்று பாடியதால் இது விளங்கும்.

திருவல்லிக்கேணிச் சாசனத்தால் குலங்கிழார் * கோயில் நிலத்தில் ஒரு பகுதியை ஒற்றிவைத்து, அதன் வரும்படியில் 45 காடி நெல் குறைந்து போனதால், அதற்குப் பதிலாக 30 காடி நெல்லும் 5 கழஞ்சு பொன்னும், புகழ்த்துணை விசையரசன் தானம் செய்தான். இதற்கு நாள் ஒன்றுக்கு 5 நாழி நெல் வட்டி; அதை இரண்டு நாழி அரிசியாக்கி நித்தியம் நிவேதனம் செய்வதென்று ஏற்பாடு. ஆகையால் 45 காடிக்கு ஒரு வருஷத்துக்கு $18\frac{3}{4}$ கலம் அந்தக் காலத்தில் வட்டி யென்று தெரியவருகிறது.

இராஷ்டிர வம்சத்தை நிலைநிறுத்தின தந்திவர்ம மகாராஜா இறந்தபோது அவன் மாமன் கிருஷ்ணன் அரசனானான். இந்தக் கிருஷ்ணன் சளுக்க வம்சத்தை அழித்தான். இவன் ஏலாபுரம் (எல்லோரா) என்று நிஜாம் இராஜ்யத்தில் அவரங்காபாது தாலுகாவில் உள்ள ஒரு மலையில் உலகத்திலுள்ள கோயில்களைவிட மிக அழகிய தென்றுகீர்த்தி பெற்ற கைலாச நாதசுவாமி கோயிலைக் கட்டுவித்தான். இவன் இறந்தபின்னர் (கி. பி. 780-இல்) இவன் புத்திரர் கோவிந்தனும் துருவனும் போர் செய்தார்கள். இந்தப் போரில் தந்திப் போத்தரையன் கோவிந்தனுக்கு உதவி புரிந்தான். எனினும் துருவனே ஜயித்தான். துருவன் கி. பி. 790-இல் இறந்தபோது, அவன் மகன் கோவிந்தன் அரசனானான். இந்தக் கோவிந்தனுக்கு ஜகத் துங்கனென்றும் பெயருண்டு, இவ்வாறு தந்திப் போத்தரையனது எதிரிகள் ஜயித்ததால், இப்பல்லவன் பலம் குறைந்தது இதனாற் போலும். கி. பி. 800 முதல் இவனது சாசனங்களை அதிகமாய்க் காணோம். அன்றியும் தென்னாட்டிலிருந்து மற்றோர் பகைவன் தந்திப் போத்தரையனுக்குத் தோன்றினான்.

---

* என்றால் கோயில் வேலையை நடத்துவோர், பட்டாரிகை யென்னும் வடமொழி பட்டாரி யென்றாகிப் பிடாரி யென்றாயிற்று



நார்த்தமலையிலுள்ள கடம்பர் மலை கோயில்.

இந்த எதிரி வரகுண பாண்டிய மகாராஜா, பராந்தக மாறஞ் சடையனது பேரன். இவனும் மாறஞ்சடையன் என்ற பெயர் பெற்றவன். கி. பி. 800 முதல் 825 வரை யில் இவனது கல்வெட்டுகள் தமிழ் நாட்டில் எங்கும், சோழ மண்டலத்தில் அதிகமாயும் கிடைக்கின்றன. இராமநாதபுரத்தில் கிடக்கும் கல்வெட்டில் மாறஞ் சடையன் வரகுண மகாராஜா சோழதேசத்தில் உள்ள இடவை நகரின் மேல் படையெடுத்துச் சென்றதாகச் சொல்லி யிருக்கிறது. பிற்காலத்தில் இராஜேந்திர சிங்கவன நாடென்று பெயரிட்ட சோழதேசப் பகுதியிலுள்ள மண்ணி நாட்டில் இடவை இருக்கிறது. இதற் கருகில் இப்போது திருவிசலூர் என்னும் கிராமத்திலும், தஞ்சாவூருக்கடுத்த தில்லைஸ்தானத் திலும் மாறஞ்சடைய வரகுணனது கல்வெட்டுகளுண்டு. அன்றியும் திருச்சிராப்பள்ளி மலைமேலுள்ள குகைக் கோயிலில் இவனது 7-ம் ஆண்டில் வெட்டின கல்வெட் டுண்டு. அதில் சிற்றம்பர் (என்னும் சிராப்பள்ளி) திரு மலைப் பட்டாரருக்கு (மலைக்கோயில் கடவுளுக்கு) 25 கழஞ்சு பொன்னைக்கொண்டு 4 நந்தாவிளக்குகளும் 5 வேறு விளக்குகளும் எரிக்கத் தானம் செய்தான். அன்றி யும் அந்தக் கல்வெட்டில் தான் சூரிய சந்திர வம்ச சிகா மணி யென்று எழுதிருப்பதால் அவன் தாய் சூரிய வம்சத் தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொண்டிருக்கும் சோழ குலத்தில் பிறந்தவளென்று நினைக்கலாம். இந்தத் தானம் கொடுத்தபோது வரகுணன் தஞ்சாவூருக் கருகிலுள்ள நியமம் கிராமத்திலிருந்ததாகவும், வேம்பில் என்னும் ஊரைப் பிடித்துக்கொண்டு, அதிலிருந்த கோட்டை மதில் களை இடித்து விட்டதாகவும் சொல்லியிருக்கிறான். வேம் பில் என்றால் வேம்பத்தூர் என்கிற திருவிசலூர். வர குணன் கல்வெட்டுகள் சோழநாடு முழுவதும் அகப்படுவ

தால் அது வரகுணன் ஆட்சியின்கீழ் வந்தது என்று தீர்மானஞ் செய்யலாம். பின்பு தொண்டை நாட்டுக்குள் புகுந்தான். இவனது 16-ம் ஆண்டில் கொடுத்த வட்டெழுத்தில் எழுதிய அம்பாசமுத்திரம் சாசனம் தொண்டை நாட்டில் பெண்ணை யாற்றங்கரையிலுள்ள அரைசூரில் இவன் வீற்றிருந்தபோது கொடுத்தது. ஆகையால் தொண்டை நாட்டின் பகுதி யொன்றையும் வரகுணன் கைப்பற்றினனென்று தெரிகிறது. ஆகையால் இவனுக்குச் சோழநாட்டையும் தொண்டை நாட்டையும் மதுரையுடன் சேர்த்தவன் என்ற பெயர் பிறந்தது.

## சமய நிலை

அறுபத்துமூவரில் கடைசியிலிருந்தவரான சுந்தரமூர்த்தி நாயனர் இக்காலத்தில் வாழ்ந்தார். அவர் மதுரையில் சுந்தரப் பெருமானைச் சேவிக்கச் சேரமான்பெருமாணயனருடன் போனபோது, பாண்டிய மகாராஜாவானவன் தன் மகளை மணந்த சோழனையும், சுந்தரமூர்த்தி நாயனரையும், சேரமான் பெருமானையும் உபசரித்தானென்றும், மூவேந்தரும் நாயனருடன் சுவாமி தரிசனம் செய்தாரென்றும் பெரிய புராண வசனத்தில் ஒரு கதையுண்டு. இப்பாண்டியன் வரகுணனே. வரகுணனுக்கு முன்னிருந்த பாண்டியனை நெடுஞ்சடையன் பரம வைஷ்ணவன். இவன் பின் வந்த ஏகவீர சடையன் மாறனும் விஷ்ணு பக்தன். இவர் நடுவிலிருந்த வரகுணனே சைவன். திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயில் கல்வெட்டில் சிவனைத் துதிசெய்து மலைமேலுள்ள சிவனுக்குத் தானம் செய்தான். இதுவுமன்றி வரகுணன் காலத்துக்கு முன்னிருந்த சேரரெல்லோரும் பாண்டியர்க்கு எதிரிகளாய்ப் போர் செய்தவர்கள். வரகுணன் தென்னடெல்லாம் செல்வாக்கு உயர்ந்து ஆண்ட

தால் சேரரும் இதன் தலை நகரத்துக்கு வருமாறு பண்டிய னுக்கு அடங்கி யிருந்தார். இந்த இரு காரணங்களால் சுந் திரமூர்த்தி நாயனரை ஆதரித்தவன் வரகுணனென்று நிச் சயிக்கலாம்.

சுந்தரமூர்த்தி நாயனர் தம்முடைய தேவாரங்களில் அடிக்கடி திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் இவ்விரு வரையும் பற்றிக் கூறுவர். அன்றியும் சுந்தரமூர்த்திகள் பல தமிழ் நூல்கள் தோன்றி யுலவுதற்குக் காரணமா யிருந் தவர். இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை ஆதாரமாகக் கொண்டுதான் நம்பியாண்டார் அந்தாதி பாடி னர். இவ்விரு நூல்களையும் கொண்டு சேக்கிழார் சுவாமி கள் பெரிய புராணம் பாடினர். சைவாது பதினேரும் திரு முறையி லுள்ள பல பிரபந்தங்கள் தோன்றியதற்கும் இவர் நூல்தான் ஆதாரம். ஆகவே சுந்தரமூர்த்திகள் தமிழை யும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்த பெரியார்.

இவர் நடு நாட்டில் பிறந்தவர்; ஆதி சைவகுலத்தார். ஆதி சைவரென்ருல் சிவாலயங்களில் பூஜை செய்யும் குருக்கள்மார். சுந்தரர் தென்னுடுமுற்றும் சென்று ஆங் காங்குள்ள க்ஷேத்திரங்களில் பாசுரங்கள் பாடினர். திரு ஞான சம்பந்தர் காலத்தில் சேரநாட்டில் சைவத்திருப்பதி கள் கொஞ்சமே. சுந்தரமூர்த்திகள் காலத்திற்குள் பல உண்டாயின. அவைகளுக்குப் போய் சுந்தரமூர்த்திகள் தேவாரம் பாடினர். அப்பர், ஞானசம்பந்தர் தேவாரங்களி லில்லாத 22 க்ஷேத்திரங்களை சுந்தரர் பாடினர். அவைகளில் சேரநாட்டுத் திருவஞ்சைக் களத்திலுள்ள சுவாமியை "மலைக்குநிகரொப்பன வன்றிரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டலைக்குங் கடலங்கரை மேன்மகோ தைய ணியார் பொழில் வஞ்சைக்களத்தப்பனே" என்று பாடினர்.

சுந்தரமூர்த்திகள் சோழநாட்டில் ஆண்ட சிறு மன்னன் ஒருவன் கழுத்தில் அணிந்துகொண் டிருந்த ஆரமானது காவிரியில் கழன்றுவிழ, அதைச் சிவபெருமானே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க, அது அப்பெருமானுக்குத் திருமஞ்சனம் கொள்ளும் குடத்தில் கிடந்ததைப் பின்வரும் பாட்டில் தெரிவிக்கிறார்.

தாரமாகிய பொன்னித்தண்டுறையாடிவிடுத்து
நீரினின்றடிபோற்றி நின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக் காவுடையாதியை நாளு
மீரமுள்ளவர் நாளுமெம்மை யாளுடையாரே.

உலக வியல்பை உள்ளது உள்ளவாறே கூறும் வழக்கமுடையவர் சுந்தரமூர்த்திகள். மக்கள் உயிருடனிருக்கும் போது எல்லோரும் போற்றுவர். இறந்தவுடனே பலரும் தூற்றுவராதலால் செய்யவேண்டியவைகளை அவ்வப்பொழுதே செய்யவேண்டுமென்று பாடினர்.

செத்தபோதினின் முன்னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச்சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தையுண்டே மனமுண்டே
மதியுண்டே விதியின் பயனுண்டே
முத்தனெங்கள் பிரான்என்று வானோர்
தொழநின்ற திமிலேறுடை யானை
யத்தனெந்தை பிரானெம்பிரானை யாரூரானை
மறக்கலு மாமோ.

---

பொன்னி = காவிரி, தண் துறை = குளிர்ந்த துறை, நீரினின்று = ஜலத்தில் நின்று, நின்மல = கடவுளே, ஆரம் = மாலை, முத்தன் = மேலோன், பிரான் = தலைவன், வானோர் = தேவர், அத்தன் = தலைவன்.

மற்றொரு இடத்தில்,

ஏலம் மிலவங்க மெழிற்கனக
மிகவுந் திவருந் நிவவின் கரைமே
னீலம்மலர்ப் பொய்கையி லன்னமலி
நெல் வாயிலாரத்துறை யாதொரு நெல்
வாலூன்ற வருத்து முடம்பிதனை
மகிழாதழகா மலந்தேனினியா
னலர் நிழலில் மந்தாயமாரா வடியேனுய்யப்
போவதோர் சூழல் சொல்லே.

ஆலயத்துக்குச் செல்வதப்பற்றி,

தோற்றமுண்டேன் மரணமுண்டு துயரமனை வாழ்க்கை
மாற்றமுண்டேல் வஞ்சமுண்டு நெஞ்சமனத்தீரே
நீற்றரேற்றர் நீலகண்டர் நிறைபுனனீள் சடைமே
லேற்றர் கோயிலெதிர்கொள் பாடியென்ப தடைவோமே.

பறவைகள் பாடுவதைப்பற்றி,

பத்தர்தாம் பலர்பாடி நின்றாடும் பழம்பதி
பொந்திலாந்தைகள் பாட்டறாப்புனவாயிலே, என்றும்,
காடேன் மிகவாலிது காரிகையஞ்சக்
கூடிப்பொந்திலாந்தைகள் கூகைகுழற, என்றும்,

---

கனகம் = பொன், உந்தி = அள்ளிக்கொண்டு, நிவவென்பது = ஒரு நதி, நெல்வாலூன்ற வருத்தும் உடம்பு = நெல்லின் முனை ஊன்றுவதால் வருந்தும் உடம்பு, அலந்தேன் = வருந்தினேன், சூழல் = சூழ்ச்சி, நீற்றர் = விபூதியையணிந்தவர், ஏற்றர் = ரிஷபத்தையுடையவர், நிறைபுனல் நீள்சடைமேல் ஏற்றர் = நிறைந்த புனலையுடைய கங்கையைச் சடையிலுடையவர், பொந்தில் = மரப்பொந்துகளில், பாட்டறா = பாட்டு ஓயாத, கூகை = ஒரு பறவை.

கற்றிலாதானைக் கற்று நல்லனே
காமதேவனை யொக்குமே
முத்திலாதானை முத்தனே யென்று
மொழியினுங் கொடுப்பாரிலைப்
பொத்திலாந்தைகள் பாட்டறாப்
புகலூரைப் பாடுமின் புலவீர்கா
ளத்தனாய மருலகமாள் வதற்கியாது
மையுறவில்லையே.

என்றும் பாடியுள்ளார்.

முன்னொரு காலத்தில் ஒருவர் நாரையின் மூக்கு பனங்கிழங்கைப் பிளந்தது போன்றிருக்கு மென்றார். சுந்தரரோ அதன் காலைப்பற்றி, 'தினைத்தாளன்ன செங்காலநாரை சேருந் திருவாரூர்' என்றார்.

நீதியிலொன்றும் வழுவேனிட்கண்டகஞ்
செய்து வாழ்வேன்
வேதியர் தம்மை வெகுளேன்
வெகுண்டவர்க்குந் துணையாகேன்
சோதியிற் சேதி யெம்மானைச்
சுண்ண வெண்ணீறணிந்திட்ட
வாதியிருப்பதும் மாரூரவ ரெம்மையுமாள்
வரோகேளீர்.

---

முத்திலாதானை முத்தனே என்று மொழியினும் = சிறப்பில்லாதவனைச் சிறந்தவனே என்று கூறினும், அத்தனாய் = தலைவனாய், அமருலகம் = தேவருலகம், ஐயுறவில்லை = சந்தேகமில்லை, தினைத்தாள் = தினைச் செடியின் தண்டு, ஆதி = முதல்வன், ஆள்வரோ = ஆட்கொள்வரோ.

இப்பாசுரத்தில், 'வேதியர் தம்மை வெகுளேன், வெகுண்டவர்க்குந் துணையாகேன்' என்று சுந்தரமூர்த்திகள் தந்த ஆணை கவனிக்கத்தக்கது. இவர் காலத்தில் வேதியர்க்கும் மற்றவர்க்கும் பகையின்றி யிருந்ததாலும், வேதியர் சிறந்திருந்ததாலும் இவ்வாறு கூறினர்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமணர்களைப் பற்றிப் பல இடங்களில் கடிந்து கூறியுள்ளார். ஆனால், சுந்தரமூர்த்தி நாயனரோ, அவ் விருவர்களைப் போன்று சமணரையும் சாக்கியரையும் பற்றிச் சொல்ல வில்லை. ஏனெனில், இவர் காலத்தில் அம் மதங்கள் ஒடுங்கி நாடெல்லாம் சைவ, வைஷ்ணவமுமே, நிகழ்காலத்தில் இருப்பது போல் நிரம்பி யிருந்தன: எவரோ சிலர் சமணர், சாக்கியரிருந்தாரே யன்றி, அதிகமா யில்லை யென்று நிச்சயிக்கலாம்.

## 2. நந்திப்போத்தரையன்

### (கி. பி. 830 — 854.)

தந்திப்போத்தரையன் மகன். நந்தியின் தாய் கதம்ப அரசர் குலத்தில் பிறந்த அக்களநிம்மடி. அவன் இளமையிலே அரசு பெற்றான். இந்தத் தந்தை தந்திவர்மனிருந்த போது வரகுண பாண்டியன் தொண்டை நாட்டில் ஒரு பகுதியைக் கைப்பற்றி பெண்ணையாற்றங்கரையிலுள்ள அரைசூரில் வீற்றிருந்தான் என்றோம். வரகுணனை நந்தி எதிர்த்துச் சென்றான்; சென்று வந்தவாசி தாலூகாவில் உள்ள தெள்ளாற்றில் வரகுணனைத் தோற்கடித்தான். அதனல் அவனுக்குத் தெள்ளாற்றெறிந்த நந்திஎன்ற பெயர் உண்டாயிற்று. பின்பு வரகுணனைப் பின்தொடர்ந்து, மறு போர்களி

லும் ஜயித்து, சோழமண்டலம் முழுவதையும் மறுபடியும் பல்லவ ராஜ்யமாகச் செய்து கொண்டான். அது முதல் கி. பி. 854-ம் வருஷம் வரையில் சமாதானமாய் இருந்து நாட்டைச் செவ்வையாக ஆண்டான்.

நந்திவர்மன் தமிழ்க் கவிகளை அதிகமாய் ஆதரித்ததாகத் தெரியவருகிறது. அதனால் இவனை நாயகனாகக் கொண்டு ஒரு கவி ஒரு கலம்பகம் பாடினான். இதற்கு நந்திக்கலம்பகம் என்று பெயர். அதில் இவனை 'மல்லைவேந்தன்' 'மயிலை காவலன்,' பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி,' 'அமரர் கோமான் அடுபோர்நந்தி,' 'அவனி நாராயணன்' 'விடேல் விடுகு,' என்று புகழ்ந்திருக்கிறது.

இவன் செல்வாக்கு பரவியிருந்த நாடுகளைக் குறித்து,

'செஞ்சாலிவயல் படர்காவிரி சூழ்திரு நாடுடை நந்தி,'
'கரைபொருது இழிதரு காவிரி வளநாடா,'
'வடவேங்கட நாடுடை மன்னர் பிரான்,'
'தமிழ்த் தென்றல் புகுந்து உலவும் சேரநாடா',
'விண்டொருதண்கிரி அளவும் விரஞ்செல்லும் விடேல் விடுகு',

என்றும் பாடி யிருக்கிறது.

---

இன்னும் மல்லை முக்கியத் துறைமுகமாயிருந்தது. மயிலை பல்லவர்க்கு இரண்டாம் தலைநகரம், மயிலை என்றால், இப்போது சென்னபட்டணம் என்பதே, சாலி = நெல், காவிரி சூழ்திரு நாடு = சோழநாடு, மன்னர் பிரான் = மன்னர் தலைவன், தமிழ்த் தென்றல் = தமிழ் நாட்டிலிருந்து வரும் தென்றல், விடேல் விடுகு = நந்தி மன்னரின் பட்டப் பெயர்.

இவன் போர்த்திறத்தைக் காட்ட, நந்திக்கலம்பகத்தி லிருந்து மேற்கோள் ஒன்று வரைவாம்.

தென்னவர் கோன்றன் குறும்பில் செருநர் சூழ்ந்த
சரிகைவிணைப் பகைவருடல் துண்டம் ஆக்கித் துயில்
உணர்ந்தவல் ஆண்மைத் தொண்டை வேந்தே
அமர்வெள்ளாற்று மேவலர் கடந்த செருவேல்.

அமரில் தெள்ளாறு அஞ்சிய நெஞ்சத்
தரசர்கள் திரள்போலும்
கூடார் படையாறு சாயப்பழையாறு வென்றான்
செம்பியர் தென்னர் சேரர் எதிர்வந்து மாய.

தெள்ளாற்றெறிந்த கோவிசய நந்திவிக்கிரமப்போத் தரையன் தமிழ்க் கல்வியில் சிறந்தவன். 'தொல்லை நூல் வரம்பு முழுதுங்கண்டான் நந்தி', என்றும், 'பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தி', என்றும், இவனது புகழை நந்திக் கலம்பகத்தில் கூறியிருக்கிறது. தமிழ்ப் புலவர்களை மிக ஆதரித்தான் என்பதற்கு,

'புலவரைப் புறங்கண்ட புகழ்சேர்கோ,'

'தங்கைப் பூபாலன்மேல் தண்கோவைபாடி
அடங்கைப் பூபால ராஞல்',

---

பாண்டிய மன்னர் போர்வீரர் சூழ்ந்த உடைவாளாற் செய்யும் போரில் வல்ல பகைவர் உடல் துண்டு பட, தூக்கத்தினின்றும் தெளிந்த மிகுந்த ஆண்மையை யுடைய தொண்டை நாட்டு அரசே, தெள்ளாறு = ஓர் ஊர், படையாறு = பகைக்கூட்டம், செம்பியர் = சோழர், தென்னர் = பாண்டியர்.

புலவரை ஆதரிப்பதால் உண்டாகும் புகழ்.

அரசன்மேல் கோவைநூல்பாடி பரிசில்பெற்ற அரசராயினர்.

'செங்கைமுகில் அனையகொடைச் செம்பொன்
மேகத்தியாகி எனும் நந்தி',

என்றும் சொல்லியிருக்கிறது.

பின்னும்,

'வானுறு மதியடைந்ததுன் வதனம்
கானுறு புலியை யடைந்ததுன் வீரம்
கற்பக மடைந்ததுன் கரங்கள்',

என்று பாடியுள்ளது.

நந்தியின் காலத்துக் கவிகளில் மிகப் பெரியார் பாரதம் பாடிய பெருந்தேவனார். இவர் பாரதக்கதையை வெண்பாவாய்ப் பாடினார். அதனது உத்தியோகப்பருவம் முதலில்,

வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாரால் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானொடு
யார்வேந்தர் ஏற்பாடு எதிர்.

என்றிருக்கிறார்.

பாரதம் பாடிய பெருந்தேவனாரை மூன்றும் சங்கப் புலவரி லொருவர் என்று சிலர் கூறுவர். மூன்றும் சங்கம் ஒன்பதாம் நூற்றாண்டுவரையில் நிகழ்ந்ததென்று நம்புவதற்கு இடமில்லை. ஏழாம் நூற்றாண்டில் சமணம் குறைந்து, சைவம், வைஷ்ணவம் உயர்ந்து, அகப்பொருள் புறப்

---

முகில் = மேகம், மேகத்தியாகி = மேகம்போன்று தியாகஞ் செய்யும் நந்தி, வண்மை = ஈகை, ஆள்வினை = காரியத்தைச் செய்யும் வகை, திண்மை = கலங்காமை, நந்தியைப் பல குணங்களினும் ஒத்தவர் ஒருவரும் இலரென்பதாம்.



மலையடிப்பட்டி கோயில் தேர் மண்டபம்.

பொருள் சுவைகளில் ஊக்கம் குன்றி, பக்தி மிகுவதற்கு முன்னமே சங்கக் காலமும் முடிந்துவிட்டது. பாண்டியர் சாசனங்களில் சங்கத்தைப்பற்றி ஒன்று மில்லாததால், அச் சாசனங்கள் பிறக்கு முன்னமே, மூன்றுஞ் சங்கம் முடிந்து விட்டதுபோலும். ஆகையால் பாரதம் பாடிய பெருந்தேவனார் சங்கப் புலவர் அல்ல. ஆனால் அவர் காலத்தில் மக்கள் மறந்து போகாதிருந்த சங்கச் செய்யுள்களையும் புறம், அகம், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, முதலிய தொகைகளாகத் தொகுத்து, அவைகட்குப் பாயிரம் பாடினார்.

தெள்ளாற் றெறிந்த நந்தியின் காலத்துச் சாசனங்கள் பல அகப்பட் டிருக்கின்றன. அதில் முக்கியமானது வேலூர்ப் பாளையம் சாசனம். இது "கோவிசை நந்திவர் மற்கு யாண்டு ஆறாவது சோழ மகாராஜர் விண்ணப்பத் தால்" அளித்தது. இந்தச் சோழன் பெயர் குமாராங்குசன். வேலூர்ப் பாளையம் என்னும் கிராமம் அரக்குண்ணத்துக்கு ஏழு மைலி லுள்ளது. இச் சாசனத்தில் பல்லவ வம்சம் விஷ்ணுவுடன் ஆரம்பித்து, நந்திவரையில் வந்ததாய் எழுதி யிருக்கிறது. அன்றியும், எங்கும் பெயர் கேள்விப்படாத பல அரசர் பெயர்களை நந்தியின் முன்னோர்களில் சேர்த் திருக்கிறது.

வேலூர்ப் பாளையச் சாசனத்தால் செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி தாலூகா, "புறழ்க் கோட்டத்து நாயறு நாட்டுத் திருக்காட்டுப் பள்ளிப் பஞ்சவாம் ஆயிரக்காடி" தானமாய்க் கொடுபட்டது. இதிலுள்ள "பரிகாரம் நாடாட்சியும், ஊராட்சியும், புரவு பொன்னும், திருமுக்காணமும், வட்டி நாழியும், புதாழியும், தட்டு காயமும், ஈழம் பூட்சியும், இடைப் பூட்சியும், மன்று பாடும், தரகும், தறுக்கூறையும், கூலமும், நல்லாவும், நல்லெருதும், நல்லாடும், நாடுகாவ

லும், ஊடுபோக்கும், கல்லாணக்காணமும், குசக்காணமும், பறைக்காணமும்.'' அவ்வூர்க் கோயிலிலுள்ள மகாதேவர்க்குத் தேவ தானம். சாசனத்தால் கொடுத்த உரிமைகள்—''சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும், தமனகமும் இருவேலியும் செங்கழுநீரும் உள்ளியும் நடைப்பெறுவதாகவும், காவு தெங்கிடப் பெறுவதாகவும், இவ்வூரெல்லை உள்ளிட்ட தெங்கும் பனையும் இவர்கள் மனமின்றி ஈழவேரறப் பெறுதாகவும்.'' இச்சாசனத்தைத் தவிர, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் உள்ள கிராமங்களான திருவெள்ளறை, தில்லை ஸ்தானம், செந்தலை, கோவிலடி, திருப்பாய்த்துறை முதலிய பல ஊர்களில் இவனது கல்வெட்டுகள் காணப்பெறும்.

நந்திப்போத்தரையன் காலத்தில் சோழ நாடு முழுவதும் பல்லவ ராஜ்யத்துடன் கலந்திருந்தது. கும்பகோணத்துக் கருகிலுள்ள திருநாகேசுவரம் என்ற ஊருக்கு முன்பு குமாரமார்த்தாண்டபுரம் என்று பெயருண்டு. குமாரமார்த்தாண்டன் என்பது நந்திபோத்தரையனுக்கு ஒரு பெயருண்டு. ஆதலால் அவ்வூரை நந்திவர்மன் பிரம தேயமாகக் கொடுத்திருக்கவேண்டும். இவ்வூரில் அப்போது மிலாடுடையார் பள்ளி என்ற ஒருகோயில் இருந்தது. மிலாடுடையார் என்பது மெய்ப்பொருள் நாயனார் என்ற சிவனடியார் பெயர்.

இதுவுமன்றி நந்திவர்மன் திருச்சிராப்பள்ளிக் கடுத்த திருக்கற்குடி யென்னும் உய்யக்கொண்டான் திருமலையைச் சுற்றியுள்ள நிலத்தை நான்குவேதமும் பயின்ற பிராமணர்களுக்கும் பிரமதேயமாய் அளித்தான். அது முதல் அவ்வூருக்கு நந்திவர்ம சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் உண்டாயிற்று. இத்தகைய தானங்கள் நந்திவர்மன் இன்னும் பல செய்திருக்கவேண்டும்.

அவ்வூர்ச் சாசனங்களில் 'விடேல் விடுகுகல்' என்ற மொழி உண்டு. இதனால் நிறுக்கும் நிறைகளை இப்போது இராஜாங்கத்தார் பரீட்சை செய்வதுபோல் அப்போதும் செய்து வந்தார்கள் என்று அறியலாம். விடேல் விடுகு என்பது நந்தியின் பட்டப்பெயர். ஆகையால் இந்த விடேல் விடுகுகல் என்ற நிறையை அவனே சீர்திருத்தி ஏற்பாடு செய்தான் என்று ஊகிக்கவேண்டியது.

திண்டிவனம் தாலூகாவில் கிளிஞலூர் என்ற கிராமம் இருக்கிறது. நந்திவர்மன் காலத்தில் அந் நாட்டுக்கு ஓய்மா நாடு என்று பெயர். அங்கே திகைத்திறலார் என்றவர் நந்திவர்மற்கு யாண்டு 3-வதில் திகைத்திறல் விஷ்ணுக் கிருகம் ஒன்று கட்டினர்.

அன்றியும் திருவல்லத்துப் பில்வநாத சுவாமி கோயில் மகாமண்டபத்தில் விசைய நந்திவிக்கிரமன் 17-ம் ஆண்டில் அளித்த 'சாசனமொன்று கல்லில் வெட்டியிருந்தது. பிற்காலத்தில் மண்டபத்தை இடித்துக் கல்வெட்டைத் திரும்பி வெட்டுவித்தார்கள். இதில் ஆராய்ச்சி செய்வதற்குப் பல விஷயங்க ளிருக்கின்றன வாதலால் இதை முழுவதையும் எழுத்து முறையிலுள்ள சில தப்புகளை மாத்திரம் திருத்தி வரைவாம் :—ஸ்வஸ்தி ஸ்ரீ திருமண்டமிழிச்சி யெடுப்பவற்கு முன்புள்ள சிலாலேகைப்படி, கோவிஜய நந்தி விக்கிரம பன்மற்கு யாண்டு 17-வது படுவூர்க்கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலி வல்லமுடைய பரமேச்வரர்க்கு இன்னுட்டு ஐம்பூணியும் விளத்தூரும் இத்தேவர் தேவதானம். அமருன்றி மங்கலமும் விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதி மங்கலமென்னும் போரால் ஏகக்கிராமமாக மாவலிவாண ராயனை விக்கிரமாதித்தவாண ராயன் விண்ணப்பத்தாலும், காடுவெட்டிப் போரயன் ஆணத்தியாலும்,

ஏகக்கிராமமாக்கி, இவ்வமருன்றி மங்கலம்முன் இத் தீக்காலி வல்லமுமுடைய பரமேச்வரர்க்கு இறுத்துவருகின்ற ஐ இரண்டாயிரக்காடியும் பொன் னிருப்பதின் கழஞ்சும் இவ் விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதி மங்கலச் சபையார் இறுப்பாராகவும். இந் நெல்லில் திருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக்காடியும் திருவுண்ணாழிகை யுள்ளாராதி துப்பு ஆசரிக்கும் சிவப்பிராமணர்களுக்கு நெல்லு ஐந்நூற்றுக்காடியும், திருப்பள்ளித் தாமம் கறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வார்க்கு நெல்லு நானூற்றுக்காடியும், திருநந்தா விளக்குக்கும், திருமெய்ப்பூச்சுக்கும், சிதாரிக்கும், மற்றும் கண்டஸ்புடிதநவகர்மாதிகளுக்கும், ஆகப்பொன் இருபதின் கழஞ்சும் ஆக இந்நெல்லும் இப்பொன்னும் இத்தேவர்க்கு சந்திராதித்த வல்லிறுப்பார்களாகவும். இப்பரிசு நிவந்தமாகச் செய்துகொடுத்தோம். இத்தர்மம் பன்மாஹேச்வரரக்ஷை. இச்சாசனத்தால் திருப்பதிகம் என்கிற தேவாரம் பாடுவது கோயில்களில் ஏற்பட்டது என்று அறியலாம்.

பல்லவமல்லன் இறந்தது முதல், சாசனங்களில் சோழர் என்ற பெயர் அடிக்கடி வருகிறது. முத்தரையர் பலம் குன்றி, தஞ்சையில் சோழர் தம் ஆட்சியை நாட்ட முயற்சி ஆரம்பித்தார் போலும். நந்தியின் காலத்தில் ஆண்ட முத்தரையர் விடேல் விடுகு முத்தரையனும் அவன் மகன் சாத்தம்பழியிலியும். சாத்தம் பழியிலி புதுக்

---

'ஐ' என்றால் நெல்லுக்கு ஒரு குறி, இறுத்தல்=செலுத்துதல் (வரி செலுத்துதல்), திருவமிர்து=நைவேத்தியம், துப்பு ஆசரிக்கும்=உணவு தயாரிக்கும், திருப்பள்ளித்தாமம்=மாலை, திருப்பதிகம் = தேவாரம் திருவாசகம் முதலாகிய பதிகங்கள், நந்தா விளக்கு=அணையாத விளக்கு.

கோட்டை நாட்டிலுள்ள நார்த்தா மலையில் ஒரு கோயில் கட்டினான். இவனுக்குப் பின் முத்தரையர் ஆண்டதாகத் தெரியவில்லை.

தெள்ளாற்றெறிந்த நந்தி இறந்தவகையைப்பற்றி ஒரு கதையுண்டு. இவன் பொருளை யாசிப்பவர்க்குச் செலவு செய்தலில் பொறாது இவனைக் கொலைபுரிய எண்ணிய இவன் சகோதரன் வசையாகக் கலம்பகம்பாடி ஒரு புலவனை அரசனது ஏகாந்தத் தலத்துச்சுவரில் தொளையிட்டு, அதன் வழியாய்க் கலம்பகத்திலிருந்து ஒரு பாட்டைப் பாடி, ஓடிவிடச்செய்தான். அரசனும் கலம்பகம் முழுவதும் கேட்க வேண்டுமென்று ஆசை கொண்டிருக்கும் நாளில், ஒரு பொழுது நகரை வலம்வரத் தாசி யொருத்தி இச்செய்யுளை வீணையில் பாடக்கேட்டான். சுடலையளவு பந்தல்கள் போடச் செய்வித்துத் தாசி ஒவ்வொரு பந்தலில் ஒவ்வொரு பாட்டைப் பாடக்கேட்டு வருகையில், அப் பந்தல்கள் தீப்பற்றக் கண்டும், மனஞ்சலியாது, நூறுவது செய்யுளைக் கேட்க ஆவல்கொண்டு சிதைமேலிருந்து,

வானுறுமதியை யடைந்த துன்வதனம்
வையகமடைந்ததுன் கீர்த்தி,
கானுறு புலியை யடைந்தது உன்வீரம்
கற்பக மடைந்ததுன் கரங்கள்,
தேனுறு மலராளரியிடஞ் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி,
யானு மென்கவியு மெவ்விடம் புகுவோம்
எந்தையே நந்தி நாயகனே.

என, இதைக்கேட்டுச் சிதை தீப்பற்ற உயிர் நீங்கினான்.

மாணிக்கவாசக சுவாமிகள் இக்காலத்தி லிருந்ததாகத் தோன்றுகிறது. ஏனெனில் அவர் பாடிய திருவாசக நடை சங்கச் செய்யுள் நடைபோலில்லை; வடமொழிச் சொற்களும் நிறைந்துளது. அன்றியும் இவரை அறுபத்து மூவரில் சேர்க்கவில்லை. இவர் பாட்டுகளைத் தேவாரமென்று சொல்வ தில்லை. அன்றியும், இவர் கதையில் சோழர் பெயர் வர வில்லை. ஆகையால் பாண்டியர் உயர்நிலையிலிருந்து சோழர் ஆட்சி உறையூரில் அழிந்து, மீண்டும் அச்சோழர் ஆட்சி, தஞ்சாவூரில் உண்டாகாத காலத்தில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும். அன்றியும் இவர் பாடிய திருச்சிற்றம்பலக்கோவை யில் வரகுணன் பெயர் 306, 327-ம் பாட்டுகளில் வந்திருக் கிறது. இவ் வரகுணன் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தொண்டைநாட்டையும், சோழநாட்டையும் மதுரையுடன் சேர்த்த மாறஞ்சடையனே. இக் காரணங்களால் மாணிக்க வாசகர் ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந் திருக்க வேண்டும். இவரது திருவாசகம் புலவர்க்கும், மற்ற வர்க்கும் சுவைதரும் காவியம். இதில் சிவனது லீலைகளை மிகப் புகழ்ந்திருக்கிறார்; அப் புகழ் சிறுவர் சிறுமியர் ஆட்டங்களில் வழங்குமாறு பாடியது; எனினும் அளவற்ற பக்தி மனதில் ஊறுமாறும், எளிய, இனிய நடையுடைத் தாயது. இதைக் காட்டச் சில மேற்கோள்கள் கொடுப்போம்.

ஆர்த்த பிறவித்துயர் கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்! நற்றில்லைச் சிதம்பரத்தே தீஆடும்
கூத்தன்! இவ்வானும் குவலயமும் எல்லோரும்
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப வார்கலைகள்,

---

ஆர்த்த=நெருங்கி, தில்லை=தில்லை மரங்கள் அடர்ந்த காடு, குவலயம்=பூமி, கரந்தும்=மறைந்தும்.

ஆர்ப்பரவஞ் செய்ய, அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

கைஆர் வளைசிலம்பக் காதார் குழைஆட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

வையகமெல்லாம் உரலதாக மாமேரு என்னும்
உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சணிறைய வட்டிமேதகு
தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச் செம்பொன்
உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே ஆடப்பொற்
சுண்ணம் இடித்துநாமே.

கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென்றிவை இரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

---

சிலம்ப=ஒலிக்க, செறிந்தானை=நிறைந்தானை, ஐயாறமர்ந்தானை = திருவையாற்றில் எழுந்தருளி யிருப்பவனை, ஆர்ப்பரவம்=மிகுந்த ஒலி, பொய்கை=தடாகம், வையகம்=பூமி, மாமேரு=மகமேரு, சுண்ணம்=தூள், கறைமிடறு=விஷத்தை யுண்டதால் இருண்டிருக்கும் கண்டம், சார்தலுமே=பொருந்துதலுமே.

வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவனைத் தோளியொடும் புகுந்தருளி
நனவேஎனைப் பிடித்தாட்கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கணீர் மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

மலை அரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
உலகறியத் தீவேட்டான் என்னும் அது என்னேடி
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ.

பாலும் அமுதமும் தேன்உடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலமும் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லிக் கொய்யாமோ.

---

கன்னெஞ்சு = கல்நெஞ்சு, திளைக்கும் = ஆடும், கனைகழல் = ஒலிக்கும் கழல், சினவேற் கணீர் = சினவேல் கண்ணை யுடையீர், தெள்ளேணம் = ஓர்வகையான விளையாட்டு, அரையன் = அரசன், வாணுதல் = வாள் + நுதல் = ஒளிபொருந்திய நுதல், திரு = இலக்குமி, தீவேட்டான் = நெருப்பைக்கொண் டாகுதி செய்தான், உலகனைத்தும் = உலகமுழுதும், கலை நவின்ற பொருளெல்லாம் = சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பொருள்களெல்லாம், பராபரமாய் = உயர்பொருளாய், குரைகழல்—சப்திக்கின்ற கழல்கள், ஞாலம் = பூமி, பரவுவார் = வணங்குவார், கொய்யாமோ = கொய்வாம்.

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புர முந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற
ஈரம்புகண்டில் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புர முந்தீபற
ஒன்றும் பெருமிகை யுந்தீபற
தச்சு விடுத்தலும் தாம் அடி இட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புர முந்தீபற
உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல்கொண்
டெய்ய வல்லானுக்கே யுந்தீபற.

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண் வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலஆகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

காருடைப் பொன் றிகழ்மேனிக் கடிபொழில் வாழுங்குயிலே
சீருடைச் செங்கமலத்திற் றிகழுருவாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை ஆண்ட
ஆருடை அம்பொனின்மேனி அமுதினை நீ வரக்கூவாய்.

---

பூசல் = சண்டை, உளைந்தன = வருந்தின, முப்புரம் = மூன்று புரங்கள், ஏகம்பர் = காஞ்சிபுரத்திறைவர் ஒற்றை அம்புடையவர், பெருமிகை = பெரிதும் மிகுதி, அடி இட்டல் = பாதம் வைத்தல், உய்யவல்லார் = பிழைக்கல்லவர்கள், எய்யவல்லானுக்கு = பாணம் செலுத்த வல்லவனுக்கு, நீள் விசும்பு = நீண்ட ஆகாயம், பகலோன் = சூரியன், புலனாய் = அறிவாய், தோணோக்கம் ஆடாமோ = ஓர் வகையான ஆட்டத்தை ஆடுதல். காருடைப் பொன் = இரும்பு, கடிபொழில் = வாசனை நிரம்பிய சோலை, திகழ் = விளங்கும், பாரிடை = பூமியினிடத்தில், பாசம் = பந்தம், ஆர் = ஆத்திப்பூ.

## 3. துங்கப் போத்தரையர்

(கி. பி. 854—880)

நந்தியின் மகன் துங்கன். துங்கன் தாய் சங்கை என்பாள். இவள் இராஷ்டிரகூட மன்னனான அமோகவர்ஷன் பெண். அமோகவர்ஷன் (கி. பி. 714—817) அப்போது உலகத்தில் ஆண்ட அரசரெல்லோரினும் பெரியவனென்று கியாதி பெற்றவன். அவனுக்கு ஜகத்துங்கன் என்றொரு பெயருமுண்டு, அதனால் அவன் பேரனுக்குத் துங்கனென்ற பெயர் வந்தது. துங்கப் போத்தரையனுக்கும் பாண்டியனுக்கும் போர் நிகழ்ந்து கொண்டே யிருந்தது. துங்கனை எதிர்த்த பாண்டியன் பெயர் மாறன், ஸ்ரீவல்லபன், ஏகவீரன். இவன் வரகுணன் மகன். பாண்டியனுக்கும் பல்லவனுக்கும் குடமூக்கு என்கிற கும்பகோணத்தில் அரசிலாற்றங்கரையில் போர் நடந்தது.

பாண்டியனும் பல்லவனும் இவ்வாறு தலைமுறை தலைமுறையாக யுத்தஞ் செய்து கொண்டிருந்ததால் இருவர் பலமும் குறைந்து ஒரு புதிய குலம் உயர்நிலை பெற்றது. அது தஞ்சைச் சோழர்குலம். இக்குலத்தார் ஆட்சியை விஜயாலயன் என்பான் கி. பி. 860 - இல் தஞ்சாவூரில் ஏற்படுத்தினன். வெகு வேகமாய் அக்குலம் கீர்த்தி பெற்று ஓங்கிற்று.

நந்திப்போத்தரையன் மனைவி அடிகள் கண்டன் மாறம் பாவை சோழ அரசன் ஆதித்தியனது ஆட்சியிலுள்ள தஞ்சாவூருக்கடுத்த நியமம் கிராமத்தில் அவ்வரசன் 24-வது ஆண்டில் மகாதேவர்க்கு திருவமிர்து ஐப்பசி விஷு சித்திரை நாளில் செய்தருள நெல், பால், தயிர், 5-நாழியும், அரிசி பதக்கு நானாழியும் வாங்க 5-கழஞ்சு பொன் தானம் செய்

தாள். இதனால் பல்லவ அரசி சோழர்நாட்டில் தானம் செய்வதற்கு அப்போது தடையொன்றும் ஏற்படவில்லை என்றறியலாம்.

வட ஆற்காடு ஜில்லா அரக்குண்ணம் தாலூகாவில் காவிடிப்பாக்கம் என்கிற ஊர் உண்டு. அதை இப்போது காவேரிப்பாக்கம் என்கிறார்கள். இது பழைய காலத்துப் பல்லவ பிரமதேயம். படுவூர்க்கோட்டம் மாங்காடு நாடு அவனி நாராயண சதுர்வேதி மங்கலம் என்பது முற்காலத்திய பெயர். இவ்வூரில் துங்கப்போத்தரையன் பல தானங்கள் செய்தான். இவ்வூரில் உள்ள 'பெரிய ஏரி' யையும் அதைப் பாதுகாத்து வந்த கணத்தாரான 'ஏரிவாரிகம்' என்பதையும் இவ்வூர்க் கல்வெட்டில் குறித்திருக்கிறது. பெரிய ஏரியை தந்தி வர்மன் வெட்டினான்போலும். ஏரிக்கு முதற்கொண்டு வருஷா வருஷம் தெரிந்தெடுத்த பெருமக்களை ஏரிவாரிகம் என்று ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள்.

இதேமாதிரி மதுராந்தகத்துக்கடுத்த பரமேசுவர மங்கலத்தில் (இந்த ஊர் பரமேசுவரப்போத்தரையன் கொடுத்த பிரமதேயம்போலும்) துங்கவர்மனது 16-ம் ஆண்டில் சைலேசுவர மகாதேவர்க்கு நிவேதனத்துக்காக 11-கழஞ்சு பொன் மண்ணைக்குடி மறமடக்கி விழுப்பேரரையன் மகனை நந்தி நிறைமதி தானஞ்செய்தான். நந்திவர்ம பல்லவ மல்லன் மண்ணைக்குடியில் பாண்டியனை வென்றானென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அப்போரில் இவ்விழுப் பேரரையன் நின்று சண்டை போட்டான்போலும். நிறைமதி கொடுத்த தானத்தை சைலேசுவரத்துக் கணப்பெருமக்கள் பெற்று நடத்தினார்கள். கணப்பெருமக்கள் என்பது ஆளுங்கணத்தாரென்பதற்கு மறுமொழி. அமிர்தகணத்தாரென்று மற்

றோர் மொழியுமுண்டு. இவ்வரிய மொழிகள் இப்போது வழங்காதிருப்பது துக்கிக்கத்தக்கது.

'ஏரிவாரிகம்' போலவே 'தோட்டவாரிகம்' முதலிய பெருமக்கள் சபைகள் அக்காலத்திலும் ஒவ்வொரு ஊரிலும் பல உண்டு. ஒவ்வொரு ஊர் இராஜாங்கக் காரியமும் அவ்வூர்ப் பெருமக்களே பார்த்து வந்ததால் பொதுக்காரியம் செவ்வையாக நிகழ்ந்தது.

துங்கப் போத்தரையன் எதிரி ஸ்ரீ வல்லபன் பெரியாழ்வார் என்பவரை ஆதரித்தான். இவருக்கு முதலிலிட்ட பெயர் விஷ்ணுசித்தன். இவர் பிறந்த ஊர் வில்லிபுத்தூர்; ஆகையால் இவரை வில்லிபுத்தூரார் என்றும் கூறுவதுண்டு. இவர் பாடின பாட்டுக்குப் பெரியாழ்வார் திருமொழி என்று பெயர். இவர் கண்ணபிரானது குழந்தைப் பருவத் திருவிளையாடல்களைப் பற்றி அதிகமாய்ப் பாடியிருக்கிறார். இவர் பாட்டின் நடை பெரும்பாலும் திருவாசக நடையை யொத்திருக்கும். மாணிக்கவாசகர் சிறுவர் ஆடும்போது பாடும் பாட்டுகளை யொத்துப் பாடியிருப்பது போலவே, பெரியாழ்வாரும் பாடியிருக்கிறார். ஆகையால் விஷ்ணு பக்தியை பெரியாழ்வார் திருமொழியும், சிவபக்தியை மாணிக்கவாசகர் திருவாசகமும் அதிகமாய் வளர்க்கக் கூடியவை.

பெரியாழ்வார் நடை பின்வரும் பாசுரங்களால் விளங்கும்.

செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்து உன் பவளவாய் மொய்ப்ப
சங்குவில்வாள் தண்டுசக்கரம் ஏந்திய
அங்கைகளாலே வந்து அச்சோ அச்சோ
ஆரத்தழுவா வந்து அச்சோ அச்சோ.

---

கமலம் = தாமரை, பங்கிகள் = தோழிகள், மொய்ப்ப = நெருங்க.

தத்துக்கொண்டாள் கொலோ? தானே பெற்றாள் கொலோ?

சித்தமனையாள் அசோதை இளஞ்சிங்கம்
கொத்தார்க் கருங்குழல் கோபாலகோளரி
அத்தன் வந்தப்பூச்சி காட்டுகின்கிறான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

ஆலத்திலையான் அரவினணை மேலான்
நீலக்கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான்
பாலப் பிராயத்தே பார்த்தற் கருள்செய்த
கோலப்பிரானுக்கோர் கோல் கொண்டுவா
குடந்தைக் கிடந்தாற்கோர் கோல் கொண்டுவா.

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண்கோடச் செய்யவாய்க் கொப்பளிப்ப
குருவெயர்ப் புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது

பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்துசூழ்ந்து படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே.

---

தத்துக்கொண்டாள் = தத்துக்கொள்ளுதல், கொத்தார் = கொத்துகள் நிறைந்த, கோளரி = சிங்கம், அத்தன் = தலைவன், ஆலத்திலையான் = ஆலமரத்தின் இலையில் துயில்பவன், அரவினணை மேலான் = பாம்பின் படுக்கைமேலிருப்பவன், குடந்தை = கும்பகோணம், கோட = வளைய, கூடலிப்ப = வளைய, பறவையின் கணங்கள் = பறவையின் கூட்டங்கள், கூடுதுறந்து = கூட்டை விட்டு ; கறவையின் கணங்கள் = பசுவின் கூட்டங்கள்.

விஷ்ணு சித்தர் மகள் கோதை என்னும் ஆண்டாள். பெருமாளுக்குத் தந்தை திருவாராதனம் செய்ய வைத்திருந்த பூவை ஒருவருக்கும் தெரியாமல் சூடிக் கொண்டு திரும்பி அவிழ்த்துக் கொடுத்ததால் சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் பெயர். அவளுக்கு அரங்கத்துப் பெருமான் மேல் அளவற்ற அன்புண்டாய், அவள் பாடியது திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும். மிக அழகாயும் எளிதாயும் எவருள்ளத்திலும் தானே இறங்கவல்லதாயும் இவள் பாட்டு இருக்கும். பெரியாழ்வார் திருமொழியில் கண்ணன் திருலீலையைப்பற்றிப் பாடியது போலேயே இவளும் பாடினாள்.

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமற்காத்து உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோதுகலமுடைய
பாவாய் எழுந்திராய்பாடிப் பறைகொண்டு
மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந்தருளேலோ ரெம்பாவாய்.

என்புருகியின வேல் நெடுங்கண்கள்
இமை பொருந்தா பலநாளும்
துன்பக்கடல் புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணி பெறாது உழல்கின்றேன்

---

கூவுவான் = கூப்பிடும் பொருட்டு, கோதுகலமுடைய பாவாய் = விருப்பமுடைய பெண்ணே, சேவித்தால் = தரிசித்து வணங்கினால், வேல் நெடுங்கண் = வேலாயுதம் போன்ற நீண்ட கண்கள், வைகுந்தன் = வைகுந்தம் என்ற பெயரையுடைய மோக்ஷ வீட்டிற்குத் தலைவன், உழல்கின்றேன் = சுழல்கின்றேன்.

அன்புடையாரைப் பிரிவுறு நோயது
நீயுமறிதி குயிலே
பொன்புரை மேனிக்கருளக் கொடியுடைப்
புண்ணியனை வரக்கூவாய்.

கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப் பொருதவனார் பேர் சொல்லி
நீர்காலத்தெருக்கில் அம்பழ விலைபோல் வீழ்வேனை
வார்காலத் தொருநாள் தாம் வாசகம் தந்தருளாரே.

நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள் உம்மை
நடமாடங் காணப் பாவியேன் நானோர் முதலிலேன்
குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறை செய்து எம்மை
யுடைமாடு கொண்டான் உங்களுக் கினியொன்றுபோதுமே.

கூட்டிலிருந்து கிளியெப்போதும்
கோவிந்தா கோவிந்தா என்றழைக்கும்
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்
உலகளந்தா னென்றுயரக் கூவும்
நாட்டில் தலைப்பழி யெய்தியுங்கள்
நன்மை யிழந்து தலையிடாதே
சூட்டியர் மாடங்கள் சூழ்ந்துதோன்றும்
துவாரப் பதிக்கென்னை யுய்த்திடுமின்.

---

அறிதி = அறிவாய், கருளக்கொடி = கருடக்கொடி, கார் காலம் = மழைக்காலம், கார்முகில்கள் = கரிய மேகங்கள், பொருதல் = போர்புரிவல், அம்பழவிலை = அழகிய பழைய விலை, தோகை = சிறகு, நானோர் = நான் + ஓர், குடமாடு கூத்தன் = குடக்கூத்து என்ற கூத்தையுடையவன், செறுத்தல் = கோபித்தல், தலைப்பழி = கொடியபழி, சூட்டியா மாடங்கள் = மிகவும் உயர்ந்த மாடங்கள்.

இயற்கைப் பொருள் வர்ணனையென்ன, இனிமையான மொழிக்கோவையென்ன, உள்ளம் உருகும் உவப்பென்ன, தானே மலரும் தேனெழுகும் பூவைப்போல் இதயகமலத்தி லிருந்து எழும் இப்பாட்டுகளைவிட உயர்வுற்றது எம்மொழி யிலும் கிடையாது.

கடவுளைத் தலைவனாயும், தன்னைத் தலைவியாயும் பாவிக் கும் முறையில் இந் நாச்சியார் பாடின பத்துப்பாட்டுகளை வைஷ்ணவர் வீட்டுக் கலியாணங்களில் இப்போதும் பாடு வர். அதில் கோதை நாரணனை மணம்புரிந்ததாகக் கனவு கண்டதைப் பாடுகிறாள்.

வாரண மாயிரம் சூழவலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

கதிரொளி தீபம் கலசமுடனேந்தி
சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள
மதுரையார் மன்னனடி நிலை தொட்டு எங்கும்
அதிரப் புகுதக்கனாக் கண்டேன் தோழீநான்.

குங்கும மப்பிக்குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலஞ் செய்து மணநீர்
அங்கவனோடும் உடன் சென்றங்கானை மேல்
மஞ்சன மாட்டக்கனாக் கண்டேன் தோழீநான்.

---

வாரணம் = யானை, பூரணபொற்குடம் = பூரணகும்பம், ஒரு குடத்தில் ஜலம்விட்டு, பொட்டிட்டு மாலைசூட்டி, அரிசியைப் பரப்பி அதன்பேரில் வைத்தல், சதிரிளமங்கையர் = அழகிய பெண் கள், அதிரப்புகுத = அதிர்ச்சியுண்டாகப் புகுவதாக, சாந்தம் அட்டி த்து = சந்தனம் தடவி, மஞ்சனமாட்டுதல் = ஸ்நானம் செய்வித்தல்.

நம்மாழ்வார் மற்ருராழ்வார். வேளாளர் திருக்குருகூரில் பிறந்தவர். மாறர், சடகோபர், வகுளாபரணர், பராங்குசர் என்றும் மறு பெயர்கள் இவர்க்கு உண்டு. இவர் பாண்டிய நாட்டிலுள்ள திருப்பதிகளையே அதிகமாகப் பாடினர். அதில் ஸ்ரீவரமங்கலம் ஒன்று. இவ்வூருக்கு இப்பெயர் கி. பி. 783-இல் இட்டது. அன்றியும் வரகுண மங்கலத்தைப் பாடியிருக்கிருர். ஆகையால் வரகுணனுக்குப் பின் தான் இவர் இருந்திருக்கவேண்டும். இவர் பாடினது திருவாய் மொழி, திருவாசிரியம், திருவிருத்தத் திருவந்தாதி. இவர் பாசுரங்களில் பக்திரசம், ஞானரசம் இரண்டும் கலந்திருக்கும். வேதாந்த விசாரணை அதிகமா யிருக்கும். இவர் நடை மற்றை ஆழ்வார்கள் நடையைப் போல் அவ்வளவு எளிதல்ல. ஆயுள் நாளெல்லாம் யோகம் பயின்றவர். இந்த விஷயங்களுக்கு ஆதாரமாய்ச் சில செய்யுள்களை மேற்கோள்களாய் காட்டுவோமாக —

நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்ருல்
என் செய்யோம் இனி யென்ன குறைவினம்
மைந்தனை மலராள் மணவாளனைத்
துஞ்சும்போதும் விடாது தொடர் கண்டாய்.

சாதி மாணிக்கமென்கோ சவிகொள் பொன்முத்தமென்கோ
சாதி நல்லவைரமென்கோ தவிவில் சீர்விளக்க மென்கோ
ஆதியஞ் சோதியென்கோ ஆதியம்புருடனென்கோ
ஆதுமில் காலத்தெந்தை அச்சுத னமலனையே.

---

மலராள் மணவாளன் = இலக்குமி கணவன், துஞ்சும் போதும் = இறக்கும் போது, சவிகொள் = ஒளிகொள், தவிவில் = கெடுதலில்லாத ஆதியஞ்சோதி = முதன்மையான அழகிய சோதி, அச்சுதன் = அழிவில்லாதவன்.

குலந்தாங்கு சாதிகள் நாலினுங் கீழிழிந்த தெத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற் காளென்று
கலந்தார் அடியார் தம்மடியார் எம்மடிகளே.

அளிக்கும் பரமனைக் கண்ணனை ஆழிப்பிரான் தன்னை
துளிக்கும் நறுங்கண்ணித் தூமணி வண்ண னெம்மான்தன்னை
ஒளிக்கொண்ட சோதியை உள்ளத்துக் கொள்ளு மவர்கண்டீர்
சலிப்பின்றி யாண்டெம்மைச் சன்ம சன்மாந்தரங் காப்பாரே.

இவர் இறைவனது உருவத்திருமேனியைப் பற்றிப் பல இடங்களில் கூறித் துதித்திருப்பினும் வேறு சில இடங்களில், அருவம் முதலியவைகள் கடந்தப்பாலுள்ள அருந் திருமேனியைப் போற்றிக் கூறியுள்ளார். இது பல சமயத்தாரும் கொண்டாடுமாறு இருக்கும்.

உயர்வற வுயர்நல முடையவ னவனவன்
மயர்வற மதிநல மருளின னவனவன்
அவர்வற மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே.

---

வலந்தாங்கு சக்கரத்தண்ணல் = வலது கரத்தில் சக்கரத்தை யேந்தும் ஐயன், மணிவண்ணன் = மணிபோன்ற அழகுடையன், உள்கலந்தார் = உள்ளத்தே கலந்தவர், அளிக்கும் = காக்கும், ஆழிப் பிரான் = சக்கரத்தையுடைய தலைவன், நறுங்கண்ணி = வாசனை யுள்ள மாலை, சலிப்பின்றி = ஓய்வின்றி, மதிநலம் = அறிவு நலம், அயர்வறு = துன்பமற்ற, அமரர்கள் = தேவர்கள், துயரறு = துன்ப மற்ற; தொழுதெழல் = தொழுதெழுவாயாக.

# 4. அபராஜிதப் போத்தரையன்

(கி. பி. 870—900)

துங்கன் மகன் அபராஜிதன் பட்டம் பெற்றவுடன் பாண்டியனுடன் போர் நேர்ந்தது. அப்போது ஆண்ட பாண்டியன் ஸ்ரீ வல்லவன் குமாரனை இரண்டாம் வரகுணன். இப்போரில் கங்கைகுல அரசன் ப்ருதிவிபதி (தமிழில் பிருதி கங்கை கையனென்று பெயர்) பல்லவனுக்கு உதவி புரிந்தான். தஞ்சாவூரில் புதிதாய்க் கிளம்பின சோழகுல அரசன் விஜயாலயனது மகன் ஆதித்திய ராஜ கேசரி பாண்டியர் பக்கத்தில் நின்று போர் செய்தான். அப்போர் கும்பகோணத்துக்கு அடுத்த திருப்புறம்பியத்தில் நிகழ்ந்தது. அதில் பிருதி மாணமுற்றான். அபராஜிதன் தோல்வியடைந்தான். அதுமுதல் அபராஜிதன் சாசனங்கள் சோழநாட்டில் இல்லை. அவன் சாசனங்களெல்லாம் திருவொற்றியூர், திருத்தணிகை முதலிய சென்னபட்டணத்துக் கடுத்த ஊர்களிலே உள்ளன.

கொடும்பாளூர் அரசன் பூதி விக்கிரமகேசரி காவேரிக் கரையில் பல்லவசேனை மேல் வெற்றி பெற்றான் என்று கொடும்பாளூர் மூவர் கோயில் வடமொழிச் சாசனத்தில் இருக்கிறதால் இந்த யுத்தத்தில் வரகுண பாண்டியன் பக்கத்தில் விக்கிரமகேசரி நின்று போர்புரிந்தான் போலும். இவனுக்குக் கற்றளியென்று, வரகுண என்றும், இருவர் மனைவிகள். கொடும்பாளூரில் மூவர் கோயில் என்று மூன்று விமானங்கள் கட்டி அவைகளில் மகேசுவரனை தன் பெயராலும் தன்னிரு மனைவிகள் பெயராலும் ஸ்தாபித்தான். பின்பு தன் குருவான மதுரை மல்லிகார்ஜுனன்

என்னும் காலமுக சன்னியாசிக்கு ஒரு பெரிய மடத்தைக் கட்டி அவனை மடாதிபதியாய் ஏற்படுத்தினான். அந்த மடத்தில் 50 சன்னியாசிகள் வசித்தார்கள். அவர்கள் போஷண நிமித்தியமாய் 11 கிராமங்களைத் தானம் செய்தான். இந்த மூவர் கோயிலைத் தமிழ் நாட்டு மூவேந்தர் கட்டினாரென்று ஒரு கதையுண்டு. மேலே சொன்னதை உத்தேசித்து இது பொய்க் கதையாகும்.



திருத்தணி பல்லவர் கோயில்

இந்தப் பூதி விக்கிரமகேசரிக்குத் திருச்சினாப்பள்ளிக் கடுத்த திருப்பாராய்த்துறைக் கோயிலில் இரு கல்வெட்டுகளிலும், திருச்செந்துறைக் கோயில் கல்வெட்டிலும்

தென்னவன் இளங்கோவேள் என்றும், மாறவர்மன் பூதியா ரென்றும் பெயரிட்டிருக்கிறது. அக் கல்வெட்டுகளொன் றில் இவன் மனைவி கற்றளிப் பிராட்டி பெயரும் குறித் திருக்கிறது. இவனுக்குச் செம்பியன் இருக்குவேளென்று மறு பெயருண்டு.

அபராஜிதன் திருத்தணிகையில் வீரட்டானேச்வரன் கோயிலைக் கட்டினான். இதன் வேலை ராஜஸிம்ஹன் கட்டி டங்களிலுள்ளதற்கும் சோழர் கி. பி. 1000-த்துக்குப் பின்பு கட்டின கோயில் வேலைக்கும் நடுத்தரமாயிருக்கும். கோபுரம் இராது: விமானம் வேறு, கோயில் வேறு என்று கிடையாது. விமானத்துக்குள் கர்ப்பக்கிருகமும் அதற்கு முன் மண்டபமும்தான் உண்டு. விமானத்தின் உருவம் கஜப்ருஷ்டாகிருதி. மகாபலிபுரம் ஸஹதேவரதத்துக்கும் அவ்வாறே. கூரத்தில் பரமேச்வரன் கட்டுவித்த கற்றளிக் கும் அவ்வாறே. தூண்களின்மேலுள்ள போதிகை உருண் டது. இது பிற்காலத்துப் பல்லவர் கட்டிடங்கள் எல்லா வற்றிற்கும் தவறாக் குறி. சோழர் கட்டின கோயில்களெல் லாம் போதிகை கோணங்களுள்ளதா யிருக்கும். திருத் தணிகைக் கோயிலின் நான்கு சுவர்களிலும் நான்கு புரை களில் தட்சிணாமூர்த்தி, பிரமன், துர்க்கை, விஷ்ணு இவர் கள் விக்கிரகங்களுண்டு. சோழர்கள் முதலில் கட்டிய கோயில்களிலும் இத்தகைய விக்கிரகங்களுண்டு. இக்கோயி லைக் கட்டினவன் நம்பி அப்பி.

அபராஜித விக்கிரம வர்மன் என்ற இவ்வரசனது கல் வெட்டுகள் அதிகமாக அகப்படவில்லை. இவன் 3-ம் ஆண் டில் திருத்தணிகையிலும் 17-ம் ஆண்டில் மாங்காட்டிலும்

---

கற்றளி — கற்கோயில்.

பிறந்த கல்வெட்டுகள் உண்டு. இவன் 4, 5 ஆண்டுகளில் கொடுத்த சாசனங்கள் இப்போது சத்தியவேடு கிராமத்தில் அகப்பட்டிருக்கின்றன. அவைகளால் சேரநாட்டுத் தலைவனை குமரந்தை என்னும் குறும்பாதித்தன் காடு வெட்டிப் பேரையனும் அவன் மனைவி போற்றி நங்கையும் தானம் செய்தார்கள். இவன் குறும்பருக்கு அரசனா யிருந்த பல்லவ வள்ளல்போலும். குறும்பர் என்போர் பல்லாயிரம் வருஷங்களாய் குறும்பாடு மேய்ப்பவர். குறும்பாடு நெசவுக்கேற்ற மயிருள்ளது. அம் மயிரினைக் குறும்பர் நெய்வார். இவர் தமிழ் நாட்டில் உள்ள முல்லை நிலத்தில் எல்லாம் தொன்று தொட்டு வாழ்ந்துவருகிறவர்கள். சேலம், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு ஜில்லாக்களில் இப்போதும் இவரில் பலர் உளர். இவர் அரசனை குமரந்தைக்குக் காடுவெட்டிப் பேரையன் என்றும் பட்டம் இருக்கிறதால் இவன் பல்லவ குலத்தவனா யிருக்க வேண்டும். இந்தச் சத்தியவேடு சாசனத்தில் 'விடேல் விடுகு' என்ற அளவைக்குறிக்கும் மொழி உண்டு. இதைப் பற்றி தந்திப்போத்தரையன் சரித்திரத்தில் விவரித் திருக்கிறோம்.

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சோழன் ஆதித்தியராஜகேசரி பலம் அதிகரித்தது. சோழ நாடு முழுவதையும் கைக் கொண்ட பின்பு, தொண்டை நாட்டின் மேல் படையெடுத்து அபராஜிதனைத் தோற்கடித்தான். இப் போரில் சேர அரசன் ஸ்தாணுரவி சோழ அரசனுக்கு உதவி புரிந்தான். தொண்டை மண்டலத்தைச் சோழர் கைப்பற்றவே, பல்லவர் ஆட்சி ஒழிந்தது. சோழர் பலம் அதிகரித்துத் தொண்டை நாட்டைப் பற்றினவுடன், பல்லவர்க்குப் பல தலைமுறைகளாய் விரோதிகளான பாண்டியர்

ட்டின் மேல் படையெடுத்து, அதையும் சோழர் கட்டிக் ாண்டார். ஆகையால் பல்லவரும் பாண்டியரும் ஒருவ ன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு போராடினதால், நுவர் பலமும் குறைந்து, இருவரையும் புதிதாய் உதித்த ந்சைச் சோழர் அடக்கித் தென்னுடெல்லாம் தங்கள் சியை நிலைநிறுத்தி விருத்தி செய்தார்.

தொண்டை மண்டலம் சோழர்வசம் வந்தாலும் சில ங்களில் பல்லவ அரசர் ஆட்சி நிகழ்ந்தது. அபராஜி ர மகனுன கோவிஜய கம்பவர்மன் இவ்வாறு ஆண்டவரில் வன். அவன் கல்வெட்டுகள் பல இடங்களில் அகப்பட் க்கின்றன. அதில் ஒன்று காஞ்சிபுரத்தில் வந்தவாசிக் ப் போகும் வழியில் உள்ள (உட்கல் என்கிற) உக்கல் ாமம். அவ் வூருக்குப் பழைய பெயர்கள் சிவசூடாமணி ங்கலம், விக்கிரமாபரண சதுர்வேதிமங்கலம், அபராஜித துர்வேதிமங்கலம். சிவசூடாமணி என்பது இராஜஸிம்ஹன் ருது; ஆகையால் அவ்வூரை அவன் பிராம்மணர்களுக்குத் ானம் செய்தான் போலும். அவனுக்குப் பின் அவ் பூரையே அபராஜிதன் தானம் செய்திருக்க வேண்டும். அவ்வூர் தொண்டை மண்டலத்து காளியூர்க்கோட்டத்து பாகூர் நாட்டில் இருந்தது. அவ்வூரில் புவன மாணிக்க விஷ்ணுகிருகம் என்ற பழைய கோயிலுண்டு. அதில் பின் வரும் கல்வெட்டு இருக்கிறது :— 'ஸ்வஸ்தி ஸ்ரீ கம்பவர் மற்கு யாண்டு பத்தாவது உட்கற்சபையாற்கு சடையன் கொடுத்த நெல் நானூற்றுக்காடி. இந் நெல்லால் பொலி ஊட்டு (அதாவது வட்டி) ஆண்டு வரை நூற்றுக்காடி நெல் பலிசையால் நிசதி இருவர் பிராமணரை நிலமும் ஞாயிறும் உள்ள அளவும் ஊட்டுவோமானோம் உட்கற் சபையோம். இவ்விருந்தூட்டு முட்டில் கங்கை இடைக்குமரியிடை எழு நூற்றுக் காதத்துள்ளும் செய்தான் செய்த பாவம் படுவோ

மாளும் சபையோம்.' மற்ருெரு கல்வெட்டு பின் வரு மாறு :— ஸ்வஸ்தி ஸ்ரீ கம்பவர்மற்கு யாண்டு பதினேந் தாவது உடகற்சபையோம் எழுத்துச்சடையன் பக்கல் ஆயிரக்காடி நெல் கொண்டோம். இவ் வாயிரக்காடி நெல் லாலும் பலிசை (வட்டி) ஐந் நூற்றுக்காடி நெல் ஆட்டாண்டு தோறும் எரிக் கட்டி இருத்துவிப்போமாளும் (?) சபை யோம் இதன்றென் கங்கை இடைக்குமரி இடை செய்தார் செய்த பாவம் படுவாராகப் பணித்தோம். சம்வத்ஸரப் பெருமக்களே அட்டுவிச்சுகடவார்? இந்தச் சாசனத்தால் ஒவ்வொரு கிராமத்தின் தர்மங்களேயும் நடத்த பிரதி சம்வத்ஸரம் பெருமக்களேத் தெரிந் தெடுத்தார் என்று அறியலாம்.

## முடிவு

பல்லவராசாட்சி இறந்தது. அவரில் சிலர் கள்ளர் சாதி யுடன் கலந்தார்கள். சிலர் தெலுங்கருடன் ஒன்ருயினர்கள். சிலர் குறுநில மன்னராஞர். பல்லவ குலத்தின் கிளேயினர் ஒருவர் அமராவதியில் 12, 13, நூற்ருண்டுகளில் ஆண் டார். அவரது கல்வெட்டு ஒன்று அகப்பட்டிருக்கிறது. கடப்பை, பெல்லாரிகளில் இருந்த நுளம்பப்பாடியில் மற் ருேர் கிளேயினர் நுளம்பப் பல்லவர் என்று ஆண்டார். இவரது தலேநகர் கம்பிலி. மறுசிலர் தஞ்சாவூர்ச் சோழர்கள் கீழ் பெரிய வேலேயில் அமர்ந்தார்கள். கி. பி. 1070 முதல் 1117 வரையில் ஆண்ட குலோத்துங்கச் சோழ ராஜாவின் சேனுபதியான கருணுகரத்தொண்டைமான் பல்லவன் **கலங் கத்துப் பரணி** என்னும் நூலுக்கு நாயகன். செங்கற்பட்டு ஜில்லாவில் வண்டை, அல்லது வண்டலூர்ச் சிற்றரசன். தஞ்சாவூர்க்கோயிற் கல்வெட்டில் பராந்தகப் பல்லவராயன் என்ற ஒரு உத்தியோகஸ்தன் பெயருண்டு. பெரிய புராணம் இயற்றின சேக்கிழாருக்கும் உத்தம சோழ பல்லவராயர்

என்று பட்டமுண்டு. பல்லவராயர் பலர் புதுக்கோட்டை நாட்டில் பல இடங்களில் ஆண்டார். பின்பு பல்லவராயர் என்பது சோழ வெள்ளாளரில் ஒரு கோத்திரம் ஆயிற்று. இதே விதமாக தெலுங்கு தேசத்தில் ரெட்டிகளுள் பல்லவாதித்திய குலமொன்றுண்டு. இவரில் சிலர் சிற்றரசராய் ஆண்டார்கள். 17-ம் நூற்றுண்டில் கள்ளருடன் சம்பந்தம் செய்திருந்த ஒரு பல்லவ குலக்கிளையினர் தொண்டைமானென்றும் பல்லவ ராஜா வென்று பட்டத்துடன் புதுக்கோட்டை அரசரானர். இப்போது அரசாட்சியுள்ள பல்லவர் இவரே.

பாரசீக நாட்டிற் கருகிலுள்ள சகத்தீபத்தினின்று 2500 வருஷங்களுக்கு முன் பார்த்தவரென்று பெயர் பூண்டு ஜம்புத்தீபம் வந்து பல்லவர் என்று பெயர் மாறி, க்ஷத்திரியராய் வைதிக தருமத்தைப் பின்தொடர்ந்து இந்தியாவின் பல பகுதிகளில் ஆள ஆரம்பித்தார். காஞ்சிபுரத்தில் 1800 ஆண்டுகளுக்கு முன் ஆளத்தொடங்கி, ஆரிய முறைகளையும் வடமொழிக் கலைகளையும் தமிழகத்தில் பரவச் செய்தார். கோயில்களை முதலில் பாறைகளால் கட்டுவித்தார். அந்தணர்களுக்கு மானியங்கள் கொடுத்து தெலுங்கு நாட்டினின்று குடியேற்றினர். அந்தணர் பெருக, ஆரிய முறைகளும், வருணச்சிரம தருமமும் பெருகின. தமிழ்ச் செய்யுள நடைமாறி ஆரிய நடைகளில் செய்யுள்கள் இயற்றப்பெற்றன. சைவமும் வைஷ்ணவமும் ஓங்கின; மற்றைய சமயங்கள் மழுங்கின. பக்தி நெறியும், வேதாந்த வழியும் பரவின. கற்கோயில், கற்சிற்பம் நாடெல்லாம் நிறைந்தன. ஆகையால் இப்போதிருக்கும் சமய நிலை, செய்யுள் நிலை, மொழி நிலை, மக்கள் நிலை, சிற்ப நிலை, இவையெல்லாம் பல்லவரால் மாறி, வளர்ந்து உயர்ந்தவைகளே.

Printed at the Aurora Press, Madras — 1930.